
**4**

கலை - இலக்கிய முத்திங்கள் இதழ்

பெப்.மார்ச்.ஏப் '94



தமிழ் மொழிக்கும் தேசிய இலக்கியம் என்ற கோட்பாட்டிற்கும் இருக்கும் தொடர்பென்ன? எமது மொழியும் பிறமொழிகள் சிலவற்றைப் போல ஒருநாட்டில் பேசப்படும் மொழியல்ல. பலநூற்றாண்டுகளாக பல இலட்சக்கணக்கான தமிழ்பேசும் மக்கள் தமிழ் நாட்டுக்கு வெளியே இலங்கையில் வசித்து வருகிறார்கள். இத் தமிழர்களுக்கு இலக்கியப் பிரக்ஞை ஏற்பட்டு இலக்கியம் படைக்கப்படும்போது அதில் அவர்கள் வாழும் மண்ணின் வாசனை வீசவே செய்யும். இல்லாவிட்டால் அது யதார்த்தம் என்ற எல்லைக்குள் நிற்காது உருவற்றபிண்டம் ஆகிவிடும். நிலத்தின் தன்மை இலக்கியத்தில் பிரதிபலிப்பது இயற்கையேயானாலும், பிரக்ஞையுடன் அக்கொள்கை பின்பற்றப்பட்டால் தான் குறுகிய காலத்தில் பயனுள்ள சாதனையை நாம் சாதிக்க முடியும் என்பது மறுக்க முடியாததாகும்....

தேசிய இலக்கியம் என்ற நமது இயக்கம் சர்வதேசீயத்துக்கு முரண்பட்ட ஒன்றல்ல. உயிருள்ள இலக்கியத்துக்கு தேசிய, சமுதாயப் பின்னணி அவசியம். இவ்வித பின்னணியில் உருவாகும் தேசிய இலக்கியமே காலத்தையும், கடலையும் தாண்டி சர்வதேசங்களையும் ஈர்க்கும் வல்லமை பெற்றதாகும்.

இன்னொன்றையும் நாம் மறக்க முடியாது. மனிதன் தேசத்துக்குத் தேசம் மாறுபட்ட சூழ்நிலைகளில் வேறுபட்ட தன்மைகளுடன் வளரும் ஒரு பிராணியேயானாலும் அவனது மனப்பண்புகளைப் பொறுத்த வரையில் உலகத்து மனிதரிடையே பொதுத் தன்மைகளும் பல உண்டு.

- அ.ந.கந்தசாமி -

'தேசிய இலக்கியம்' என்ற கட்டுரையிலிருந்து.... 1961 ஒக்.



எம் மண்ணில் விட்டுவந்த விடியல்...

கமெரா கவி : தமயந்தி

*சொட்டுச் சொட்டாய் தேங்கி மடை உடைத்த வெள்ளமென*


*நிறமற்ற உலகம் இயல்பற்றது. ஒவ்வொரு நிறத்திற்கும் குணமுண்டு; அழகுண்டு. இருவேறு நிறங்களின் கலப்பில் புதுநிறம் தோன்றும். நிறங்களும் பெருகும். உயிரினம் பலதும் நிறக்குருடானவை. சிலது மட்டும் அதி மேல் ஊதாவை அறியும். வேறுசில அதி கீழ் சிவப்பை அறியும். நிறப்பிரிப்பும் அளப்பும் மனித உயிரியின் சிறப்பு. மனிதனின் தோலிலும் நிறமுண்டு; வகையுண்டு. வெளுப்பற்றதனைத்தும் கறுப்பென்றானதும் கறுத்தது கீழ், வெளுத்தது மேலென நிற வெறுப்புற்றதும் நிறவெறியானதும் மானுடச் சறுக்கல். நாகரிக வக்கிரம், கொடூரம். வெள்ளையும் கறுப்புமாய் உலகம் பிளவுபட்டது போலவே, கறுப்பு வெள்ளைக்குள் கருத்தினங்கள் அடைபட்ட துயரம். 'நிறக்குருடான சமூகம்' கொலம்பசுடன் தொடங்கிய காலனி ஆதிக்கத்தின் பின்னானது. பாகுபாடற்ற, 'வர்க்கம் களைந்த சமூகம்' மானுடத்தின் நெடுங்காலக் கனவு.*

*வர்க்கம், நிறம் இவற்றின் வெங்கொடுமைக்கு ஈடானது தமிழரின் சாதியம். மாப்பிள்ளை வெள்ளையாய் பெண் நல்ல சிவப்பாய் சாதிக்குள் சாதி என, நிறத்துக்குள் நிறம் பிரிப்பதும் தமிழரின் மரபு. வெள்ளையர் தேசத்தில் தெரியும் இவ் 'வெள்ளை மாப்பிள்ளையினதும்', 'சிவத்த பொம்பிள்ளையினதும்' நிறம். 'புருவ உயர்வில், நெற்றிச் சுருக்கத்தில், விழிச் சிறுப்பில் தொங்கும் நிறம். தள்ளுமே புறம்'. பாவம் நாம். தென்னாபிரிக்காவில் காந்தியும் தான் கறுப்ரானார் முன்னர். வர்க்கம், நிறம், சாதியம் என மானுடரை தீண்டாதாராய் பிரித்துப் பார்க்கும் கோட்பாட்டாளர்க்கு, தீண்டத்தகாதார் மனித முகமாயும் இருத்தல் தான் சிக்கல். கைகளின் பாத்திரம் மாறாத உருவமாய் அவர் மாடாய், கழுதையாய் மாறாரா என்பதே வேண்டுதல். அடக்கவும் ஒடுக்கவும் வசதியாக. இவர்தம் கற்பிதமான கடவுளரும் அப்படியே.*

*இதையெல்லாம் மையமிட்டே எழுகிறது, சுழல்கிறது வரலாறு. மானுடமும் வளர்கின்றது.*
*பாரதியும் சொல்வான்......*



*வெள்ளை நிறத்தொரு பூனை – எங்கள்*
*வீட்டில் வளருது கண்டீர்;*
*பிள்ளைகள் பெற்றதப் பூனை, – அவை*
*பேருக் கொருநிற மாகும்.*
*சாம்பல் நிறமொரு குட்டி – கருஞ்*
*சாந்து நிறமொரு குட்டி,*
*பாம்பு நிறமொரு குட்டி – வெள்ளைப்*
*பாலின் நிறமொரு குட்டி.*
*எந்த நிறமிருந்தாலும் – அவை*
*யாவும் ஒரேதர மன்றோ?*
*இந்த நிறம்சிறி தென்றும் – இஃது*
*ஏற்ற மென்றும் சொல்லலாமோ?*
*வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் – அதில்*
*மானுடர் வேற்றுமை யில்லை;*
*எண்ணங்கள் செய்கைகளெல்லாம் – இங்கு*
*யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.*



◇◇◇◇◇ ◇◇◇◇◇ ◇◇◇◇◇


# மௌனம்

*கலை இலக்கிய இதழ்* **4**

பெப்,மார்ச்,ஏப்ரல் '94
வள்ளுவர் ஆண்டு 2025

**தொகுப்பாளர்:**
*கி.பி.அரவிந்தன்*

**இணை தொகுப்பாளர்:**
*க.முகுந்தன்*

**கணணி பதிவு:**
*பொ.இரவிச்சந்திரன்*

**வடிவமைப்பு:**
*ஆத்மன் & அநாமிகன்*

**வெளியீடு:**
*A.F.T.C.* *சார்பாக பு.விக்னேஸ்வரன்*

*- நண்பர்களுக்கு மட்டும் -*

**துணைவர்கள்:**
*படங்கள் சேகரிப்பு:*
தே.பரணீதரன்
*நிர்வாகம்:*
ந.சுந்தரலிங்கம்



✉ :
**MOUNAM**
*6, Square du Roule*
*92200 NEUILLY S / SEINE*
*FRANCE*

ஜனநாயகமென்றால் தேர்தல்தான் முன்துருத்தும். தேர்தலானால் இணக்கமும் அமைதியும் அவசியம். இலங்கைத்தீவும் ஜனநாயக நாடாகத்தான் அறிவிக்கப்படுகின்றது. தேர்தல்கள் நடைபெறும் - ஆட்சிகள் மாறும் காட்சிகளாக! ஆனால் உட்சாரம் எப்போதும் ஒன்றேதான் - மாறுவதில்லை. அண்மையிலும் சில குட்டித் தேர்தல்கள் இடம்பெற்றன. இணக்கம், அமைதி பற்றி நாற்காலிக்காரருக்கு ஏது கவலை? அவரவர் லாபத்தை பிடுங்கிக் கொள்வதில் இடம்பெற்ற இழுபறி பற்றியே செய்திகள் தெரிவித்தன.

இலங்கைத் தீவெங்கும் தேர்தல் கேலிகூத்து பற்றிய கேள்விகள் சிங்கள - தமிழ்ப் போராளிகளால் எழுப்பப்பட்டது இன்று நேற்றல்ல. உக்கி, உளுத்த தேர்தல்அரங்கில் புதிய தாரகையென முகம் காட்டுகின்றார் திருமதி. சந்திரிகா குமாரரணத்துங்க. முகம்புதியதாதலால் வரவேற்பும், எதிர்பார்ப்பும் கொஞ்சம் அதிகம்தான். 'பெரு விருட்சமதை பற்றிப்படரும் செடிகொடிகள்தான் சிறுபான்மையினர்' எனத் தன் ஆட்சியின் உட்சாரத்தை, பெருந்தேசிய அவாவை, தன் இயல்பை இன்றைய ஆட்சியின் அதிபர் வெட்கமின்றி வெளிப்படுத்த - முன்னர் தம் ஆட்சிகளின் போது அடியெடுத்து கொடுத்தவர்கள் பலர். இவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்களான திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா தம்பதியினரின் இரத்த உரித்தும், வாரிசும் தானே திருமதி சந்திரிகா. இவரது பெற்றோரின் சாதனைகள் தான்: தனிச்சிங்கள சட்ட அமுல்; பண்டா -செல்வா ஒப்பந்த கிழிப்பு; இலங்கைத்தீவை பல்லின, பல்மதத்தேசமாக அங்கீகரிக்க மறுக்கும் பெருந்தேசியவாதத்தை உத்தரவாதப் படுத்தும் அரசியலமைப்பை செயல்படுத்தியமை. அரசியல் யாப்பில் அமைவுபெற்றுவிட்ட பெருந்தேசிய உட்சாரத்தை மாற்ற திருமதி. சந்திரிகா வழிகண்டுள்ளாரா? வெறும் வாய்ச்சொற்களால் மாற்றமடையக் கூடியதா இவ் உட்சாரம்? உட்சாரத்தை மாற்ற முறச்செய்யாமல் இலங்கைத்தீவின் பிரச்சனையை எப்படிக் களைவார் சந்திரிகா?

சந்திரிகாவுக்கு வேண்டியதெல்லாம் ஆட்சிமாற்றமும்; அதிகார அனுபவிப்பும் தான். ஆனால்......
தமிழ்பேசும் மக்களின் தேவை : தம் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதப்படுத்தும் நியாயமான வாழ்வு!

◇◇◇◇◇ ◇◇◇◇◇ ◇◇◇◇◇

ஒரு சமூகம் முதல்தடவையாக வாக்களித்துள்ளது. அம்மக்களின் தலைவர் தனது 75வது வயதில் தம உரிமையைப் பயன்படுத்தினார். தன் வாக்குரிமையை பயன்படுத்திய உலகப்புகழ் வாய்ந்த அம் மனிதன நெல்சன் மண்டேலா. நிறவெறியை, தீண்டாமையை சட்டஅமைப்பிலும், ஆட்சியிலும் கொண்டிருந்த தென்னாபிரிக்கா 'வெள்ளையர்' பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. நெடிய போராட்டத்தையும், தியாகங்களையும் மேற்கொண்டதன் பலனான மகிழ்ச்சியில் திளைக்கின்றனர் தென்னாபிரிக்க மண்ணின் மைந்தர்களான கறுப்பின மக்கள். அப்போராட்டத்தில் கால்நூற்றாண்டுகாலம் சிறையில் அடைபட்டிருந்தார் மக்களின் தலைவர் நெல்சன் மண்டேலா. 85 ம் ஆண்டில் 'சில நிபந்தனைகளின் பேரில் விடுதலையாகலா என வெள்ளையர் ஆட்சி அறிவித்தபோது அவர் கூறினார்:

'எனக்கேயான அடிப்படை உரிமைகளை நான் விற்க மாட்டேன். எந்தக் கட்டுப்பாடுகளும், நிர்ப்பந்தங்களுட இல்லா சுதந்திர மனிதனாலேயே உடன்படிக்கை, பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமுடியும். நான் சுதந்திரமனிதனாகவே திரும்பி வருவேன்....'

அப்படியே திரும்பி வந்தார். இன்று தென்னாபிரிக்காவின் அதிபராக தன் 75 வது வயதில் பொறுப்பேற்கிறார்.

"பெறுமதி மிக்க மனிதப் பெறுபேறுகள் என்றென்றுக்கும் பிரகாசிக்கும்".

☼

துன்பத்தின் விந்துவைக் குழந்தையாக மாற்றினான் தாஸ்தாயெவ்ஸ்கி. அவனுக்குக் கிடைத்தவை குரூரம், கொடிய தண்டனைகள், வறுமை, புறக்கணிப்பு, துன்பங்கள். அவன் உலகத்திற்குத் தந்தது கலையின் சிகரம். துன்பம் பரவசமாக மாறி சந்திக்கும் இதயங்கள் அனைத்தையும் பரவசத்தில் ஆழ்த்துகிறது. சகல துன்பங்களையும் தன்னுடையதாகப் பார்ப்பது, தனது துன்பங்களைத் தன்னுடையவையாக அல்லாமற் பார்ப்பது– இவ்வளவுதான் விஷயம். சகல மேன்மைகளும் இதிலிருந்துதான் கொப்பளிக்கின்றன.

– ஜே.ஜே.சில குறிப்புக்கள் : சுந்தரராமசாமி –

# நல்ல பத்திரிகை

இதனால் சகலமான ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் - என்று பறையறிவிக்கும் வழக்கம் எந்தநாட்டில் எப்போது ஏற்பட்டதோ, எனக்குத் தெரியாது. சரித்திர நிபுணர்களைக் கேட்டால், தெரியலாம். ஆனால், நம்நாட்டில் இது வெகுகாலமாய் இருந்து வருவதாகவே தோன்றுகிறது. சின்ன வயசில் பாட்டி சொன்ன பலகதைகளில் இந்த தமுக்குக்காரன் வருவான். இந்தப் பறையறைவிக்கும் வழக்கம் என்றைக்குத் தோன்றியதோ அன்றைக்கே பத்திரிக்கைத் தொழிலுக்கு ஒருவித அஸ்திவாரம் போட்டாயிற்று என்று சொல்லலாம்.

அச்சு, தபால், தந்தி, ரெயில், விமானம், போட்டோ பிளாக் செய்தல், கல்வி, அரசியல் சூழ்நிலை எல்லாம் சேர்ந்து, பத்திரிகைத் தொழிலை இன்று வெகுதூரம் வளர்ந்திருக்கின்றன. வளர்த்தனவோ அமுக்கினவோ; வெகுதூரம் வீங்கச் செய்துவிட்டன. பலவிதமான பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. பலதரமான நிலைகளில் நடக்கின்றன. இப்படிப்பட்ட எண்ணற்ற வகையான பத்திரிகைகளில் எது நல்லது எதுகெட்டது என்று எப்படிச் சொல்ல முடியும். விஞ்ஞானத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில்கூட, சாதாரண மக்களுக்கெல்லாம் புரியக்கூடிய அம்சங்களை மட்டுமே விவரித்து விஞ்ஞானப் புதுமைகளை சொல்லும் அழகான பத்திரிகைகள் முதல், நிபுணர்களுக்கே புரியும் நுட்பமான சிக்கலான செய்திகளைத் தாங்கிய திட்டமான பத்திரிகைகள் வரையில் பலபடியில் பலரகங்கள் இருக்கின்றன. இன்று இவை தமிழில் இல்லைத்தான் என்றாலும் பொதுவாக உள்ள நிலைமையைச் சொல்லுகின்றேன்.

பத்திரிகைத் தொழில்முறையிலும் நிலையிலுமோ, பிரமாதமான பிரம்மாண்டமான மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. ஒருபுறம், குடிசைத்தொழில் மாதிரி பல பத்திரிகைகள் நடக்கின்றன. குடிசைத்தொழில் ரகப்பத்திரிகைகளில் அசோகா பாக்கையும், நஞ்சன்கூடு பல்பொடியையும் போல் பேரளவில் வளர்ந்து விட்டவை உண்டு. பெருந்தொழிலாய்த் தொடங்கி நடக்கும் பத்திரிகைகள் உள்ளுக்குள்ளே உளுத்துப் போய் ஆட்டம் எடுத்தவை உண்டு.

பத்திரிகை நடத்தக்காகிதம் வேண்டும் என்பது மற்றவர்கள் கருத்து காகிதம் விற்கப் பத்திரிகை வேண்டும் என்பது ஒரு சிலரின் கருத்து. வெள்ளைக்காகிதமாக நியூஸ் பிரிண்டை, ஆயிரமாயிரம் டன் விகிதம் நாள் தோறும் தொடர்ச்சியாக விற்கமுடியாது. அந்தக் காகிதத்தை வாங்கி அதிலே கொஞ்சம் மசியைத்தடவிக் கறுப்பாக்கி, ஊருக்குள்ளே, நாட்டுக்குள்ளே நாலு திசையிலும் விட்டால்- ஜனங்கள் உனக்கு எனக்கு என்று அள்ளிக்கொண்டு போகிறார்கள். இந்த வியாபாரத்தை நாள் தவறாமல், முடிந்தால் காலையிலும், மாலையிலும், ஒரே சீராக தொடர்ச்சியாக ஏறி இறங்காதபடி- நிர்ப்பயமாக - நிச்சயமாக நடத்தலாம். அசுர அச்சுக்கூடமும், எழுத்துக் கூலிகளான ஆசிரியர்களும் இதற்குத் தேவையான அவசியத் தீமைகள். இவ்வளவுதான் விஷயம் மிகப் பெரும் பத்திரிகைகளின் இன்றைய நிலை - மர்மம் இதுவே.

பெரிய பத்திரிகைகளை நடத்தும் தொழில் இப்போது ஓர் இண்டஸ்டரி ஆகிவிட்டது. அதை நடத்த லட்சம் லட்சம் முதலும் போடுகின்றார்கள்.

நம்நாட்டில் 30 வருஷங்களுக்கு முன் பத்திரிகைத் தொழில் நிலை இப்படி இல்லை. அன்றைய சூழ்நிலையே வேறாகியிருந்தது. என் கடன் பணி செய்து கிடப்பதே என்று திரு.வி.க. தமது பத்திரிகைத் தலைப்பில் (தேசபக்தனிலோ, நவசக்தியிலோ) குறிக்கோள் பொறித்தாரே என்றால், பணிசெய்ய உண்மையிலேயே தமது வாழ்வை அர்ப்பணம் செய்தார். அவர் என்ன? சுதேசமித்திரன், இந்தியா, ஸ்வராஜ்யா, தேசபக்தன், நியூ இந்தியா, லோகோபகாரி, ஊழியன், குமரன், சுதந்திரச்சங்கு, காந்தி, மணிக்கொடி, சக்தி - இப்படி எண்ணற்ற பத்திரிகைகளை ஆரம்பித்தவர்களும் பணி செய்வதையே தன் நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். இன்று மிகப்பெரிய பத்திரிகைகள் பணி, துணி, மணி, கிணி என்றெல்லாம் பேசுவதைப் போன்ற அபத்தம்- அல்லது ஏமாற்றமோ வேறில்லை. முப்பது வருடங்களுக்கு முன்னே காந்தியின் யங் இந்தியா, அதற்குப்பின் ஹரிஜன், லாலாலஜபதியின் பீப்பிள், திலகரின் கேஸரி, ராமனந்த சட்டர்ஜியின் மாடர்ன் ரெவ்யு, பெஸண்டின் நியூ இந்தியா, நடராஜனின் ஸோஷல் ரிஃபார்மர் - போன்ற பத்திரிகைகள் சேவையே குறிக்கோளாக அன்று தொடங்கி நடந்தன. எண்ணற்ற வேறு பத்திரிகைகளுக்கு இவையே ஆதர்ச மாதிரிகளாகவும் விளங்கின. இன்று பத்திரிகை உலகம் அப்படி இல்லை.

ஆனால் குடிசைத் தொழில் மாதிரி சிலபத்திரிகைகள் நடப்பதாகச் சொன்னேன் இல்லையா? அவை இதற்கு விலக்காகும். என்றாலும் அவற்றை நடத்த வரும் சிலர் தப்பான அபிப்பிராயத்தை மனதில் கொண்டு பத்திரிகையைத் தொடங்கிவிடுகின்றார்கள். இதனாலேயே அவை வாழமுடியாமல் தத்தளிக்கின்றன. பெரும் செலவில் தயாராகும் பெரிய பத்திரிகைகளைத் தங்களுக்கு மாதிரியாகக் கொண்டு அவற்றில் வருவதைப் போன்ற அம்சத்தையெல்லாம் தங்கள் பத்திரிகையிலும் போட்டால்தான் விற்கமுடியும் என்று எண்ணி விடுகின்றார்கள். எழுத்துப் பலமும், தெளிவான அச்சுமே தங்கள் உயிர்நாடி என்று கொள்வதைவிட்டு, இப்படி அவர்கள் நினைப்பதே அவர்கள் செய்யும் அடிப்படைத் தவறு. இதனால்தான் தத்தளிப்பும் தவிப்பும் ஏற்படுகின்றன.

எது நல்ல பத்திரிகை?

பணம் சம்பாதிப்பதிலா? பிரதி விற்பதிலா? செல்வாக்கிலா? யாரிடம் எத்தகைய செல்வாக்கில்? யாருக்கு? சமூகத்தில் என்ன பயன் விளைவிப்பதில்? எந்த நோக்கில்? எது நல்ல பத்திரிகை என்ற கேள்வியைக் கேட்கிறோமோ - அந்த நோக்கைக் கொண்டே பதில் அளிக்க முடியும்.

என்னைக் கேட்டால் எது எழுத்தாளர்களின் அபிப்பிராய உரிமை காப்பாற்றுகிறதோ, எது எழுத்துக் கலையைத் திட்டமிட்டு வளர்க்கிறதோ, மக்களிடம் அறிவைப் பரப்புகிறதோ, பண்பாட்டை உயர்த்துகிறதோ, தூயமுறையில் உற்சாகம் கொடுக்கிறதோ, என்ன நல்லது செய்யாவிட்டாலும், சமூகத்திற்குக் கேடு செய்யாதிருக்கிறதோ, அதுவே நல்ல பத்திரிகை. குடிசைத் தொழில் ரீதியான பத்திரிகையே நல்ல பத்திரிகை யாக இருக்க முடியும்.

(1958 ஜனவரி - சரஸ்வதி - நான்காவது ஆண்டுமலரில் இடம்பெற்ற ஆக்கம்)

## அகத்தில் : ● ○ மௌனம்-4


| | |
|---|---|
| *சிறப்புக்கட்டுரை : ஒரு சமூகப்பழி* | 5 |
| *சிறுகதை : தொலைந்துபோன நாட்கள்* | 12 |
| *செவிவழிக்கதை : பாண்டித்தியம்* | 37 |
| *நல்லபத்திரிகை* | 3 |
| *கறுப்புக்கவிஞன்* | 16 |
| *கவிமஞ்சரி* | 20 |
| *தூவானம்* | 22 |
| *எழுந்துவரும் நவலிபரலிச அலைகள்* | 24 |
| *ஜாக் பிரேவேர்* | 26 |
| *மௌனத்தின் நாட்குறிப்பிலிருந்து...* | 27 |
| *தனக்கு சொந்தமில்லாத வீடு* | 31 |
| *பெண்ணிலைச்சிந்தனைகள்* | 36 |
| *இலக்கிய அனுபவம்* | 38 |
| *வெளியீட்டாளர் குறிப்பு* | 41 |
| *கு.அழகிரிசாமி* | 42 |
| *மௌன உடைவுகள்* | 45 |
| *கவிதைகள் : கி.பி.அரவிந்தன்* | 35 |
| *பொ.கருணாகரமூர்த்தி* | 35 |
| *வ.ஐ.ச.ஜெயபாலன்* | 39 |
| *மணி* | 40 |


நன்றி : இடம் பெற்றுள்ள படங்கள்.



ஒரு தற்காலிக குந்தல் - படம் தமயந்தி

'தனி நபர்களை எந்த அளவுக்கு வெறுக்கின்றேனோ அந்த அளவுக்கு சமுதாயத்தை நேசிக்கின்றேன்'.
– கரமசோவ் சகோதரர்கள் –

# நெஞ்சை உருக்கும் வேண்டுகோளுக்கு மத்தியில் இயந்திரமாய் பயணிக்கும் வாழ்வோட்டம்-

ஒரு சமூகப்பழி

பெரியோர்களே, தாய்மார்களே!

நான் வேலையை இழந்து நீண்டகாலமாக புதிய வேலை கிடைக்காதநிலையில் அரசின் சமூக உதவித்தொகைகளுமின்றி அவலநிலையிலிருப்பவன். என் பசிக்கு உணவில்லை; என் நோய்க்கு மருந்தில்லை; என் வாழ்வுக்குக் கூரையில்லை.

இந்நிலையில், கௌரவமாக வாழ்வைத் தொடர விழையும் நான், 'மக்கடம் ஜோணால்' (Macadam- Journal) என்ற இவ்விதழைத்தந்து என்வாழ்வுக்கு உதவும்படி உங்களிடம் மண்டியிடுகின்றேன். என்னைப்போன்ற பல்லாயிரக்கணக்கானவரின் வாழ்விற்கு கைகொடுப்பதற்காகவே இவ்விதழ் வெளியிடப்படுகின்றது. இவ்விதழைப்பெறும் நீங்கள் கொடுக்கும் தொகையில் 60% எங்களுக்குக் கிடைக்கிறது. அதுமட்டுமல்ல கனவான்களாகிய நீங்கள் இவ்விதழூடாக எம்மைப்போன்றவர்களின் வாழ்வுப் பிரச்சனைகளையும் அறியமுடியும். தயை கூர்ந்து வாழ்வுத் தாகத்தில் தவிக்கும் எங்களுக்கு ஒரு 'மிடர்' தண்ணீர் போல் உங்கள் உதவியை வழங்குங்கள். நன்றிகள் பல.. பல...

இந்த உருக்கமான வேண்டுகோளை நாம் பாரிசிலோ, பிரான்சின் முக்கிய நகரங்களிலோ பயணம் செய்யும் போது கேட்டிருக்கலாம். வீதியோரங்கள், முக்கிய வியாபார மையத்திடல்களில் மௌனமாக உதவிகோரி நிற்கும் பலரையும் பார்த்துமிருக்கலாம். இவற்றை விட்ட உரத்து குரல் கொடுக்கும் நபர்களின் தோற்றங்கள், பேச்சொலியின் 'தொனி' கூட அனுதாபத்துடன் நோக்க வைத்திருக்கலாம். இன்னும் சிலவேளை இவற்றைக் கண்டு நெற்றி சுருங்க ஒதுங்கியுமிருக்கலாம்.

ஆனால் இன்றைய நவீன யுகத்தின் உச்சத்தை நுகர்ந்து கொண்டிருக்கும் பிரான்சு மண்ணில் நிஜங்கள் எம்முன் நிர்வாணமாக நிற்பதை புறந்தள்ளிவிட முடியுமா?

உண்மைகள் எப்போதும் கசப்பானவை ஆயினும் சாசுவாசமானவை. முதலாம் உலகநாடுகளென்று முரசு கொட்டிடும்; பூமியில் பொன்னொளி பிரகாசிக்கும் தனித்துவத்தை பறைசாற்றிடும் நாடுகளில் ஒருவேளை உணவுக்காக அலையும் அடிப்படை மக்கள் பற்றிய பிரச்சனை முக்கியமானது. 20ம் நூற்றாண்டுகளின் கடைசியில் உலகவரைபடத்தில் பல்வேறு நாடுகள் அறிவிக்கப்பட்ட மேற்குலக நாடுகளாக இருந்து தற்போது 'ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு' (E.C.C) நாடுகளாகப் பிரகடனப்படுத்தி விரிவடைந்துவரும் நாடுகளில், மக்களுக்கு அரசினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட 'சமூக அடிப்படை உரிமைகள்' கொஞ்சம் கொஞ்சமாக காற்றில் பறக்கவிடப்பட்டு வருகின்றன. இங்கே அண்மைக்காலமாக பெருகிவரும் ஏழைகளின் பிரச்சனைகள் பற்றி மனித உரிமைவாதிகளால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

கிட்டத்தட்ட 53 மில்லியன் ஏழைகளின் ஏக்கப்பார்வையையும், பெருமூச்சுக்களையும் தாங்கியவாறு 1994 ஆண்டில் ஐ.பொ.கூ. (E.C.C) தன் பயணத்தை தொடர்கிறது. பிரான்சில் வெளிவரும் பல்வேறு பத்திரிகைகளில் பொதுவான மனித உரிமைவாதிகள், சமூக ஆய்வாளர்கள், பத்திரிகையாளர்களால் சுட்டப்பட்ட கருத்துக்கள் சிலவற்றை தொகுத்துள்ளோம்.


இது ஐரோப்பா பற்றிய புரிதலில் உட்செலுத்தும் பார்வையாக ஒரு மூன்றாவது பரிமாணமாக அமையும். இதுவரை ஐரோப்பா பற்றிய புரிதலில் ஒரு தளப்பார்வையாக (இரு. பரிமாணம்) மட்டும் கொண்டிருக்கும் எம்மவர்களுக்கு சற்று வித்தியாசமாய், ஆச்சரியமாய் இது அமையக்கூடும். எம் இம்முயற்சி ஓர் ஆரம்பம் மட்டுமே.

ஐ.பொ.கூ. (E.C.C) நாடுகளில் அதிகரித்துவரும் வேலையில்லாப்பிரச்சனைகளாலும், வேலை இழப்புப்பிரச்சனைகளாலும் ஏற்படும் நடுக்கம் கொஞ்சம் அதிகமானது. கொதிப்புறாமல் கொஞ்சமேனும் தணியவைக்க பல்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன. முதலில் பெல்ஜியத்திலிருந்து கிழமையில் 'மக்கடம் ஜோர்ணோல்' (Macadam Journal) ஏழைகளுக்காக அவர்களின் செய்திகளைத் தாங்கியவாறு வெளிவந்தது. தற்போது பிரான்சிலும் வெளிவருகின்றது. இன்று இதனுடன் லா றூய் (La Rue) - தெரு-, லு றேவேபேர் (Le Reverbere) -வெளிச்சம் கொடுப்பவர்- போன்ற பலவும் வெளிவருகின்றன.

வெளிநாடு தொடர்பாக தம் கனவுலகக்கற்பனைகளில் மிதக்கும் எம்மவரின் முன் 'ஐரோப்பிய ஏழைகள் பற்றிய பதிவுகள் எவ்வித கருத்தினங்களைக் கொடுக்கும்?' கேள்வி எம்மது. 'வாழத்தெரியாதவர்கள், ஏமாளிகள், இவன் குடிக்கத்தான் காசு கேட்கிறான்கள், சோம்பேறிகள்' பதில் பலரின் உள்மனத்தின் எண்ணங்களை உறுத்தும். மொழியறிவு கிடைத்ததும் அனைத்து அறிவும் பெற்றுவிட்டோம் எனப் பெருமிதம் கொள்பவர்கள் பலர். தேடல்- அறிவு எம்முன் நடமாடும் உயிருள்ள ஜீவன்களின் வாழ்வில் முகிழ்ந்து நிர்வாணமாக காட்சி தருகிறது.

வரன் & அநாமிகன்

# ஒரு சமூகப்பழி









- இக்னாசியோ ராமோனே
(Ignacio Ramonet)

* சுதந்திரம் * சமத்துவம் * சகோதரத்துவம் என்று பொறித்த இலட்சியங்களை பிரான்சின் அரசியல்யாப்பு கொண்டது. ஆனால் இன்றைய சூழலில் இவை ஏற்பு டையனவா?

உலகளாவிய ரீதியில் 'அதீத சுதந்திரத்துவம்' (Ultra-Liberalisme) என்று காட்டாறாக அள்ளுண்டு போகும் புதிய பொருளாதாரக் கொள்கை சமூக அமைப்புகளுக் கிடையே புதிய நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது. சுயநலமும், தற்பாதுகாப்பின்மை தொடர்பான ஐயமும் மேலோங்க மக்களுக்கிடையிலான இயல்பான ஐக்கிய உறவு விரிசலடைந்து வருகின்றது. அரசினால் உத்தர வாதமளிக்கப்பட்ட 'அத்தியாவசிய சமூகத்தேவைகளை வழங்கல்' திட்டம் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது. உலகச் சமூகங்களில் தாம் மாறுபட்டு உயர்ந்து நிற்பதாக மார்தட்டிக் கொள்ளும் ஐரோப்பிய சூழலில் மனிதப் பண்புகள் பெருமிதப்படத்தக்கனவாக உள்ளனவா? - இன்றைய காலகட்டத்தில் உரத்துக்கேட்க வேண்டிய கேள்வி இது!

ஐரோப்பிய சமூக அமைப்பில் மேட்டுக்குடியினரும், புதிய பணக்காரரும், அரச செல்வாக்குடையோரும், புகழ்பெற்ற கலைஞர்களும் கொண்ட மேல்தட்டு வகுப் பினர் தம்மைச்சுற்றி பாதுகாப்பு வலயத்தைப் பதிக்கின் றனர். பொருளாதாரப் பதுக்கல், பாதுகாப்பான பகுதிக ளில் குடியேறல் என அவர்கள் அந்நியமாகிக் கொள்வ தால் சிறு தொழில்வாய்ப்புகள் அற்றுப்போகின்றன. இங்குள்ள முதலீட்டாளர்கள் மலினமான உழைப்பைத் தேடி (நிலவாடகை, மனிதஉழைப்பு) தென் அமெரிக்கா, ஆசியா (வியட்நாம், கம்பூச்சியா...) போன்ற பகுதிகளில் கொள்ளை லாபம்பெற நகர்ந்து கொள்கின்றார்கள். இந்த நாடுகள் எதிர்கால உற்பத்திப்பொருட்களைக் குவிக்கும் கேந்திரங்களாகத் தெரிவாகியுள்ளன. மேலும் விஞ்ஞானத்தின் அதிஉன்னதமான வளர்ச்சியில் உரு வான றொபோ (Robot)வின் வருகை தனிமனித மூல தனக்காரர்களுக்கு வரப்பிரசாதமாகிவிட, இரத்தமும், சதையும் கொண்ட மனிதஉழைப்பாளிகள் நடுத்தெரு விற்கு விரட்டப்படுகின்றனர். இந்தப் பிரச்சனைகள் அரசுகளால் எதிர்பார்த்த நிகழ்வுகளாகவிருந்த போதி லும், தம் இயலாமையை வெளிப்படுத்தியவாறு தம் கைகளைப்பிசைந்து கொண்டு தவிக்கின்றன. ஐரோப் பாவில் வேலைபெறுதல் என்பது பகல்கனவாகி கருகிக் கொண்டிருக்கின்றது. டார்வினின் மனிதப்பரிணாம வளர்ச்சித் தத்துவத்தை புறந்தள்ளி எக்காளமிடுவதாக 'றொபோக்கள்' உலகம் பறைசாற்றுகின்றது.

பிரான்சில்,

(1) வீடற்ற நிலை (Sans Abri)


(2) பெருகிவரும் புறநகர்ச்சேரிகள் (Des Banlieues Ghettos)

* "500 ற்கும் மேற்பட்ட குறிச்சிகள் (Quartier) வெடித் துச்சிதறும் நிலையிலுள்ளது"- என்று கூறுகின்றார் பாரீசை அடுத்துள்ள புறநகர்த் தொகுதியான Saint-Denis இன் பாராளுமன்ற உறுப்பினர் எறிக் றாயூற் (Eric Raoult).

(3) நீண்டகாலமாக வேலை எதிர்பார்த்திருக்கும் A.N.P.E (!) மக்களின் எண்ணிக்கை 1.3 மில்லியன்.

---

*(!) A.N.P.E - வேலை தெரிவுசெய்து கொடுக்கும் முகவர்நிலையம். (Agent National Pour les Emplois)*



தொடரும் பிரச்சனைகளால் 60% மான பிரஞ்சு மக்கள் நெருக்கடிக்குள்ளாவார்கள் என்றும் 57% மான தொழிலாளர்கள் எதிர்கால உத்தரவாதம் கோரி தெருவில் இறங்குவார்கள் எனவும் L'Envenement du Jeudi கூறுகின்றது.

ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டமைப்பு (E.C.C) நாடுகளில் மட்டும் 53 மில்லியன் ஏழைகள் இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை இந்நிலை தொடரும் பட்சத்தில் 94 ம் ஆண்டு இறுதியில் மேலும் 19 மில்லியன் தொழிலாளர்கள் வேலையை இழப்பர் எனவும் மதிப்பிடப்படுகின்றது.


சமூகவியலாளர் அலன் தூரேய்ன் (Alain Touraine) கூறுகின்றார், << பிரான்சில் மக்கள் வேலையை இழப்பதனால் தம் சமுதாய அந்தஸ்தை இழக்கின்றனர்- எனவே, வேலை இழக்கும் ஒவ்வொருவரும் வறுமைக் கோட்டிற்குக்கீழே தள்ளப்படுகின்றார்கள் >>

1945-1975 காலகட்டத்தில் கண்ட மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சியில் அடைந்த இலாப மூலதனமானது 93-94 இல் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேட்டை ஈடு செய்வதற்கு அதாவது R.m.i, Chomage, Securite-Social போன்ற சமூக அத்தியாவசிய உத்தரவாதங்களுக்குப் பயன்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. 94ம் ஆண்டு இறுதியின் பின்பும் இதைத்தொடர்வது கடினமெனக்கருதப்படுகின்றது.

இன்று ஐ.பொ.கூட்டமைப்பு (E.C.C) நாடுகள் அனைத்துமே பொருளாதாரப் பாதிப்பிலிருந்து தப்பவில்லை.

| நாடுகள் | வேலையற்றிருப்போர் விகிதாசாரம் |
|---|---|
| பிரான்சு | 1/4 |
| அமெரிக்கா | 1/10 |
| ஜேர்மனி | 1/12 |
| இங்கிலாந்து | 1/12 |
| ஜப்பான் | 1/25 |

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சியும், நவீன இராணுவ உற்பத்தி பெருக்கமும் - விற்பனையும் இங்குள்ள அரசுகளின் மூலதனங்களைப் பெருக்கின. இதன்மூலம் 1975 வரை இங்கு வேலைவாய்ப்புகள், மற்றும் சமூகத்தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. வேலையிழந்தவர்களுக்கு CHOMAGE வழங்கப்பட்டது. ஆனால் பெருகிப் பெருகிவரும் வேலை இழப்புகளால், இவ்வுதவியைத் தொடர்வதில் அரசு பின்வாங்குகின்றது.



- அபே பியர் (Abbe Pierre)

கிறீஸ்தவ ஜனநாயகக்கட்சியின் சார்பாக நாடாளுமன்றம் சென்ற L'ABBE Pierre என்றழைக்கப்படும் மதகுரு (இவரின் பெயர் Henri Groues) 1954 பெப்ரவரி 1ம் நாளன்று ரேடியோ லுக்சம்போர்க்கினூடாக மக்களுக்கு வழங்கிய உரை:

என் நண்பர்களே, உதவுங்கள்!

இன்று இரவு 3 மணி அளவில் Boulevard Sebast-opol தெருவோரத்தில் ஒரு பெண் குளிரின் கொடுமை தாங்க முடியாமல் உறைந்து உயிரிழந்துள்ளாள். இறந்துபோன அவளின் கையில், அவள் வசித்த வீட்டிலிருந்து வெளியேறப்பணித்த (Expulser) அரச ஆணை இருந்தது.

ஒவ்வொரு இரவும் 2000 பேர்வரையில் படுகுளிரில் கூனிக்குறுகிப் படுப்பதற்கு இடமின்றியும், உண்ண உணவின்றியும் உடுக்க உடையின்றியும் அவதிப்படுகின்றார்கள். இக்கொடுமைகளிலிருந்து பாதுகாப்புக் கொடுக்க நகரத்திலுள்ள உறைவிடம் நல்கும் நிலையங்களில் போதுமான இடவசதியில்லை.

நான் சொல்வதை பொறுமையாகக் கேளுங்கள்- இன்று இரண்டு மத்திய உறைவிடம் நல்கும் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. (1) Rue de la Montagne - Saint (2) Courbevois. இங்கும் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. எனவே, பாரீசின் எல்லாப்பகுதிகளிலும், பிரான்சின் ஏனைய நிர்வாக பிரதேசங்களிலும் (Departement) வதிவோர்- உங்கள் வீட்டுக்கதவின் மின்வெளிச்சத்தின் மத்தியில் ஓர் அழைப்பு மட்டையைத் தொங்கவிடுங்கள்- ஒரு போர்வை, படுப்பதற்கு இடம், உணவு (Soupe) இவற்றையும் தயாராக வைத்துக்கொள்ளுங்கள்.

*" துன்பத்தால் துவண்டுபோயுள்ள நீ யாராகயிருப்பினும்*
*உள்ளே வா*
*தூங்கு, உண்ணு, எதிர்காலம் உண்டு என்று நம்பு*
*இங்கு, நாங்கள் உன்னை நேசிக்கின்றோம்."*

என தொங்கவிடப்படும் அட்டையில் குறிப்பிடுவீராக....

---

சுமார் 40 வருடங்களின் பின் 01/02/94 அன்று 13.00 மணியளவில் R.T.L (Radio Television Luxembourg) மறுஒலிபரப்பு செய்திருக்கின்றது. L'ABBE Pierre புதிய வேண்டுகோளாக- பிரான்சின் எல்லா நகரசபை மேயர்களையும் ஏழைகளுக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டார்-

நன்றி: Le Point

ஐரோப்பாவில் 1930களில் பெரும் வறுமை தலைவிரித்தாடியதென்பது இங்கு நினைவு கூரத்தக்கது. இதன் கோரங்களை ஜேர்மனியிலும் ஏனைய நாடுகளினதும் வரலாற்றுப்பக்கங்களில் காணலாம். ஆனால் 2ம் உலகப் போரின் பின்பு 1975 வரை பொருளாதார மறுமலர்ச்சி சுபீட்சநிலைபற்றி பறைசாற்றப்பட்டாலும் மக்களிடமிருந்து 'வறுமை அச்சம்' விட்டுப்போகவில்லை.

இன்று பிரான்சின் பெருவாரியான நகரங்களில் ஏழைகள் தெருவோரங்களில் தூங்குவதையும், பிச்சையெடுப்பதையும் வெளிப்படையாகக் காணமுடிகின்றது. நிரந்தர முகவரியற்றவர்கள் பிரான்சில் 1 இலட்சமாகவும், இங்கிலாந்தில் 20 இலட்சமாகவும் காணப்படுகின்றனர்.

20ம் நூற்றாண்டின் இறுதியில் இவ்வகையான ஏழைகள் 'CLOCHARDS' (**) என்று நகைப்புக்குரியவராக ஒதுக்கப்படுகின்றனர். அரசநிர்வாக இயந்திரத்தால் கைவிடப்பட்டநிலையில் சமூக அந்தஸ்தை இழந்து முகமிழந்த மனிதராக வீதிக்குவந்துள்ள இவர்கள் பற்றிய மனிதாபிமான கருத்தென்ன? இந்நூற்றாண்டு பறைசாற்றும் 'மனிதகுல நாகரீக வளர்ச்சி' யென்பதுதான் ஏது?

மில்லியன்களாகப் பெருகிவரும் கைவிடப்பட்ட ஏழைகள் ஒரு புதிய சமூகப்பிரிவாகிறது. இவர்கள் தம் வாழ்வியல் தேவைகளுக்காக குற்றவியல் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். கடந்த 25 வருடங்களில் பிரான்சில் கொலைச்சம்பவங்கள் 4 மடங்காகப் பெருகியுள்ளன. ஆயுதமுனையில் களவு வன்முறைகள் 10 மடங்காகப் பெருகியுள்ளன. 'இத்தகைய செயல்களை இங்கு வாழும் வெளிநாட்டவர் தான் செய்கின்றார்கள்' என அரசியல்வாதிகள் தம் தேர்தல் இலாபம் கருதி பிரச்சாரம் செய்கின்றார்கள். 'இங்கு வேலை வாய்ப்பின்மைக்குக் காரணமே இங்குள்ள வெளிநாட்டவர்தான்' என்ற இவர்களின் பேச்சுக்களை நம்பிக்கொண்டு வெளிநாட்டவருக்கெதிராக மக்கள் போர்க்குரல் எழுப்புகின்றார்கள்.(*) இதனைப்பயன்படுத்தி ஜனநாயகத்தின் பாதுகாவலர்- என மகுடம் சூடிக்கொள்ளும் இந்த முதலாம் உலகநாடுகள் உள்நாட்டுப்பாதுகாப்பை மிகஅதிகமாக பலப்படுத்தி வருகின்றன. இது வெளிநாட்டவரை அச்சுறுத்தும் வகையில் விரிவடைகின்றது. ஐ. பொ. கூ. நாடுகள் Schengen இல் ஒன்றுகூடியபோது (1990) ஐரோப்பிய வாசிகளுக்கு (வெள்ளையர்) சுதந்திரப் போக்குவரத்து அனுமதி வழங்கிய திட்டத்தில், இங்குவதியும் வெளிநாட்டவருக்கு இந்த அனுமதி மறுக்கப்பட்டது.

| | |
|---|---|
| உலக அகதிகள் | 19 மில்லியன் |
| ECC மக்கள் | 340 மில்லியன் |
| ECC யில் அகதிகள் (விசா இல்லாதவர்கள் உட்பட) | 11,2 மில்லியன் |
| ECC யில் ஏழைகள் | 53 மில்லியன் |



<u>R.M.I : (Revenu Minimum et d'Insertion)</u>
*சமூக பொருளாதாரத் தேவை ஒட்டத்தில் தொற்றிக்கொள்ள வழங்கப்படும் குறைந்தபட்ச நிதி. ஒரு தனிநபரின் மாதாந்த தேவை*
*2,250 FF என மதிப்பிடப்பட்டுள்ளது.*

<u>S.D.F : (Sans Domicile Fixe)</u>
*நிரந்தர முகவரி அற்றவர்- அ-து நண்பர்கள், உறவினருடன் ஒண்டிவாழ்பவர்.*

<u>Sans-Abri :</u> *வீடற்றவர்கள்.*

<u>Mal-Loges :</u> *சேரி வாழ்க்கை (வசதிகுறைந்த சிறுவீடுகள், தனிஅறைகளில் பலர் ஒன்றுகூடி இருத்தல்).*

<u>S.M.I.C : (Le Salaire Minimum Interprofessionnel de Croissance)</u>-
*ஒரு வேலையாளர் குறைந்தபட்சம் பெறும் ஊதியத்தின் உத்தரவாதம். இது மணித்தியாலத்திற்கு 34 Fr / 83 centime என வரையறுக்கப்பட்டுள்ளது. (சிமிக்)*

<u>Chomage :</u> *ஒரு வேலையாளர் வேலை இழந்து அல்லது வேலை விலகி இருக்கும் நிலை.*

<u>Securite Sociale :</u> *மருந்துவத் தேவைகளுக்கு ஒருவருக்கு வழங்கப்படும் உத்தரவாதம்.*

<u>Aide Sociale :</u> *துன்புறும் மக்களுக்குரிய சேவைகளை வழங்க அரசநிர்வாகத்துடன் உரிய நடவடிக்கை எடுக்கும் அமைப்பு.*

*(*) ஸ்பெயின், இத்தாலி போன்ற நாடுகள் தம்பொருளாதார அபிவிருத்திகளுக்காக பலவெளிநாட்டவர்களை தருவித்திருந்தார்கள். தற்போது 'வெளிநாட்டாரே வெளியேறு' என்ற இன, நிற, வேறுபாட்டுக்கோஷங்கள் வெளிப்படுகின்றன. இனவேற்றுமைகளை பயன்படுத்தி தீவிர வலதுசாரிகள் அதிகாரத்தை பெறவிளைகின்றன. இத்தாலியில் இன்று தீவிரவல்துவாரிகள் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். குறிப்பாக ஜேர்மனியின் இனவாத வெளிப்பாடுகள் பலவற்றை உலகம் நன்கு அறியும். இன்றும் கூட ஜேர்மனியில் நீண்டகாலம் வாழ்ந்துள்ளார்கள். அல்லது அங்கேயே பிறந்துள்ளார்கள் என்பதற்காக வெளிநாட்டவருக்கு பிரஜாஉரிமை வழங்கப்படுவதில்லை.*

*(**) 'CLOCHARDS' மெற்ரோக்களில், தெருவோரங்களில் வைன்குடித்தவாறு வெறியில் இருப்போரையும் / பிச்சையெடுப்போரையும் சுட்டும் ஏளனச்சொல்-*

1990 இல் Dublin இல் கூடிய ECC நாடுகள் தம்நாடுகளில் புகலிடம் கோரமுடியாத அளவுக்கு தம்சட்டங்களை மிகவலுப்படுத்தியுள்ளன. ஆனால் இந்த ECC நாடுகள் ஏனைய உலகநாடுகளினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமைமீறல்கள் பற்றி உரத்துப்பிரச்சாரமும், மனித உரிமையை நிலைநாட்டப் படையெடுப்பும் செய்கின்றன.

இங்குவாழும் வெளிநாட்டவருக்கும், இந்த மண்ணுக்குரிய ஐரோப்பியருக்கும் பாகுபாடுகாட்டும் நடைமுறைகளை இவ்வரசுகள் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டன. இது மனிதஉரிமைக்கோட்பாட்டின் முக்கிய அம்சங்களைப் புறந்தள்ளிடும் செயலாகும்.

நாதியற்றநிலையால் புறந்தள்ளப்பட்டு வீதிகளுக்கு வந்துள்ள- வந்துகொண்டிருக்கும் ஏழைகளின் மறுவாழ்வு தொடர்பான திட்டங்கள் எதையும் முன்வைக்காத அரசுகளின் போக்கானது ஒரு சமூகக்கூறை அழியவிடும் செயலாகும்- இது ஒரு மாபெரும் சமூகப்படுகொலையாகும்.

- IGNACIO RAMONET இன் கட்டுரை சுருக்கமாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

நன்றி : Le Monde Diplomatique (பின் இணைப்புகள், மற்றும் புள்ளிவிபரங்கள் Le Monde, Le Nouvel Economiste இலிருந்து பெறப்பட்டவை)

○ "அரசானது தன் பொருளாதாரத்திட்டத்தில் மக்களைப் பங்கெடுக்க வைப்பதற்குப் பதிலாக எவ்வளவு விரைவாக மக்களை வெளியில் வீசமுடியுமோ அல்லது புறக்கணிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் நிறைவேற்றுகிறது" என்று கூறுகின்றார் றெனே லெனுவார் (René Lenoir) முன்னைநாள் தலைவர்- தேசிய கல்வி நிர்வாகம் (Education - Nationale - Administration) - இந்த நிர்வாகம்தான் பிரான்சின் அரச நிர்வாக இயந்திரத்தின் உயரதிகாரிகளை தயார்படுத்தும் அமைப்பாகும்.

Le Nouvel Economiste (18/03/94)

○ எம் கண்முன் உருவாகிக் காட்சிதரும் இந்த புறக்கணிக்கப்பட்ட ஏழைகளைக் கொண்ட சமூகமானது தம் சமூக உரிமைகளை இழந்து, இதனால் ஜனநாயக மனித உரிமைகளையும் இழந்து தவிக்கிறது. இதனை இனங்காணும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற 'மாபியா (Mafia) சமூகமானது' தன் இச்சைகளுக்காக இவர்களை விபச்சாரம், போதைப்பொருள் கடத்தல், பல்வேறு குற்றச்செயல்கள் புரிய பயன்படுத்துகின்றது.


Le Monde (09/07/93)

○ ஜுன்மாத ஆரம்பத்தில், இங்கிலாந்துச் சீமையில் பிரதம மந்திரி ஏழைகள் பிரச்சனை பெருந்தொல்லையாக உள்ளதாக லண்டன் நகரில் பயணிக்கும் உல்லா சப்பிரயாணிகளுக்கு இடைஞ்சலாக- அசிங்கமாக இருப்பதாவும் இனங்கண்டு ஏழைகளைக் கைது செய்யும்படி உத்தரவிட்டுள்ளார்.


# ஐரோப்பாவில் அதிகரித்துவரும் ஏழைகள்

- ஆன் மேரி மிசைல்
(Ann-Marie Michel)

### மக்கள் தொகை


70% ஏனைய நாடுகள்
30% ECC

### உலக சந்தையில் இலாப நுகர்வு


80 % ECC
20 % ஏனைய நாடுகள்

| ஆண்டு | 1975 | 1985 | 1992 | 2000 |
|---|---|---|---|---|
| ஏழைகள் | 38 மில்லியன் | 44 மில்லியன் | 53 மில்லியன் | ? |

உலகின் சனத்தொகையில் 30% மக்கள் தொகையையுடைய ஐ.பொ.கூ. (ECC) நாடுகள் உலகச்சந்தையின் மொத்தவருவாயில் 80% வீதத்தை நுகர்கின்றன. இந்நிகழ்வு பூமிப்பந்தில் ஐரோப்பாவை செல்வம் கொழிக்கும் தனிக்கண்டமாக பிரகாசிக்க வைக்கின்றது. ஆனால் இங்கே ஒருபகுதி மக்கள் (53 மில்லியன்) வறுமைக்கோட்டிற்குக் கீழ் தள்ளப்பட்டவர்களாக- சமூக உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக- கையேந்தி நிற்கின்றார்கள்.

இங்குள்ள அரசுகள் தம் வரவுசெலவுத்திட்டத்தில் 20% - 30% வரையிலான தொகையை சமூகத்தேவைகளுக்கு ஒதுக்குகின்றன. ஆனாலும் இத்தொகை போதுமானதாக இல்லை. வளர்ந்துவரும் நகர்ப்புறமாக்கல் பகுதிகள் என்றில்லாமல், சகல பிராந்தியங்களிலுமே இப்பிரச்சனை தலைதூக்கி நிற்கின்றது. இங்கிலாந்து, ஒல்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளில் தொடர்ச்சியாக ஏழ்மை நிலை பெருகிவருவதாக மதிப்பிடப்படுகின்றது.


## ஒதுங்கவைக்கும் சமூகமுடக்கல்:

ஐரோப்பாவில் முதியவர் (வயது 60ற்கு மேற்பட்டவர்) தொகை 60 மில்லியன்- இங்குள்ள மக்கள் தொகையில் இவர்கள் 20% - தற்போதுள்ள குடும்பநிலையில் இவர்கள் தனித்துவிடப்பட்டவர்களாகவுள்ளனர். பிள்ளைகள் ஒதுங்கியும், மனைவி/கணவன் இழந்தும் தனிமையில் இருக்கின்றனர். இவர்கள் மனோவியல் ரீதியாகவும், ஏழ்மையாலும் மோசமான பாதிப்புக்குள்ளாகிறனர். சிதறிய குடும்பத் தனித்துவத்தை கொண்டிருக்கும் ஐரோப்பிய மனோபாவத்தில் அரச-சமூக நிறுவனங்களுக்கு இவர்களது நிலை பெரிதாகத் தெரிவதில்லை. இவர்களது எதிர்காலம் பரிதாபத்திற்குரியதாகின்றது.

S.D.F, Sans abri, R.M.I, வயதுகுறைந்தவர், முதியவர், நீண்டகாலமாக வேலைதேடிக் கொண்டிருப்பவர், சிறையிலிருந்து வெளிவந்தவர், வெளிநாட்டவர் ஆகிய இந்த புதிய சமூகப்பிரிவான வர்க்கத்தட்டினர் தாம் குந்தியிருக்க இடம்தேடியும், வாழ பிழைப்புத்தேடியும் அலைகின்றார்கள். நிரந்தர முகவரியில்லாதவர்கள் தம் வாக்குரிமையையும் இழக்கின்றார்கள்.

இவ்வகையான ஏழைகள் நகர்ப்புறங்களை அண்டியிருக்க முனைகின்றனர். போத்துக்கலின் தலைநகர் லிஸ்போன் (Lisbon) ஐச் சுற்றிய புறநகர் பகுதிகளில் 2 மில்லியன் ஏழைகள் செறிந்து வாழ்கின்றனர். இவர்களின் பல வதிவிடங்கள் சிதைவுறும் நிலையிலுள்ளது. ஒதுக்கப்பட்ட சேரிகளாக காட்சியளிக்கின்றது. லிஸ்போனிலுள்ள ஒரு நகரான அனந்தோரா (Anadora) வில் வதிவோரில் 50% மானோர் எழுதவாசிக்கத் தெரியாதவராகவுள்ளனர்.

ஐரோப்பிய தலைநகர்களில் வீட்டுவாடகை ஒருவரின் சராசரி வருமானத்தின் 60% ஆக இருக்கின்றது. ஆக நகரங்களில் வீடு பெறுதல் என்பது சிக்கலாக புறநகர்களை நோக்கி மக்கள் பெயர்கின்றனர். வாடகைத்தொகையை ஜீரணிக்க முடியாததால் வங்கிக்கடன் வசதியுடன் தமக்கென்று ஒரு சொந்த வீட்டைப்பெற முயலுகின்றனர். ஆனால் அரசுவேலை உத்தரவாதமற்ற நிலையில் ஏற்படும் புதிய வேலை இழப்பின்போது வீட்டுக்கான கடனை அடைக்க வழிதெரியாது முழிக்கின்றனர்.



● LE RÉVERBÈRE

1987ற்கு பின் வளர்ந்துவரும் இளைஞர்களின் வேலை வாய்ப்பின்மையால் பெற்றோரையும், உதவிபுரியும் சமூகநிறுவனங்களையும் இளைஞர்கள் தங்கியிருக்கின்றனர். இது புதிய விரக்தி மற்றும் நடைமுறைப்பிரச்சனைகளைத் தோற்றுவிக்கின்றது.

பகுதிநேர வேலைகளில் பெண்கள் அதிகம் ஈடுபடுகின்றனர். தற்போதைய அரசுகளின் புதிய பொருளாதார நடைமுறைகளினால் பலபெண்கள் வேலையிழந்துள்ளனர். வேலை செய்யும் பெண்களில் 10% தனியே குடும்பம் நடாத்துபவர்களாகவும் 90% குடும்பத்தலைவிகளாகவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.
(கணிப்பு: Euro stat)

வேலைக்கான தெரிவில் 40 வயதைத் தாண்டிய வெளிநாட்டவர், வேலை செய்வதற்கான அறிவு (Formation) காணாது என்று சொல்லி வலதுகுறைந்தவர்களாகத் தட்டிக் கழிக்கப்படுகின்றனர்.

நிரந்தரவேலை பெறுதல் என்பது இப்போது ஒரு இனிய கனவாகிவிட்டது. நிர்ப்பந்தத்துக்குள்ளாகிப் போவோர் வேலை பெற Interim - Manpower போன்ற தரகு நிறுவனங்களுடன் குறைந்த ஊதியத்துடன் வேலைசெய்ய சரணடைகின்றனர். இந்த வகை தரகு 'வேலையாள் வழங்கும்' நிறுவனங்களால் முதலாளிகள் கொழுத்த இலாபமடைகின்றனர்.

45 - 75 ம் ஆண்டுப்பகுதியில் பொருளாதார மறுமலர்ச்சியை ஐரோப்பா கண்டிருந்தது. இக் காலத்தில் குறைந்த அளவிலான தனிமனித வாழ்வுக்கான உத்தரவாதத்தைக் கொடுத்து, அரச-பொருளாதார சமூகப்பங்கீடல் என்றமுறையில் : (1) வேலையிழந்தோர் வாழ்வு உத்தரவாதம் (Assurance Chomage) (2) சமூக அந்தஸ்து உத்தரவாதம் (Assurance Sociale) (3) சமூக உதவி (Aide -Sociale) போன்ற அமைப்புக்கள் முக்கிய சலுகைகளை வழங்கின. ஆனால் தற்போது பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்ட நிலையில் அரசினால் எந்த உத்தரவாதத்தையும் நிறைவேற்ற முடியாதுள்ளது.

தற்போது R.M.I பெற்றுக் கொள்ளும் புதிய ஏழைகளிடம் Secour Catholique அமைப்பு நடாத்திய கணிப்பு - 55% மான புதிய ஏழைகள் அரச சமூக உதவி நிறுவனங்களிடம் முன் எப்போதும் உதவிபெறாதவர்களாகவும், R.M.I பெறுவதற்கு விண்ணப்பித்தபோது கடும்விசாரணைக்கு உட்பட்டனர் (இன வேற்றுமை, வயதெல்லை, குடும்ப அங்கத்தவர் தொகை, குடும்ப வாழ்வுமுறை, வங்கி இருப்பு போன்ற) எனவும் விசாரணையின் பின்பும் பலரது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கின்றது.

அரசநிர்வாகம் தொடர்ந்து மேற்கொள்ளும் சமூகப்புறக் கணிப்பு நிலையானது ஏழைகளை சமூக நல்லெண்ண

அமைப்புகளை (Associations de Solidarite) நோக்கி இறுதி எதிர்ப்பார்ப்புடன் (கஞ்சி கிடைக்குமா?) அணி வகுக்க வைக்கிறது. இங்கே இவர்கள் தம் பெருமூச்சுக் களை வெளியிட்டு ஆசுவாசப்படுத்திக் கொள்கின்றனர். இங்கு ஏற்படும் வர்க்கரீதியான இணைப்பு புத்துயிர்ப் பைக் கொடுத்து தம் சமூக ஜனநாயக குறைந்தபட்ச உரிமையைக்கோரி குரலெழுப்ப வைக்கின்றது. இவ் வகை அமைப்புகள் அரச சமூக பொருளாதார நடை முறைகளை விமர்சிப்பதுடன் அரசின் உதாசீனப் போக்கை அம்பலப்படுத்தி வருகின்றன.

ஐ.பொ.கூ. (ECC) நாடுகள் புதியமுடிவுகள் பலவற்றை எடுத்தாலும், அறிவித்தாலும் 53 மில்லியன் ஏழைகளின் மறுவாழ்வானது தேசிய வாழ்வுநெடுஞ்சாலையில் பயணிக்காத வரையில், ஐ.பொ.கூ. (ECC) நாடுகள் தம்மளவில் எதை சாதிக்கப் போகின்றன? இந்த பெரு கிவரும் ஏழைகளின் பிரச்சனைகளைப் புறந்தள்ளும் ஐ.பொ.கூட்டுச்சேர்ப்பு ஏனைய கண்டங்கள், நாடுகளு டன் பொருளாதாரப் போட்டிக்கும், போர்ச்சீண்டல்க ளுக்கும் தானா பயனாகப்போகிறது? ஐ.பொ.கூட்ட மைப்பு (ECC) சொல்லவிழையும் சூத்திரம் தான் என்ன?

Le Monde Diplomatique கட்டுரையை நன்றியுடன் தழுவி தமிழில் திருப்பிய தொகுப்பு : வரன் - உதவி: அநாமிகன்

---

Ann-Marie Michel

தலைவர், ஐரோப்பிய சமூக ஆராய்ச்சி சேவை, கத்தோலிக்கப் பாதுகாப்புச்சபை (Chef de Service Reseaux en Europe, Secours-Catholique)

## - பிரான்சில் ஏழைகள் -

* வீடற்றவர்கள் (Sans abri) - 202,000

  *- இதில் நிரந்தர முகவரியற்றவர்கள் 98,000. ஏனையோர் வீதிக ளிலும், மெற்றொக்களிலும் ஒதுங்குவோர்.*

* சேரி வாழ்வு (Mal-Loges) - 1,576,000

  *- சிறுவதிவிடங்களில் பலர் ஒன்று சேர்ந்து வாழ்வது மற்றும் வாகனத்தில் மட்டும் வாழ்வது.*

  *(புள்ளிவிபரம் டிச.1992 - Bipe)*

* வாழ்வின் ஓட்டத்தில் தொற்றிக்கொள்ள பெறப்படும் அதிகுறைந்த உதவியை பெறுவோர் (R.M.I) - 765,000

* 5,100 FF மாதாந்த சராசரி வருவாயாகப் பெற முடி யாத குடும்பங்கள் - 37,7%

* 1992 - 1993 குளிருறை காலத்தில் (பனிக்காலம்) மட்டும் Les Restos du Coeur நிறுவனத்திற்கூடாக வழங்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள் 31 மில்லியன்.

* L'INSEE நிறுவனம் கூறும் கணிப்பீட்டின்படி 4.7 மில்லியன் ஏழைகள் வறுமைக்கோட்டிற்கு கீழான நிலையில் உள்ளனர். வேலை செய்யும் வயதை (25 வயதின் மேல்) அடைந்த தனிநபர் மாதாந்த வருவா யாக குறைந்தபட்சம் 2,250 FF ஆவது பெற முடியா தவர்கள்.

நன்றி : Le Point

## குஞ்சரம்

**1.**

எனது நண்பனின் காரை இரவல் வாங்குவதற்காக சென்றிருந்தேன். எனது துரதிஸ்டம் கார் திருத்தவேலைகளுக்காக அனுப்பப்பட்டிருந்தது. எனக்கு ஆச்சரியம். இப்போதுதான் அவன் அதை 2ம் தரமாக வேறு ஒரு நண்பனிடம் இருந்து வாங்கியிருந்தான். திருத்தவேலைகளுக்கு அனுப்பப்பட்டிருந்த தொழிற்கூடத்திற்கு நான் சென்றேன். எனக்கு நண்பனின் வாகனச் சாரதியாக இருக்கும் பிரஞ்சு வயோதிபரை நன்கு தெரியும்.

கார் அக்கு வேறு ஆணிவேறாகப் பிரித்துப் போட்டிருப்பதைப் பார்த்து நான் திகைத்து விட்டேன். என்ன நடந்தது என்று சாரதியிடம். நான் வினாவ அவரும் "இந்தக் காரை பயன்படுத்த முடியாது மோசமான இயந்திரக்கோளாறு.

"எப்படி?"

"விற்றவர்கள் ஏமாற்றி போட்டார்கள்" என்ற சாரதி"அதுசரி உமது நண்பர் வேறு ஒரு அவரது தமிழ் நண்பரிடமிருந்து தானே இந்தக் காரை வாங்கினார். அவர் வேற்றுமொழி, வேறு இனத்தவர் அல்லத் தானே! அப்படி இருக்க ஏன் இப்படி நட்புக்குள்ளேயே ஏமாற்றி இருக்கின்றார்கள்?" என்ற பிரஞ்சுச் சாரதியின் நியாயமான கேள்வி என் கன்னத்தில் அறைந்தாற் போல் விழுந்தது.

என்ன பதில் அளிப்பேன். என்னுள்ளும் இந்த வினாத்தானே குமுறிக் கொண்டிருக்கின்றது.

- நல்லையா -

**2.**

பிரெஞ்சு பாடம் தீவிரமாகக் கற்றுக் கொண்டிருக்கும் மாணவன் நான். அவ்வப்போது தமிழில் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வேன்.

வழக்கத்திலுள்ள பிரெஞ்சு மொழியை மூன்று பிரிவு களாக வகுக்கின்றனர்.

1. STANDART - தரம் (வகுப்பறை)
2. FAMILIER - வழக்கம் (வீடு, உறவு, நண்பர், பிரதேசம்)
3. SOUTENU - பண்டிதம் (அலுவலகம்)

பொதுவான இலக்கண விதிகளுக்கு அமைய நடைமு றையில் பிரெஞ்சின் உச்சரிப்பு வாக்கிய அமைப்பு வேறுபாடு சொல்லிக் கொடுக்கப்படுகிறது.
தமிழிலும்

1. தரமான தமிழ்.
2. வட்டாரத் தமிழ்.
3. பண்டிதத் தமிழ்.

இருப்பதை அறிவோம். கல்விக்கூடங்களில் தரமான தமிழ் பாடத்திட்டங்களுடன் ஒப்பீட்டளவில் நடைமு றைத் தமிழையும் சொல்லிக் கொடுக்கும் நிலை வரு மாயின் யதார்த்த நிலையின் புரிதல்களை இலகுவாக் குமல்லவா ? அது மட்டுமல்லாமல் தமிழில் அகராதி கள் தேவையும் பயன்பாடும் அதிகரிக்குமல்லவா !

- **லிங்கம்**




# தொலைந்துபோன நாட்கள்

**இளையவன்**

ஈழத்தமிழர்கள் இன்று தொலைத்திருப்பது நாட்களை மட்டுமல்ல- யாழ்குடா நாடு இராணுவ முற்றுகைக் குள்ளாகியுள்ள போது புள்ளி போட்ட கோலங்களாக இருந்த ஏழு தீவுகளும் இராணுவத்தின் கெடுபிடிக்குள் அகப்பட்டுக் கொண்டன.

இதன்பின் அகதியான குடும்பங்களின் பெருமூச்சுக்கள் ஆறாதவை. இளையவன் சிறுகதை, ஒருவரின் மூச்சை யாழ்ப்பாண வட்டாரச் சொல்வளத்தில் பதிவு செய்கிறது.

இம்மட்டுக் காலத்தில..... ஒரு சுண்ணாம்புக் கட்டிக்குத் தன்னும் ஆரிட்டையும் பல்லுக் காட்டி அறியாத எனக்கு இப்படி ஒரு சீவியம் வந்து வாய்க்க வேணுமோ.
நான் இப்பிடிக்கிடந்து கஷ்டப்பட இந்தப்பிறப்பில என்ன பாவம் தான் செய்தனோ தெரியேல்லையே.
*சீச்சீ...* சிவ சத்தியமா இப்பிடிக்கிடந்து கஷ்டப்பட வேண்டி வருமெண்டா அங்கினயே கிடந்து செத்துத் துலைந்திருக்கலாம்.
நாரந்தனை, கரம்பன் பக்கத்தில் இராசையா உபத்தியாயர் எண்டு என்ர பேர் கேட்டாலே என்ன மாதிரி எல்லாரும் மரியாதை செய்யுங்கள்.
பென்சன் எடுத்து பத்து வருஷமாய் போனாலும் ஊருக்கை என்ரை மரியாதைக்கு என்ன குறை.
ஆரிட்டயும் கடமைப்படாம.... நாலுண்டு என்ர பாடுண்டு எண்டு இத்தனை வருஷமாய் சீவிச்ச எனக்கு இப்பிடி ஒரு சீவியமோ.
ஐயோ... நானென்ன பாவம் செய்தன்.... ஆருக்கும் நான் மனதால கூடத் துரோகம் செய்த மாதிரி நினைவில்லையே.
நினைக்க.... நினைக்க... என்ன மாதிரி நெஞ்செல்லாம் எரியுது... மனம் பதறுது.
ஊர் விட்டு ஊர் வந்திட்டம் எண்டால் அதுக்காக மானம் மரியாதை எல்லாத்தையுமே விட்டிட்டு வந்தம்.
அகதிகளாய் ஓடி வந்தனான் எண்டாப் போல ஒண்டுக்கும் வழியில்லாமல் போய் வந்தவன் எண்டெல்லோ இவை நினைக்கினம்.
எட, ஒரு நாலு விறகு தடி கொத்துவம்... எண்டு கோடாலியை ஒருக்கால் கேட்டால் அவர் என்ன மாதிரி அருக்காணியம் விடுறார்.
இந்த நாலு தடியையும் கொத்தினால் என்ன கோடாலிதேய்ஞ்சு போயிடுமோ?
சரி... தரப் பிரியம் இல்லாட்டிப் போனால் இல்லையெண்டு சொல்லுறது, அல்லது உமக்கு தர ஏலாது எண்டு சொல்லுறது. அதைவிட்டுப் போட்டு பிடி முறிஞ்சு போச்சு எண்டு எனக்குச் சொல்லிஅரை மணித்தியாலம் ஆகேல்லை... அவரின்ரை மோன் விறகு கொத்திறான்.
அங்க பார்.... படீர் படீர் என்று அவன் கொத்திறசத்தம் இஞ்சை என்ரை காதுக்கை என்ன மாதிரிக் கேக்குது.
ஒண்டில்ல இரண்டு தவளை மார்க் கோடாலி நானும் வைச்சிருந்தவன் தான். ஆனால் உயிரைக் காப்பாத்தினால் போதும் எண்டு ஓடி வரேக்கை கோடாலியை ஆரும் எடுத்தர யோசிப்பினமோ? அல்லது கொண்டரத் தான் ஏலுமோ?
"விறகு கிடக்கு... தண்ணி கிடக்கு.... தேயிலை சீனி கிடக்கு, பால் கிடக்கு,... தேத்தண்ணிவைக்க ஏதனங்கள், சாமான்கள் சட்டுக்கள் கிடக்கு ஆனால் தேத்தண்ணி வைச்சுக் குடிக்க வழியில்லை"
கிடக்கிற விறகை கொத்த வேணும்.... கொத்துறதுக் கோடாலி இல்லை.
இதேன்ன சீவியம்... இந்த அறுபத்தஞ்சு, அறுபத்தா வருஷத்தில படாத, கஷ்டமெல்லாம் இப்ப பட வேண்டிக் கிடக்கு.
மனம் அலுத்துக் கொள்ள சாய்வு மனைக் கதிரையி இராசையர் சாய்ந்து கொண்டார்.

00000 00000 00000

என்ன மாதிரி... ஒருத்தரோட ஒரு சோலி சுறட்டுக்கு போகாமல் நானும் என்ர பாடுமாய் இருந்தன்.
நானும் என்ரை வீடு வளவும், ஆடு,மாடு, கோழியு எண்டு இருந்த என்ரை சீவியம் இப்பிடிச் சீரழிஞ்ச போச்சே.
ஒன்றிற்கு மூண்டு பிள்ளையளைப் பெத்தன். ஒரே ஒரு பொம்பிளைப் பிள்ளை. மற்ற இரண்டும் பெடியன்கள்

ஒருத்தன் மன்னாரில கலியாணம் கட்டி அங்கேயே குடும்பத்தோட இருக்கிறான். மற்றவன் கிளிநொச்சியில குடும்பத்தோட, மகள் கொக்குவிலில தான், இப்ப புருஷன்காரன் வீட்டோட இருக்கிறார்.
முந்தி..."ஏன் அப்பா தனியக்கிடந்து கஷ்டப்படுறியள் வந்து எங்களோடை இருங்கோவன்" என்று பல முறையும் கேட்டவள் தான். ஆனா வயது போன காலத்தில ஒருத்தருக்கும் பாரமாய் இருக்கக் கூடாது. என்ரை சீமாட்டியும் என்னைத் தனிய விட்டிட்டுப் போட்டாள். அதுக்குப் பிறகும் நான் ஏன் மற்றவைக்கு தொந்தரவைக் குடுக்க வேணும்'எண்ட நினைப்பில நான் என்ரை இடத்தில மிடுக்காய் இருந்தது.

சின்ன ஒரு வீடு தான்..... என்றாலும் கல் வீடு. அதுவும் நான் இரத்தம் பிளிஞ்சு கட்டின வீடு.... அதில நான் இருந்தால் ஏன் மற்றவைக்குப் பயப்பட வேணும்.
ஆட்டுப் பாலென்ன... பசுப்பாலென்ன... முட்டையென்ன... என்னத்துக்குப் பஞ்சம்.
வளவுக்கை கிடக்கிற மரக்கறியள் என்ரை தேவைக்குப் போதும். அரிசி, சாமானுகள் மட்டும் தானே விலை குடுத்து வாங்குறனான்.
சீ... இந்த விறகுகள் எவ்வளவு அங்கை தேடுவாரற்றுக் கிடக்கும்.
தென்னைமட்டை, பனமட்டை, பாளை, ஊமல், சிரட்டை இன்னும்.... அது... இது எண்டு எவ்வளவு கிடக்கும்,
அதுகளை விட்டிட்டு இங்க வந்து ஒரு சிரட்டைக்கே எழுபத்தைஞ்சு சதம் குடுக்க வேண்டிக் கிடக்கே.
அது மட்டுமே, அங்க கிடக்கிற பழவகையை நினைச்சால் இப்ப கண்ணீர் தான் வருகுது. உள்ள ஒரே சொத்து அந்த மூண்டு பரப்புக் காணியும்.... அந்தவீடும் தானே,
வீடு ஒண்டும் பெரிசு இல்லைத்தான். இரண்டு அறை.... ஒரு விறாந்தை, ஒரு குசினி, ஒரு கிணறு, அதில என்ரை எண்ணுகிற உணர்வும், பிடிப்பும் தனிதானே!

இதுகள் எல்லாத்தையும் ஒரே நாளில்.... ஓரிரு செக்கன்களில் இழக்கிறது எண்டால் எப்பிடித்தான் மனம் பொறுக்கும். அவரையும் அறியாமல் நீண்ட பெருமூச்சு.....

00000 00000 00000

ஆமி வாறானாம்... செய்தி காற்றடித்த திசையெங்கும் காவியது. தூரத்தில் பட்...பட்...படப்...படப்.. துப்பாக்கி வேட்டுக்களின் ஒலியலைகள் செவிப்பறைகளில் வந்து மோதியது.

"எந்தப் பக்கத்தாலயாம் ஆமி வருகுது? ஊர்காவற்றுறை ஜெற்றியில இருந்தோ அல்லது வேறெ எங்கயும் கடற்கரைப் பக்கம் வந்து இறங்கினவங்களோ?" 'சொய்ங்' என்ற ரீங்கார இரைச்சலுடன் பறந்துவரும் சன்னங்கள் எமனின் தூதுக்களை எடுத்து வந்து கொண்டிந்தது.

கையில கிடைச்ச சாமான்களை மட்டும் எடுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமா வெளிக்கிட்டது..... நினைத்தாலே குலை நடுங்குது.

எங்க போறம்? எத்தினநாள் தங்கப் போறம்? எப்ப திரும்பி வாறது? என்ற நினைவில்லாமல் எந்தப் பக்கத்தால போனால் தப்பலாம்? ஆமி எங்கின நிக்கிறானாம் ? என்ற எண்ணங்கள் அலைக்கழிக்க, விழிபிதுங்க, நெஞ்சு கனக்க, ஓடிவந்த அந்த பின்னேரப் பொழுதை என்ர சீவியத்தில மறக்கேலாது.

1958 ம் ஆண்டுக்குழப்பம் நடந்த போது நான் சிங்கள நாட்டுப் பக்கத்திலதான் படிப்பிச்சுக் கொண்டு இருந்தனான். ஆனால் அப்ப கூடி இப்படிப் பயப்பிடேல்ல. தமிழன் எண்டு சந்தேகப்பட்டால் தலையை மணந்து (1) பார்த்து தமிழன் எண்டு முடிவு செய்து போட்டு அடிச்சாங்கள்.

தெருநாய்களைச் சுடுகிறவன் கூட இலக்குப் பார்த்துத் தான் சுடுவான். இவங்களுக்கு ஆர் எவர் எண்டு இல்லை... பொழிய வேண்டியது தான்... சன்னம்பட்டு தமிழன் செத்தால் என்ன.. நாய், பூனை செத்தால் என்ன.... எல்லாம் ஒண்டுதான். கண்டமாதிரிப் பொழிஞ்சு கொண்டு வரேக்கை ஆர் தான் எதிர்க்க முடியும்?

"வாறவையள் வாருங்கோ... யாழ்ப்பாணத்தில கொண்டுபோய் விடுறம்" என்றொரு இளைஞன் குரல்.
"நாங்கள் புங்குடுதீவுக்குப் போவம்" என்றவர் ஒரு குடும்பஸ்தர்.
"அங்க சகோதரியவையும் இருக்கினம்" என்று அதற்கொரு விளக்கம்.
"எந்தப்பக்கம் எண்டாலும் கெதியாய் போய் ஒதுங்குங்கோ. ஆனால் ஊர்காவற்றுறையால வாற ஆமி வங்களாவடிக்கு வந்திட்டான் எண்டால் பிறகு யாழ்ப்பாணம் வாறது நினைச்சுப் பார்க்கேலாது கண்டியோ?" இன்னுமொருவரின் வியாக்கியானம்.

இந்த நிலமையில தான்.... சனமெல்லாம் யாழ்ப்பாணம் தானே போகுது. நானும் அங்கயே போவம் எண்டு யோசிச்சு வந்து சேர்ந்தன்.
அகதி முகாமில தங்கினன். மகள்வந்து வரச்சொல்லி கூப்பிட்டா.



"இங்கயே இருக்கிற சனத்தோட இருந்திட்டு சனம் திரும்பிப் போகேக்கை நானும் ஊருக்கு திரும்பப் போறன்" எண்டு அவவை அனுப்பிப்போட்டன். எண்டாலும் இரண்டொரு நகைநட்டுச் சாமான்களை வைச்சிருக்க யோசனையாய் அதை மகளிட்டையே குடுத்து விட்டிட்டன்.

இரண்டு நாள் தான் இங்க தங்க முடிஞ்சது. சனத்தோட சனமாய் இருக்க சரிப்பட்டு வரேல்லை. ஒண்டு துப்பரவு இல்ல. மற்றது சன சந்தடியில் அமைதியில்ல.

## குஞ்சரம்

அன்று வடைசாப்பிடலாம் என்றஎண்ணத்துடன் நண்பனுடன் அந்தச் சிற்றுண்டிச்சாலைக்குப் போயிருந்திருந்தேன். அவ்விடம் வந்திருந்த வேறொருவர் என்னை உற்று நோக்கியவாறு அடிக்கடி பார்ப்பது ஏதோ போலிருந்தது. சிரித்தவாறு என்னை நெருங்கிய அவர் "எப்படி மச்சான் சுகமா.... என்னை மறந்திட்டாய் போல..." என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை திருதிருவென முழித்தேன். அவரின் சிரிப்பு பழைய ஞாபகங்களை நினைவூட்ட ஒருவாறு அவரை அடையாளம் காணமுடிந்தது. எனது ஊரைச் சேர்ந்த ஒன்றாகப்படித்த நண்பன். சுமார் 20 வருடங்களின் பின்னான சந்திப்பு- ஆளே மாறியிருந்தான். (நானும் அப்படித்தான் மாறியிருப்பேன் போல..) தற்போது கனடாவாசி- வியாபார விஷயமாக பாரீஸ் வந்திருக்கின்றான்.

உரையாடல் பல்வேறு விஷயங்களை அலசிச்சென்று ஊர் நிலமைபற்றி வந்ததும்- பெருமூச்சும் ஏக்கமும் வெளிப்பட்டன. நாங்கள் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள். இன்று இவ்விடம் இராணுவம் ஆக்கிரமித்த பிரதேசமாக இருக்கின்றது. பசுமையாக வெளிப்பட்ட 'ஊர்காவற்றுறை' யின் நினைவுகள் நெஞ்சைக் கசக்கின. சமீபத்தில் தனியாக விடப்பட்ட தனது தந்தையை அழைப்பதற்கு ஊர்காவற்றுறை சென்றிருந்தாராம். புதினங்களை அறிய அவா கொண்டேன்.

"கொடுக்க வேண்டியதெல்லாம் கொடுத்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தான் பயணமானேன்- கலகலப்பாக விளங்கிய நகர் வெறிச்சோடி சோபை இழந்து காணப்படுகிறது. வீதிகளில் கூட பாப்பாசி காய்த்துக்கிடக்கிறது. எங்கும் புதர் மண்டியிட்டு கிடக்கிறது. மாம்பழங்கள் ஐந்து சதத்துக்கு கிடைக்கிறன. ஒவ்வொரு வெள்ளியன்றும் நயினாதீவில் சந்தை கூடப்படுகிறது......"

நண்பன் சொல்லச்சொல்ல என் முகம் இறுகியது. பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்த ஒரு பிரதேசத்தில் வெறும் நானூறு 'குடிமக்கள்' (வயோதிபர்கள்) மட்டுமிருக்க இராணுவம் நுழைந்து எதைச்சாதிக்கிறது?

- ரஞ்சன் -

மகளும் மருமகனும் சாப்பாடு கொண்டுவந்து தந்து திரும்பவும் தங்களோடை வந்திருக்கச் சொன்னவை தான். ஆனா நான் போகேல்ல. அகதியாய் ஓடிவந்தாப் போல.... அவங்களோடைவந்து ஒட்டியிட்டார் என் டெல்லோ மற்றவை நினைப்பினம்.

00000 00000 00000

இப்பயும் அடிக்கடி றேடியோவில தீவுப் பக்கத்து ஆக்கள்ளெல்லாம் அங்கயே குடியிருக்க வரலாம் எண்டுதான் ஆமிக்காரரும், அரசாங்கமும் அறிவிக்குதாம்.

ஆனால் என்னெண்டு நம்பிப் போறது. முந்தியும் ஒருக்கா இப்படித்தான் ஆமிவருகுதெண்டு சனமெல்லாம் அவலப்பட்டு ஓட..... கரம்பன் முதலியார், "எனக்கு சிங்களம் தெரியும் அவங்கள் வந்தா நான் கதைக்கிறன்... நாங்கள் எத்தனை பரம்பரையாய் யு.என்.பிக்கு வோட்டுப் போட்டு வாறம் அவங்கள் எங்களை ஒண்டும் செய்யமாட்டான்கள்" என்று சொல்லிக் கொண்டு அங்கயே நிண்டவர்.

ஊரில் அவரும் அவரின்ரை பெண்சாதியும் மட்டும் தான் அங்கயே நிண்ட ஆக்கள்.

ஆமி போட்டுதாம் எண்டு அறிஞ்சாப்பிறகு அங்கு போனன். எப்படியெண்டாலும் அயல்வீடெல்லே. தெரிஞ்சமனிசர் என்ன பாடுபட்டுதுகளோ... ஒருக்கா விசாரிக்காட்டால் சரியில்லைத்தானே. வீட்டை போனன். ஒரு சந்தடியையும் காணேல்ல.

படலை திறந்து தானே கிடக்கு... உள்ளுக்கை போனன். ஆள் அசுமாத்தத்தையே காணன். கதவுகள் எல்லாம் திறந்தபடி.....

வீட்டுச்சாமான்கள் எல்லாம் சிதறியபடி.... ஷோகேஷ் நிறைய கிடந்த சாமான்கள் ஒண்டையும் காணன். கண்ணாடிச் சிதறல்கள் நிலம்முழுவதும் நிறைந்து கிடந்தது.
"முதலியார்.... முதலியார்....." கூப்பிட்டுப் பார்த்தன் எதிரொலியைத் தவிர வேறெதையும் கேட்கவில்லை.
கொஞ்ச நேரத்துக்குப்பிறகு நாய் ஒன்று 'வள் வள்' என்று குரைத்துக் கொண்டு ஓடி வந்தது. எட்டிப்பார்த்தன் முதலியார் வளர்த்த 'றேமன்' தான் அது.
ஒட்டிய வயிறும் மிரண்ட விழியுமாக அதைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.
"றேமன்... றேமன் எங்கையடா ஐயா" என்றேன் ஒருவிதமாய்.
பெயரைக் கேட்டதாலாக்கும் அது எனக்கு கிட்ட ஓடி வந்தது.
சுற்றிச்சுற்றி வந்து வள்.. வள்.. என்று நேசக்குரைப்போடு வாலைக் குழைத்து குரைத்தபடி மோப்பம் பிடித்தது. பின்னர் வேட்டித் தலைப்பை வாயினால் இறுக்கிக் கவ்வி இழுத்தது.

றேமன்... றேமன்.. விடு.. றேமன் என்று அதட்டினேன். அது விட்டபாடாக இல்லை.
சுற்றும்முற்றும் பார்த்தேன். ஒரு தடி எண்டாலும் எடுத்து விரட்டுவம் எண்டு. வீட்டுக்கை எங்கதடி கிடக்கப் போகுது. கதிரை ஒன்றின் முறிந்தகால் தான் கைக்கு எட்டியது. அதனை எடுத்தபடி விடு றேமன் என்று உரத்துச் சத்தமிட்டேன். அதனிடையில் நாய் இழுத்த என் வேட்டியின் ஒரு பக்கம் கிழிந்து அதன் வாயுடன் போனது.

அது "வள்...வள்" என்று குரைத்தபடி பின்பக்கமாக ஓடியது. வேட்டியை கிழிச்சுப் போட்டுதே என்ற கோபத்தில் அதனை விரட்டியபடி அதன் பின்னால் ஓடினேன். ஓடிய றேமன், பின்பக்கத்தில இருந்த கக்கூஸ் கிடங்குக்கு பக்கத்தில் நின்று கிடங்கைப் பார்த்து குரைத்தது.

கிட்டத்தில போக முடியேல்லை... தாங்க முடியாத நெடி.....சீமேந்துப் பலகை போட்டு மூடியிருந்த கிடங்கில இருந்து நெடிவாறது எனக்குப் புதுமையாக இருந்தது.
திரும்பி நடந்தன். ஆனா றேமன் விடேல்ல. திரும்பியும் அருகாய் வந்து பலவீனமாய் குரைத்தது.
நாய் ஏதோ செய்தி சொல்ல முனைகின்றது என அனுமானித்துக் கொண்டவனாக கக்கூஸ் கிடங்கை நோக்கி நடந்தன். பலகை விலகிக்கிடந்தது. நாற்றம் தாங்கமுடியவில்லை. ஒருவாறு மூக்கைப் பொத்தியபடியே எட்டிப் பார்த்தன்.

பலகையின் முனையில் வழமையாக முதலியார் உடுத்தியிருக்கும் சாறத்துண்டு.

ஒரு அலவாங்கை எடுத்து வந்து பலகையை நீக்கிப் பார்த்தன். முதலியாரும் பெண்சாதியும் பிணமாய்...
விக்கித்துப்போனேன்!

ooooo ooooo ooooo

'இது என்னடா, சாய்மனைக் கதிரையில் கொஞ்சம் நிம்மதியாய் கிடப்பம் எண்டால் என்னவோ கெட்ட கனவுகள் மாதிரி பழைய நினைவுகள் தான் வருகுது. ஒன்றையும் மறக்கமுடியுதில்லை' பெருமூச்சு வெளிப்பட்டது. 'எழும்பிப்போய் சுவையருவியில ஒரு தேத்தண்ணியைக் குடிச்சுப் போட்டு ஒரு றாத்தல் பாணையும் வாங்கிக் கொண்டு வருவம்' சைக்கிளில் இராசையா வாத்தியார் சுவையருவியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கையில் "நீர்வளமுண்டு, நிலவளமுண்டு, நிம்மதி ஒன்று தான் இல்லை" என்ற பாடல்வரிகள் காற்றில் கலந்து கொண்டிருந்தது.

"எல்லைகள் மீறி எதிரிகள் வந்ததால் தொல்லைகள் சூழ்ந்தது வாழ்வில்" என்று இராசையா வாத்தியாரின் உதடுகளும் உச்சரித்தன அவரையறியாமல்-

ooooo ooooo ooooo

(1) தமிழர்கள் பெரும்பாலும் தலைக்கு நல்லெண்ணை வைப்பார்கள். சிங்களவர்கள் பெரும்பாலும் தேங்காயெண்ணை வைப்பார்கள். இதனால் கலவரங்களின் போது மோப்பம் பார்த்து இனங்காணப்படுவதுண்டு-

## குஞ்சரம்

- அருண்பாலா

நான் சுகயீனம் காரணமாக இங்குள்ள வைத்தியசாலையொன்றில் சுமார் 3 வாரங்கள் தங்க நேரிட்டது. பாரீஸின் இயந்திர மனித வாழ்க்கையின் ஓட்டத்தில் மனித உணர்வு உசுப்பிவிடப்பட்ட வேளை -புதிய தனிமை ஏராளமாக என்னை வாசிக்கத் தூண்டியது. இங்கு கிடைக்கும் சகல தமிழ் வார, மாத இதழ்களையும் எனது மனைவி கொண்டு வந்து தந்தார்.

என்னை பரிசோதிக்க வரும் பிரெஞ்சு வைத்தியர் தினமும் நான் வாசிப்பதை கவனித்தே செல்வார்.

ஒரு நாள் கேட்டார் - 'இது தான் உங்கள் மொழியா?'

'ஆம்' என்றேன்.

' என்ன மொழி?'

'தமிழ்'

'உங்கள் மொழியின் எழுத்துக்கள் அழகாக இருக்கின்றன. நான் பலவற்றையும் பார்த்துவிட்டுத் தான் சொல்கிறேன் !'
என்றார்.

எனக்கு ஆச்சரியத்துடன் ஒருவித மகிழ்ச்சியும். . .

## குஞ்சரம்

வழமைபோல் வேலைகளை முடித்துவிட்டு அலுத்துச் சலித்து மெற்றோவில் பாதித்தூக்கமும், பாதி மயக்கமுமாய் வந்து கொண்டிருந்தேன்.
பக்கத்து இருக்கையில் தமிழில் உரையாடல் நடப்பது என் செவிக்கு எட்டியது. உரையாடல் மொழி இந்தியத்தமிழாகவும் விடயம் வெளிநாட்டு வாழ்வின் அவலத்தன்மையையும் கொண்டு இருந்தால் என்புலன்கள் உசாராகின.

நபர் 1 – "நாம கருப்புத் தாண்டா. அதுக்கா இவங்களுக்கு அடிமையா என்ன?
அவன் வெள்ளையன்னா நமக்கென்ன? உன்னோட அப்பனும் என்னோட அப்பனும் அடிமையாகத் தான் இருந்திருக்கிறாங்க. அதுக்காக நாமளும் அடிமையாக இருக்கனுமா என்ன?"

நபர் 2 –"அண்ணே.. மெதுவாக பேசுங்க"

நபர் 1 – போடா.... "நான் தமிழன் தமிழிலதாண்டா பேசுவேன். உனக்கு வெக்கமா இருக்கா. ஏன்டா பயப்படுறே? டேய் நாம எப்பவும் நம் ஊருக்குத்தான் போவனும். இவங்க கூட ஒருக்காலும் வாழ முடியாது".

நபர் 2 – (மெதுவாக) "நான் இரண்டு மாதத்தில் புறப்படுறேன் அண்ணே" என்று சொல்லியவாறு சங்கடப்பட்டார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் எனது தரிப்பிடம் வந்தபடியால் எனது கால்கள் கதவைநோக்கிச் சென்றன. வீடுவந்து தூங்க விளைந்தபோதும் இந்த சம்பாசனை மீண்டும் மீண்டும் ரீங்காரமிட்டுக் கொண்டேயிருந்தது.

– பரதன் –

# கறுப்புக்கவிஞன்

# பென் ஒக்ரி

BEN OKRI




## கவிதைகள் : குறிப்புகள்

பென் ஒக்ரி (Ben Okri) இங்கிலாந்தில் வாழும் கறுப்பு எழுத்தாளர், நாவலாசிரியர், கவிஞர், பேராசிரியர். இவருடைய The Fami- shed Road 1991ம் ஆண்டுக்கான புக்கர் விருது (Bouker Prize) பெற்ற நாவல்.

இந்த ஐந்து கவிதைகளும் 'ஒரு ஆபிரிக்கச் சோகப்பாடல்' (An African Elegy) எனும் தொகுப்பிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. இப்புத்தகம் 1992 ஆம் ஆண்டு Jonathan Lape பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. இந்த மொழிபெயர்ப்பிலிருக்கும் 5 கவிதைகளில் 'ஒரு ஆபிரிக்கச் சோகப்பாடல்' புக்கர் விருது ஏற்புவிழாவில் வாசிக்கப்பட்ட கவிதை.

பென் ஒக்ரியின் படைப்புக்கள் நாவலாயினும் கவிதைகளாயினும் இசைத்தன்மை வாய்ந்தவை. ஆபிரிக்கக் கவிதைகளை மொழிபெயர்ப்பது உண்மையில் பேரச்சம் நிறைந்த பிரபஞ்ச வெளியில் மாந்திரீக உலகில் நுழைவது போன்றது.



சுலைமான் ஸிஸ்ஸே, ஒஸ்மேன் செம்பேன், ஓப்ரிஸ்ஸா போன்றவர்களின் திரைப்படங்களில் ஆழ்பவர்க்கு இந்த உண்மைகள் காட்சி ரூபமாக அனுபவம் ஆகும்.

பென் ஒக்ரி உலகெங்கும் பரவலாகப் படைக்கப்படும் படைப்பாளி. ஆழ்ந்த கலையழகும் தனது கலாச்சாரத்தின் மீது காதலும் மனிதகுல ஒன்றிணைவில் நாட்டமும் கொண்டது இவர் படைப்புக்கள்.

இவரது இளமைக்காலம் பெரும்பாலான வேலையின்மையால் பாதிப்புற்ற ஆபிரிக்க இளைஞர்கள் போன்றது. போதை மருந்துக்கு ஆட்பட்டவர். திருட்டுக்குற்றங்களுக்காக சிறைசென்றவர். நிறையக் குடித்தவர். பொறுக்கியாக அலைந்தவர்.

பிரக்ஞைபூர்வமாக தன்னை விடுவித்துக் கொள்ளமுயன்ற அறிவாளி.

இவர் கல்லூரிப் பேராசிரியரான போது லண்டனிலிருந்து வரும் நிறவெறிப் பத்திரிகை The Sun எழுதியது:

<< இவனிடம் எந்த வெள்ளைத் தகப்பனாவது / வெள்ளைத் தாத்தாவாவது / தன் மகளை, தன் பேத்தியை படிக்க அனுப்புவானா? >>

தற்பொழுது எல்லோராலும் மதிக்கப்பெறும் ஒரு படைப்பாளி பென் ஒக்ரி, 29 கவிதைகளில் இந்த 5 கவிதைகளைத் தேர்வது மிகமிகக் கடினமாகவே இருந்தது.

என் கவிதை அனுபவத்தை இப்போதே விரித்துச் சொல்வது, ஆபிரிக்க பென் ஒக்ரியின் உலகத்தில் நுழைபவர்க்கு தடையாகி விடக்கூடும்.

இப்போதைக்கு அதை நான் தவிர்க்கின்றேன். புலம்பெயர்ந்த இலக்கியம் மற்றும் தமிழ்க் கொடிபற்றிய பிரயோகங்கள் கவலை யீனமாக கையாளப்படும் தமிழ்ச் சூழலில் ஒரு நோக்கம், கருதித்தான் இம்மாதிரியான மொழிபெயர்ப்புகளைக் கொண்டுவர நினைக்கின்றேன்.

பிற்பாடு நிறையப் பேசலாம். முதலில் நிறையச் செய்யவேண்டும். சகோதரன் சொல்வதைக் கேட்க வேண்டும்.

யமுனா ராஜேந்திரன்

## ஒரு ஆபிரிக்கச் சோகப்பாடல்

காலத்தின் கசப்புக்கனியைச் சுவைக்கவென
கடவுள் செய்த அதிசயம் நாங்கள்.



நாங்கள் அபூர்வமானவர்கள்.
எமது துயரங்கள் ஒருநாள்
பூமியின் உன்னதங்களாக மாறும்.

என்னுள்ளே கனலும் விஷயங்கள்
உண்டு.
நான் சந்தோஷமுறுகையில் அது தங்கமாய்
ஒளிரும்.

எமது வலியின் மாயத்தை உம்மால்
உணரமுடிகிறதா?
நாங்கள் வறுமைக்கு ஆட்பட்டிருந்தோம்
ஆயினும்
இனிய விஷயங்கள் பற்றி கனவுகாணவும்
பாடவும் எம்மால் முடிந்தது.

காற்று வெப்பமாயிருந்தபோதும்
ஒருநாளும் நாங்கள் அதைச் சபிக்கவில்லை.
கனி மிக இனிதாயிருந்தபோதோ
தண்ணீரில் தழும்பும் ஒளியிழைகளையோ
நாம் சபிக்கவில்லை.

எமது துக்கத்தினிடையிடும் நாங்கள் அவைகளை
ஆசீர்வதித்தோம்
மௌனத்தின் மூலம் அவைகளை வாழ்த்தினோம்.

ஆகவே தான் எம்பாடல் எமது இசை
இனிதாயிருக்கிறது
காற்று ஞாபகம் கொள்ளச் செய்கிறது.

எமது உழைப்பின் ரகசிய ஆர்ச்சர்யங்களை
காலம் தான் முன் கொண்டுவரும்.

நானும்
இறந்தவர்கள் பாடுவதைக் கேட்கிறேன்
அவர்கள் சொல்கிறார்கள்
இந்த வாழ்க்கை அழகானதென
அவர்கள் சொல்கிறார்கள்
வாழ்வை அழகாக வாழவேண்டுமென
கனவுடன்
எப்போதும் நம்பிக்கையுடன் வாழவேண்டும்
இங்கே அதிசயங்கள் நிகழும்.

ஆச்சர்யங்கள் விளைகிறது
எல்லாவற்றிலும் கண்ணுக்குத் தெரியாதவை
நகர்கின்றன
கடல் நிறைய பாடல்கள்
வானம் எம் எதிரியில்லை
விதி எமது சிநேகிதன்.

## சதுக்கத்தில் உன்னை நான் அணைத்தேன்

சதுக்கத்தில் உன்னை நான் அணைத்தேன்
உனது புன்னகையைச்சுற்றி
அந்த மாலைநேரம்
தன்னை மறுபடி சுதாகரித்துக் கொண்டதாக
உணர்ந்தேன்.

நான் என்றுமே தொட்டிராத கனவுகள்
உனது உடம்புபோவென உணர்கின்றேன்.
உனது நளினம்
இரவை இன்னும் மென்மையாக்குகிறது

நாம் எங்கே போகிறோமென இன்னும்
அறிந்திராவிட்டாலும் கூட
எந்த தெருவழி போவதென
முடிவு செய்யாவிட்டாலும் கூட
எந்த பெஞ்சில் உட்காருவது என
தீர்மானிக்காவிட்டாலும் கூட
நமது நிர்வாண சந்தோஷசத்தைத் தரக்
காத்திருக்கும்
மாளிகை எதுவென அறிந்திருக்காவிட்டாலும் கூட.

ஒரு பயணத்துக்கான நிம்மதியின்மையை
உன் ஆன்மாவில் நான் உணர்கிறேன்.

ஒவ்வொரு சந்தோஷத்தினதும் அழகு
அனுபவம் கொள்கிற நிமிஷத்தில் மட்டுமே இருக்கிறது.

சதுக்கத்தில் உன்னை அணைத்துக் கொண்டிருக்கும்
இந்நேரம்-
ஒரு கனவை நான் பூட்டிவைத்திருக்கிறேன்
உனது புன்னகை ஒரு ரகசிய உடன்படிக்கை
எனக் கொண்டு.

## ஒரு கவிஞன் பிரகடனம் செய்கிறான்

வேறுவேறு காலகட்டங்களில்
நம் எல்லோருக்கும் இத் தருணம் வரும்.

உலோக நடுக்கங்கள் நிறைக் காற்றாக
நவம்பர் மாதத்து குளிர்க்கரமாக
ஒரு விநோதமான பருவத்தில்.

வீரம் முளையிலிருந்து விடுபடும் போது
இரக்கமற்ற கூர்மையான வெள்ளைத் தலைவிதி
உலகை ஊடுருவி நட்சத்திரங்களோடு
ஆன்மாவில் ஜொலிக்கும் ஒளியுடன்
பயணிக்கும் வேளை
கொடுமுடிக் கனவில் மோதி உடைக்கும்போது.

வேறுவேறு காலகட்டங்களில்
நம் எல்லோருக்கும் இத்தருணம் வரும்.

நமது ஆன்மாவின் அடித்தளத்தை
நடுநடுங்கவைக்கும் பூகம்பமாக
பிசாசின் சேமிப்புப்பெட்டக வெடிப்புகளாக
மூலமுதலான ஆதிகால சக்திகளின் பீறலாக
எமது சொர்க்க பயங்களின் மனம் நிறைபரவலாக.

சிவந்த விழிகளோடு
எரிந்த கரங்களோடு
இந்தக் குளிர் துருப்பிடித்த மாதத்தில்.

ஒரு ஆதிகாலக் கனவின் ஜுவாலையுடன் என்னை
இணைத்துக் கொள்கிறேன்-

இசை எனது ஆன்மாவை ஒளியேற்றட்டும்
அனுமதிக்கப்பட்ட தூரத்தைக் கடந்து நான்
யாத்திரை போவேன்
புதிய வெளிச்சத்தின் வெகுமதிகளைத்தேடி.

# ஆபிரிக்காவுக்கு வரநேர்ந்த ஒரு ஆங்கில நண்பனுக்கு..

பிறகனவுகளைப் பார்க்கக்கிடைத்திருக்கிற
சுதந்திரத்திற்கு விஸ்வாசமாயிரு
உமது கடந்த கால நட்புணர்வில்
முடிந்தவரை மதுவருந்தினாப்போல
உமது தனிமையை ஆசீர்வதி.

இப்போது நீ அனுபவம் கொள்கிற
அனைத்தும்
எதிர்கால சந்தோஷத்தின் தர்ணங்கள் என ஆகும்
இவைகளை வாழ்த்து.

பிறரைவிட உன் பாதைதான் உயர்ந்தது
என நினையாதே
நீதி வழங்க முனையாதே
திறந்த நிர்மலமான விழிகளோடு
எல்லாவற்றையும் பார்
கண்டனம் செய்யாதே
உன்னால் முடியுமானால் பாராட்டு
முடியவில்லையானால் மௌனமாயிரு.


காலம் இப்போது உனக்கு ஒரு அன்பளிப்பு
சுதந்திரத்தின் நன்கொடை
என்றென்றும் குழப்பமான கடந்த காலத்தைப்பற்றி
நினைவுகூர சிந்திக்க புரிந்துகொள்ள
காலத்தை மாற்றும் பொருட்டு
உன்னைப்புதிதாய் மறுபடைப்புச் செய்துகொள்ள.

நீ உயிரோடிருக்கும் போதே வாழ்ந்துவிடு.

மௌனத்தின் பாதையை
உன்னதத்தின் பாதையை படித்துக்கொள்
செயல்பட அறிந்து கொள்
புதிய பாதையை அறிந்துகொள்.

உனது ஆன்மாவின் விதைகளாயிருக்க அறிந்துகொள்
உன்னைக் கட்டமைத்த
உன் ரகசியங்களுக்குக் கடிவாளமிட்ட
உன் கண்டுபிடிக்கப்படாத பாதைகளுக்கு வரைமுறையிட்ட
அனைத்திலிருந்தும்
உன்னை விடுவித்துக் கொள்ள அறிந்துகொள்.

ஞாபகம் கொள்
உனக்கு வாய்த்த அனைத்து சம்பவங்களும்
விஷயங்களும்
ஆகார விஷயங்கள் என



எல்லையற்று விரிந்த செழிப்பான பூமியென
எல்லையற்று சிந்தனைகளை பிரசவிக்கும் என
உலகையும் உன்னையும் இன்றும் என்றென்றும்
மாற்றும் சிந்தனைகளை கருத்தரிக்கும் என

இந்த வளமான பாதையில் எதிர்படும்
நல்லவை கெட்டவை அனைத்துக்கும்
வணங்கவும் நன்றியோடிருக்கவும் மறக்காதே
நீ உயிரோடிருக்கும் போதே நீ வாழும்நாள் வரை
மாற்றமுறும் அனைத்துக்கும்
பயம் கொள்ளாதே
ஆயின் நிறைய அன்புடன் ஒளியுடன் இரு
பயம் கொள்ளாதே
ஆயின் உஷாராயிரு வரவேற்கத் தயாராயிரு
பயம் கொள்ளாதே
ஆயின் நிச்சயம் உறுதியுடன் செயல்படு
பயம் கொள்ளாதே
ஆயின் எப்போது நிறுத்திக் கொள்ள வேண்டும்
என அறிந்து கொள்
பயம் கொள்ளாதே
நீ என்னால் நேசிக்கப்படுகிறாயென
ஞாபகம் கொள்
பயம் கொள்ளாதே
மரணம் நிஜமான பயங்கரம் அல்ல
மாறாக வாழ்வு
மாயாஜாலத்துடன் வாழ்வுதான்
அவ்வாறாயிருக்கிறது.

உன் மௌனத்தில் சந்தோஷமாயிரு
உன் பொறுமையில் பலத்துடனிரு
பிரபஞ்சத்துடன் குத்துச் சண்டை போடாதே
ஆனால் சில சமயம் சண்டைபோடு
தண்ணீராக காற்றாக
சிலசமயம் தீயைப்போல
பூமியைப் போல அழுத்தமாக இரு.

மெல்லமாக வாழு
மெல்லமாக யோசி
காலம் ஒருபுதிர்.

எப்போதும் அந்த அன்பை மறவாதே
மகத்தான மனிதனாகக் கூடிய சாத்தியங்களை
வேண்டுவது அன்பு
சுயவிகாசத்தை அழகாகவும் சக்தியுடனும் வேண்டுவது
உனது சொந்த வீரத்தையும்
நட்சத்திரத்தையும் சாத்யப்படுத்தும் அன்பு.

உன்னுளிருக்கும் மிகமேன்மையானதைக் கோரும்
அன்பு
எமது ஆன்மாவிலிருக்கும் கீழானதையும்
கெட்டதையும் வென்று நிற்கும் அன்பு
உலகை ஆதுரமாய்க் காதல் செய்.

அன்பு மட்டும்தான் மாபெரும் ஆயுதம்
மிக ஆழமான
மிகக் கடினமான ரகசியம்.

பயம் கொள்ளாதே என் நண்பனே.
இருட்டு நீ நினைப்பதைக் காட்டிலும்
அழகானது அற்புதமானது
முழு மொத்தமான இருளுக்கு நன்றியுடனிரு
சிருஷ்டியின் கனவுகளின் மொத்தம்
இருள்
கணக்கற்ற மக்களின் பல்வேறு பாதைகளின்
முழுமை இருள்.

நீ வாழும் வாழ்வுக்கு நன்றியுடனிரு
பிற்பாடு
ஒரு அற்புதமான ஒளி
எப்போதும்
முழுமை நோக்கிய பாதைக்கு உனக்கு
வழிகாட்டியபடியிருக்கும்.

# பிம்பங்களின் புலம்பல்

①

அவர்கள் முகமூடிகளை எடுத்துச் சென்றார்கள்
தியாகங்கள் நிறைந்த முகங்களை
எடுத்துச் சென்றார்கள்
இயற்கைக் கடவுளர்களின் நெருப்புக்
கங்குகளைப் பிடித்திருந்த செதுக்கப்பட்ட
மரச்சிற்பங்களை
உலோக வெள்ளியின் புலப்படாத சக்திகளை
வெளியிட்டுக் கொண்டிருந்த
ஒளி உமிழ்ந்த கோடாலிகள் நிறைந்த
புனிதஸ்தலங்களை எடுத்துச் சென்றார்கள்.

வண்ணம் பூசப்பட்ட
எலும்புகளை எடுத்துச் சென்றார்கள்
உருக்கி வார்க்கப்பட்ட மன்னர்களின்
நாற்காலிகளை எடுத்துச் சென்றார்கள்
புனித வெண்கல முதலைகளை
இரத்தத்தினால் செய்யப்பட்ட எமது நிழல்களை
பிம்பங்களை
எடுத்துச் சென்றார்கள்.

அவர்களால் புரிந்து கொள்ளமுடியாத
இவைகளை எரித்தார்கள்.

அவர்களை பயமுறுத்திய எல்லாவற்றையும்
எரித்தார்கள்
புராதனக் கனவுகளின் தகத்தகாயமான
சக்தியை
பயங்கரத்தின் ரகசியங்களைக் கொண்டிருந்த
அனைத்தையும்
பூமியில் திகிலுடன் சண்டையிடும்
அனைத்தையும்
பயிர்கள் தளிர்விட உதவிய அனைத்தையும்
கடவுளர்கள் அருகில் சென்று மிக நெருக்கமாகப்
பேசக்கூடிய அனைத்தையும்.

எல்லாவற்றையும் அவர்கள் எரித்தார்கள்
குவியலாகப் போட்டு எரித்தார்கள்
தமது அன்னியமான கடவுள் நம்பிக்கையின்படி
எரித்தார்கள்.

சில பிம்பங்களை அவர்கள் எடுத்துச் சென்றார்கள்
வெள்ளைக் கடல்கள் கடந்து
நாடு கடந்து கொண்டு போனார்கள்

தமது நிலவறைகளில் பாதுகாப்பாக வைத்தார்கள்
ஆபிரிக்கர்களின் இருண்ட
ஊடுருவமுடியாத மனங்களைப்பற்றி
பிற்பாடு ஆய்வு செய்வதற்காக.

'தொல்கால பொருட்கள்' என
இவைகளை அவர்கள் அழைத்தார்கள்
விஞ்ஞான நல் அறிவுக்காக
அவற்றை உட்படுத்தினார்கள்.

②

பிம்பங்கள் ஆன்மாவில் இறந்தன
மேற்கத்திய அந்தகார இருட்டில்
தமது முகங்கள்
கோணல்மாணலாகிப் போயின.



பிம்பங்களின் சொந்த நிலங்களில்
புதிய பிம்பங்கள் செய்யப்பட்டன
புதிய பருவங்களுக்கேற்ப
புதிய கடவுள்
புதிய யுகத்துக்கான புதிய கடவுள்.

பிம்பங்கள் மரணத்தின் மறந்துபோன
சொற் பிரயோகங்களுடன்
பேசத்தொடங்கிய போது
அன்னிய தேசத்தின் கலைஞர்கள்
பிம்பங்களின் துயரத்தை அவைகளின் மொழியை
திரிவுபடுத்தினார்கள்
பேரச்சத்தின் சடங்குகளிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு
புதிய இரசாயனத்தை சிருஷ்டித்தார்கள்
இவர்கள்
'கலை' எனச் சொன்னார்கள்.

③

ஆபிரிக்க மக்களின்
ஊடுருவமுடியாத இருண்ட மனங்களின்
ரகசியப் பிரதேசங்கள்
ஆழமான இரவின் ஆவிகளைத் தொட்டன.

முகமூடிகள் இப்போதும் உயிருடனிருக்கின்றன
அவை பேசுகின்றன
ஒருசிலர் மட்டும் அவைகளைக் கேட்கமுடியும்
தமது மந்திரங்களின்
பயங்கரத்தைக் கேட்கமுடியும்
சடங்குகளின் இருட்டில் பிரசவிக்கும் சக்திகளை
மறுபடைப்புச் சிந்தையின்
மையத்து ஒளியை
பிம்பங்களின் சிருஷ்டியாளர்கள்
தமது ரகசியங்களை
பத்திரமாகப் பாதுகாத்திருந்தார்கள்
முகமூடிகள் எடுத்துக் கொண்டு போகப்பட்டபின்னால்
நிலத்தின் ஆவிகளை ஒன்றிணைக்கும்
தொல்காலப் பாடல்களை பாட
பூமி மறந்து போனது.



④

ஆவிகள்
எமது தொடுதலுக்கும்
எமது உறவுக்குமாக
பசிகொண்டு அலைந்தது.

ஆவிகள் தமது தனிமையில்
உன்மத்தம் பிடித்துப்போனது.

எமது மூளைகளை ஆக்ரமித்தது
எமது கனவுகளைக் காவியது
எமது கண்டு பிடிப்புகளின்
சிறகுகளை கீழமுத்தியது.

பிற்பாடு இப்போதும் மறுபடியும்
நாங்கள் வித்யாசமான உச்சரிப்புக்களுடன்
வெடித்தோம்.

கட்டுக் கடங்காத வன்முறை
எமது கண்டமெங்கும் ஒளியிறைத்தது.
எமது
வானமெங்கும் மின்னலடித்தது.

பிம்பங்களின் சிருஷ்டியாளர்கள்
இப்போதும் எம்மிடையில் இயங்குகிறார்கள்
நாம் அவர்கள் பேசுவதைக் கேட்போம்.

மறுபடி அவர் பாடல்களைப் படிப்போம்
செத்துக் கொண்டிருக்கும் எமது யுகத்தின்
மன இடைவெளியை நிரப்பிக்கொள்வோம்
அல்லது ஊமைகளாய் சாவோம்
குருடர்களாய் மாய்வோம்
பழைய பாடல்களை மறந்து
மாயமானதும்
பேரச்சம் தரத்தக்கதுமான பிரபஞ்சம் பற்றிய
மகத்தான கனவுகளிலிருந்து பிரிந்து.

## அவ்வப்போது பறித்த அக்கரைப்பூக்கள்

### புலம் பெயர்ந்துவாழ்தல்பற்றியும் தோல்விகள் பற்றியும்

- மரியா யூஜேனியா ப்ரேவோ கால்டெரரா
(Maria Eugenia Bravo Calderara)

*இல்லை. சேனாவில் நான் கழித்த*
*மோசமான காலமோ*
*அல்லது அவசரம் அவசரமாகக் கூட்டப்பட்ட*
*இராணுவ விசாரணைக் குழுக்கள் தொடுத்த*
*திடீர்க் குற்றச்சாட்டுகளோ*
*என் முதுகில் அழுத்திய துப்பாக்கிக் கட்டையோ*
*என்னை வீழ்த்தவில்லை.*
*இல்லை.*
*புலன் விசாரணையின் திகிலூட்டும் கறுப்பு முகமூடியோ*
*பயங்கரத்தின் ஓலங்கள் ஒலித்த*
*விளையாட்டரங்கங்கள் என்ற துன்ப நரகமோ*
*என்னை வீழ்த்தவில்லை.*

*இல்லை. வாழ்க்கையிலிருந்து நம்மைத் துண்டித்த*
*ஜன்னலின் இரும்புக் கம்பிகளோ*
*எங்கள் வீட்டின் மீது குவிக்கப்பட்டிருந்த*
*கண்காணிப்போ*
*பதுங்கிப் பதுங்கி வந்த காலடியோசைகளோ*
*பசியின் பிளந்த வாய்க்குள் நான் சரிந்து விழுந்ததோ*
*என்னை வீழ்த்தவில்லை.*

*இல்லை. என்னை வீழ்த்தியது நான்*
*உரிமை கொண்டாட முடியாத தெரு*
*அவசரமாகத் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தினூடே*
*நான் கற்றுக் கொண்ட இரவல் மொழி.*
*எங்களுக்குச் சொந்தமல்லாத தீர்க்கரேகைகளில்*
*தனித்து நிற்கும் நிச்சயமற்ற உருவம்தான்*
*என்னை வீழ்த்தியது.*
*அது கிரீன்வீச் தீர்க்கரேகை பூஜ்யம் டிகிரி*
*எதற்கும் அருகிலில்லை.*

*என்னை வீழ்த்தியது இந்த அந்நிய மழை*
*சொற்களை மறந்து*
*துழாவிச் செல்லும் நினைவு*
*வெகுதூரத்திலுள்ள நண்பர்கள்*
*எங்களுக்கிடையே உள்ள இந்த அடாத பெருங்கடல்-*
*எனக்கு வந்து சேராத*
*நான் எதிர்பார்த்திருந்த கடிதங்களை ஈரமாக்குகின்ற*
*இந்த அடாத பெருங்கடல்.*

தமிழில் : வ.கீதா, எஸ்.வி.ராஜதுரை

1970 களில் சிலெ (CHILE) நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டு தற்போது இலண்டனில் வசித்துவரும் இக்கவிஞர் 1971-இல் சால்வடோர் அலெண்டெவின் (SALVADOR ALLENDE) புரட்சி அரசாங்கம் சிலெவின் எதிர்புரட்சி இராணுவ அதிகாரிகளால் கவிழ்க்கப்பட்ட பிறகு கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார். சிலெவின் தலைநகரமான சான்டியாகோவிலுள்ள பெரிய விளையாட்டு மைதானத்தில் ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகள் அடைக்கப்பட்டும் சித்ரவதை செய்யப்பட்டனர். எனவேதான் 'விளையாட்டரங்கங்கள் என்ற துன்ப நரகம்' என்ற வரியைக் கவிஞர் எழுதியிருக்கின்றார். இக்கவிதையின் ஆங்கில மொழியாக்கம் இடம்பெற்றுள்ள சஞ்சிகை: INDEX ON CENSORSHIP VOL.21 No.6 LONDON

## * கவிமஞ்சரி *

### நம்பிக்கையான மௌனத்துடன்

*துளிர்ப்புக்காலத்தை*
*எதிர் நோக்கித் தவமிருக்கும்*
*பனிப்புலத்து*
*இலையுதிர் மரங்களைப் போல்*
*மௌனமாய்*
*எங்கள் இருத்தல்*
*ஓர்*
*துளிர்ப்புக்காலத்தின் வருகைக்காக -*

*நம்பிக்கை -*
*எங்கள் வாழ்தற் கிளைகளில்*
*கோடு கீறும் கிரணங்கள்*
*அந்தக் கோடுகளினூடு புலப்படும்*
*துளிர்ப்பு.*
*அதற்காகவே எங்கள்*
*மௌனமான காத்திருப்பு -*

- தமயந்தி -- -



### இளவாலை விஜயேந்திரன்

### மூத்தகுடி

பார்த்திருக்கத் தின்பானாம்
புத்தூரான்.
நாங்கள் புத்தூரில்லை.

ஆரியகுளத்தடியார்
ஆக்கள் சரியில்லை.
அது எங்கள் இடமில்லை.

கொட்டடியார் ஏதோ
சாதி குறைவாமே?
கொட்டடியுமில்லை நாங்கள்.

வன்னிச் சனங்களுக்கு
விளக்கம் வெகுகுறைவு.
நாங்கள் வன்னியில்லை.

மனிசர் சீவிக்கும்
இடமே மட்டக்களப்பு?
நாங்கள் யாழ்ப்பாணத்தார்.

தீவாரை யாரும் போய்த்
தீண்டுவாரே?
அப்படியே தீண்டினாலும்
சம்பந்தம் கலப்பாரோ?

நாங்கள் யாழ்ப்பாணத்தார்.
சுத்திச் சுத்திப் பார்த்தால்
சுன்னாகத்துப்......
அய்யய்யோ நாங்கள்
பிறந்ததே மலேஷியாவில்.

ஆனாலும் பாருங்கோ
'ரமில்'லைச் சிங்களவன்
அடக்கி ஒடுக்குகிறான்.
வெள்ளையரின் வழிமுறையிற்
பிரித்தாளப் பார்க்கின்றான்.
வெலிஓயா வாலையெல்லோ
துண்டாடப் பார்க்கின்றான்.

விடுவானோ மறத்தமிழன்
வாங்கோ போரிடுவம்

## நான் போகமுடியாத அயலூர்

**- சோலைக்கிளி**

*அந்த ஊரை*
*நாலு மூலையிலும் நாலு குயில் தூக்கி*
*கொண்டுவந்து*
*என் நெஞ்சுக்குள் வைத்தன*
*இன்று காலையிலே.*

*அந்தக் கிராமத்தின் பெரு வாவி*
*இப்போதும் எனக்குள்ளே ஓடியது.*
*அதில் பூத்திருக்கும் தாமரைகள்*
*வண்டு குந்தப் பூத்தபடி.*

*துப்பாக்கி வேலிகளால் அடைபட்டுக் கிடந்த அந்த*
*சர்க்கரை மணக்கும் மணல் கிராமம்*
*எனக்குள்ளேயே இன்று விடிந்தது!*
*சந்தைக்குப் போகின்றார் சில மனிதர்கள்.*
*சில மனிதர்கள்*
*வயலில் உழைத்தபடி நிற்கின்றனர்.*

*நான் முன்பு பார்க்கும்*
*அந்தப் பாடசாலை வண்ணாத்தி*



*இப்போது சற்றுப் பருத்தபடி*
*பறக்கிறது.*
*நான் அங்கு போய்த்திரிந்த காலத்தில்*
*புன்னகைத்த விதம் போன்றே*
*எனக்குள் இருக்கின்ற கிராமத்தில்*
*என்னைப் பார்த்துப்*
*புன்னகைக்கிறது.*

*சரி; இளம் அதிகாலைக் குயில்களே*
*மீண்டும் தூக்குங்கள் கிராமத்தை.*
*கொண்டுபோய், இது*
*இருந்த இடத்தில் வையுங்கள்.*
*நாடு நலமுற்று*
*ஒரே கொடியில் வெள்ளை பச்சை நீலமாய்*
*சிவப்பும் மஞ்சலுமெனப்*
*பூக்கள் விரிகின்ற காலம் வரைக்கும்*
*நான் போக முடியாது இந்த ஊருக்கு!*
*இப்படித்தான் இடைக்கிடை*
*தூக்கிவந்து எனக்குள்*
*வையுங்கள், ரசித்துவிட்டு*
*தருகின்றேன்; எனது -*
*பொன்னூரை, அழகுக்*
*கண்ணூரை, பாடசாலை*
*வண்ணாத்தி பறக்கின்ற அயலூரை.*

– ஆபுத்திரன் (தமிழ்நாடு) –

## கரப்பான் பூச்சிகளாய்....

அழுக்கையே தின்று
இருட்டில் வாடும் பூச்சிகள்.
பவர் ஷீவுக்குள்ளும்
பழைய புத்தகங்களுக்கிடையிலும்
என் அறை பின்
மூலையெங்கும்

அழுக்கையே தின்று
இருட்டில் வாடும் பூச்சிகள்.
கோவில் கருவறைகளிலும்
கக்கூஸ் கதவுகளிலும்
இதன் மீசை கண்டு
பயந்திருக்கிறேன்–
ஓடும் வேகம் கண்டு
வியந்திருக்கிறேன்.

அழுக்கைத் தின்று
இருட்டில் வாடும் பூச்சிகள்.
மீசை கொண்டும்
கம்பீரம் காட்டாமல்
சிறகுகள் கொண்டும்
பறவையாய் பறக்காமல்...

இருட்டைத்தின்று
இருட்டிலேயே சாகும்
முட்டாள் பூச்சிகள்.

## ஈழத்து தாய்

பிரபஞ்சம் இருளுக்குள் அமிழ
பாலஸ்தீனத்தில் கபர்கசம் போல்
கொலையுண்ட கொக்கட்டிச்சோலையில்
சமன் தூக்கும் துலாக்கோலின்றி
எமன் தூக்கிய உயிர்கள்.

துயிலா இரவுகளில்
துயரங்கள் நமதென்றும்
விதியேயென நொந்தும்
மரபுவழி மனிதர்கள்.

துப்பாக்கிகளின் ஓசையில்
அலறிப் புடைத்து
தொட்டிலில் குழந்தை அழும்.
சூம்பிய முலைக்காம்பை நீட்டி
வெதும்பிய பாலை ஊட்டும்
ஈழத்து தாயே!

நம்பிக்கைகளின் உயிர் மூச்சிலே
நாள்கள் கழியும்.
மௌனங்கள் உடைய
கண்கள் நீர் உகுக்கும்.
கருகிப்போன நினைவு மீளும்.

இளவேனிற்காலத்தில் நடந்தேறியது.
மானிடம் தலைகுனிய
ரவை மழையில்
நனைந்தன உடல்கள்.

பாடுமீன்கள் வாழும் நீரோடையில்
நீந்தி முத்தமிடும் குருதிப் பூக்கள்.

சில அவயவங்கள் மேலே மிதக்கும்.
ஆம்பல்களின் அடியில்
அழிந்தது போக எஞ்சிய
முகமிழந்த பிணங்கள்.

முழுப்பொழுதொன்று தேடி
மீதி உடல்களையும் புரட்டி
கரம்பிடித்தவன் உடலெதுவென
காணாது கலங்கிய கதை
எப்படி மறப்பாய்?

எனினும், எனினும்

தூரத்து வெளிகளின் பதுங்கு குழிகளில்
புதர்களின் மறைவில்
நமது புதல்வர்களின் சுதந்திர போர்க்குரல்
என்றாவதொருநாள் ஒலிக்கும் என்னும்
நம்பிக்கையில்
இன்றைய பொழுதும் கழிகிறது.

–செல்வமதீந்திரன்–

* 1987ம் ஆண்டு மார்ச்மாதம் மட்டக்ளப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை என்னும் தமிழ் கிராமத்திற்குள் அரசபடையினர் புகுந்து 80க்கு மேற்பட்ட பொதுமக்களை கொன்று குவித்தனர். அதன் நினைவாக இக்கவிதை பிறந்தது.

# தூவானம்

அச்சுப்பிழைகள் இன்னும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. ஒருநாள் கழிந்தது கவிதையில் அலைகள் என்பதற்குப்பதில் இலைகள் என்று வந்திருக்கின்றது. அதேபோல் கொட்டான் (பனைஓலையினால் முடையப்பட்ட பாத்திரம்) என்பதற்குப் பதில் கொண்டான் என்று வந்திருக்கின்றது.

த.செந்தில்குமாரன் — காரநெல்வயல், தமிழ்நாடு

தாங்கள் மௌனம் இதழுடன் இணைத்துள்ள விமர்சன விண்ணப்பம் நிறைவான ஒன்றாக எனக்குத் தோன்றவில்லை. அதனால் அதனைப் பூர்த்தி செய்யவில்லை. மன்னிக்கவும். இருந்தாலும் சுற்றிச் சுற்றி ஒரு சிலரின் படைப்புகளுடன் மௌனம் வருவது மௌனத்திற்கான எழுத்தாளர் வறட்சியைக் காட்டுகின்றது. அடுத்து, தேவை-சுயஅடையாளம் என்பது முதல் சொன்னதேயே திரும்பவும் சொல்வதாக தோன்றுகின்றது. இலங்கையில் வெளிவரும் சஞ்சிகை என்றால் தேவைதான். இங்கிருப்பவர்களுக்கு பழைய விடயந்தான். எனினும் மௌனத்திற்கு ஒரு சில படைப்புக்களை பிரசுரிக்க வேண்டிய நிர்ப்பந்தமிருப்பதால் தரநிர்ணயம் தளர்கிறது. நான் சொன்னவை உன்னிப்பான அவதானங்களின் போது மட்டுமே தென்படும். நாகதிலகனின் சிறுகதையில் எழுத தயங்கும் விடயங்கள் எழுதப்படுகின்றது. எனினும் சொல்வளத்திலும், அமைப்புமுறையிலும் அவர் கூடிய கவனம் செலுத்தினால் சிறந்த சிறுகதைகளை படைக்க முடியும். கவிதை ஒன்று அனுப்பிவைக்கின்றேன் பிரசுரியுங்கள் எனக்கும் உற்சாகமாகவிருக்கும்.

செல்வமதீந்திரன் — சுவிஸ்

அச்சிடப்பட்டமுறை, தாளின் தரம் மிக உயர்த்தி. விசயம் சற்றுகனமாயும் அதேமாதிரியான நடையோடும் இருப்பதாய் படுகின்றது. புதிய விசயங்கள் அறிந்து கொள்கிறாற் போல் நிறைய வரலாற்று, அரசியல் ஆதாரங்கள். புத்தக ஆக்கத்தில் செயல்வேகமும், சிரத்தையும் பக்கம் பக்கமாய்த் தெரிகின்றது.

ரி. குலசேகர் — இந்தியா

மௌனம்-3 மிக அழகான அமைப்போடு வந்தடைந்தது. வர வர மௌனம் பலவிதத்திலும் மிளிருகின்றது. இன்னும் பல அம்சங்களிலும் மிளிரவேண்டும். சுந்தரராமசாமி பற்றிய தங்களின் கருத்தில் எனக்கு உடன்பாடு அதிகம். நான் மௌனம்-3 இல் கண்டு மகிழ்ந்த அம்சம் என்னவென்றால், முகம் தெரியாமல் (உருவம் புரியாமல்) இருந்த எனது நண்பரொருவரை புகைப்படமாகவேனும் கண்ட (மகிழ்ந்தது) திருப்திதான்.

சோலைக்கிளி — கல்முனை

வழக்கம் போலவே அட்டை, மற்றும் இதர படங்களைத் தேர்வதிலும், அவற்றைத் தெளிவுடன் பதித்தலும், லே-அவுட் தயாரிப்பிலும் மிக்க கவனம் செலுத்தப்பட்டமையும், கலையுணர்வும் பிரத்தியட்ச மாகின்றன. அட்டைப்படம் உலகம் பூராவும் உள்ள துப்பரவுப் பணியாளர்களின் முக்கியத்துவத்தையும், நேரம், காலம், பனி, குளிர் எதையும் பொருள் செய்யாது அவர்கள் கட்டாயப் பணிபுரியும் நேர்த்தியையும் கூறும் கவிதை! அதற்கு ஒரு சாபாஷ்! துடைப்பத்தைக் கையில் பிடிக்கும் ஒரு ஐரோப்பியனினதும், நம்மவரினதும் மனநிலைகள் வேறுதான். இது இழிசனருக்கானது என்று நம்மவன் கருதி மனச்சஞ்சலம் அடைந்து கொள்வான். எமது சாபக்கேடான சமூக அமைப்பில் மிக மிக மிக ஒடுக்கப்பட்ட இத்துப்பரவுப்பணியாளர்கள் தான் தேமதுரத் தமிழ் பரப்புகின்றார்கள் என்பேன்! எனது சந்தேகம் பிரிட்டிசார் இந்தியரைக் கூலிகளாக இட்டு வரமுன் இலங்கையில் கழிப்பறைகள் இருக்கவில்லையா? அடுத்த சந்தேகம். "உத்தேசத் தமிழீழம்" கிடைத்து பத்து, இருபது ஆண்டுகளில் சிங்கப்பூரைப்போல, தாய்லாந்தைப்போல நாமும் முன்னேறிவிட்டோம் என்று வைப்போம். அப்போதும் துப்பரவுப்பணிகளுக்கு எமது பிள்ளையை அனுப்பி வைப்போமா? இல்லை இழிசனரைத்தான் தேடுவோமா? என்பது தான்!

பி.கருணாகரமூர்த்தி — பேர்லின்–ஜேர்மனி

முத்திங்கள் இதழ் முத்தாக அமைத்துள்ளீர்கள். அடக்கமாகவும் அதே நேரத்தில் உள்ளடக்கங்கள் நறுக்காகவும் அமைந்துள்ளன. உங்கள் இம்முயற்சி தொடரவேண்டும், வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

செ.குணரத்தினம் — பேர்லின்–ஜேர்மனி

ஓரே மூச்சில் எல்லாவிடயங்களையும் படித்து முடித்தேன். அந்தளவிற்கு உள்ளடக்கங்கள் இருந்தன. இதழின் எண்ணிக்கை கூட புத்தகத்தின் தரமும் கூடிச்செல்கின்றது.

ரட்ணகுமார் இராஜரட்ணம் — பாரிஸ்

இதழ் சிறப்பாகவுள்ளது. எனினும் வடிவமைப்பு விடயத்தில் தாங்கள் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும். ஸ்பைக்லீ பற்றிய கட்டுரை நிறையச் செய்திகளைச் சொல்கின்றது. மால்கம் எக்ஸின் ஆணாதிக்க எண்ணப்பாடு பற்றிய விமர்சனங்கள் இன்று பெண்ணியக்கவாதிகளால் செய்யப் படுகின்றன எனினும் அவர் மாபெரும் தலைவர் என்பதை அவர்களும் ஒப்புக்கொள்ளவே செய்கின்றனர். புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களின் அனுபவங்களை வெளிப்படுத்தும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றை நாங்கள் நிறைய எதிர்பார்க்கின்றோம். அரசியல் / இலக்கியக் குழுச்சண்டைகளில் "மௌனம்" சிக்கிக் கொள்ளாமலிருக்க வேண்டும்.

எஸ்.வீ.ஆர். — சென்னை–இந்தியா

தமிழகத்தைவிட்டு நெடுந்தூரம் சென்று பாரிசில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மிகஅருமையாக பலவித கோணங்களில் தம்முடைய படைப்பாற்றலை வெளிப் படுத்துவது பாராட்டத்தக்கதாகும். உங்களுடைய பணி மேலும் தொடர, சிறந்தோங்க தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வாழ்த்துக்கள்.

இயக்குனர்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்–இந்தியா

இதழை நண்பர் சுகன் அவர்களிடமிருந்து பெற்றுப் படித்து மகிழ்ந்தேன். கடல் கடந்து பரவிடும் தமிழ் இதழ்க்கலை விரிந்து தமிழாய் விரிய முயன்று வரும் முயற்சிக்கு எனது பாராட்டுக்கள். மௌனம் இதழ் அமைப்பும் உள்ளடக்கமும் பராட்டுக்கு ஏற்ற பலிதம். கடல்கடந்து மீண்டும் எங்களிடம் வரும் தமிழ் படிக்க பழக சுகம். இலங்கை நண்பர்களது படைப்பு என்பதறிந்து மகிழ்கின்றேன். பாராட்டுகின்றேன்.

தஞ்சை பிரகாஷ் — தஞ்சாவூர்–இந்தியா

அட்டைப்படத்தை பிரமிப்புடன் பார்த்துக்கொண்டே புரட்டியபோது, மௌன உடைவுகள் என வரும் திரு.கி.பி.அரவிந்தன் அவர்களின் தொடர்- ஆழமான நுணுக்க வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியது அது தொகுக்கப்படவேண்டும். புலம் பெயர்ந்தவர்களின் ஆழ்மன அலசல்களாக "தேவை-சுயஅடையளம்" என்ற அநாமிகனின் கட்டுரை அமைந்துள்ளது. ஒப்பாரிக்காக ஏங்கும் பாட்டியும், ஐயோ, ஐயோ- எனப்பாடும் தமிழ் ரெகேயும், புரியாணி இல்லாத புட்டும்- ஒரு புதிய பரிமாணத்தைக் காட்டியது. நீங்க தான் அகதியெண்டா, என்னையுமேன் அகதியாக்... எனக்கத்தும் குழந்தை கத்துவதில் உண்மையுள்ளதாகத் தான் தெரிகின்றது. எஞ்சின் ஓடத்தொடங்கிவிட்டது இனி ஒருக்காலும் நிற்காது என்று காட்டும் அவர்- அப்படியே விட்டாலும் ஊருக்குப்புறத்தே ஒதுங்கியிருக்கத்தான் சம்மதிப் பாங்கள் என்று சொல்லுவது படிக்க கஷ்டமாக இருக்கிறது. அது தமிழ் மண் தானே... நாம் தமிழர் தானே... துப்பரவாளர்கள் தவிர்க்கவியலாதவர்கள் என அட்டைப்படச் செய்தியாய் மனம் வெளுக்க "மௌனம்" உண்டு எங்கள் முத்துமாரி- எனக் காட்டுவதாகத் தோன்றியது. பயணீட்டாளர் குரல் (மலேசியா) தனது ஜனவரி 91 இதழில் கேடுகெட்ட கேசட்டுகள், பாசத்தமிழுக்கு மோசம்! நாசம் எனக் 'காரமாக' விவாதித்து அறிவுறுத்தியது- கவுண்டமணி செந்தில்-காமெடி கதம்ப கேசட்டைப் பார்த்தபோது ஞாபகத்திற்கு வந்தது. ஸ்பைக்லீ பற்றி ஆழமாகத் தெரிய வைத்தது அக்கட்டுரை. சிறப்புக்கட்டுரை என்பதால் மேலும் கீழும் தனித்தனியாக ஓடியதோ!

பொள்ளாச்சி நசன் — இந்தியா

எங்கோ தொலைதூரத்திலிருந்து கொண்டு தமிழர்களின் முகவரியைத்தேடிப் பிடித்து அனுப்பிவைக்கும் தங்கள் விடாமுயற்சி மெய்சிலிர்க்க வைக்கின்றது. ஆனாலும் தமிழர்களுக்கேயுரிய தனிப்பெரும் குணம் இதுபோன்ற சிறுஇதழ்களை சாகடிப்பதேயென்றால் மிகையாகாது. சுந்தரராமசாமி நடத்திய 'காலச்சுவடு', கோவைஞானி நடத்திய 'நிகழ்'இப்படிப்பல இதழ்கள் நின்றுபோன அவலம் இந்தத் தமிழ்த்திருநாட்டில் தான் மிகவுண்டு. இருப்பினும் தொடர்ந்து பலஇதழ்கள் வந்துகொண்டுதானிருக்கின்றன. நாங்கள் கூட 'ங்' என்ற சிறுஇலக்கிய இதழை வித்தியாசமாகக் கொண்டுவர நினைத்தோம். கையைச்சுட்டுக் கொண்டு மூன்று இதழ்கள் மட்டுமே வெளிவந்தபிறகு முடங்கிப்போனது. தங்களுடைய இதழில் ஆசிரியர் கடிதமும் இதே கருத்தை பிரதிபலித்தது கண்டு வருத்தமாக இருந்தது. ஆக, இக்கரைக்கு அக்கரைப்பச்சை.

V.நாராயணன் காஞ்சிபுரம், இந்தியா

இப்படி ஒரு இதழ் தமிழில் இருப்பது இப்போதுதான் தெரிந்தது. வித்தியாசமாக இருக்கிறது! நாகதிலகனின் சிறுகதை, மற்றும் "வழக்கொழிந்த மொழிகள் வழமைக்கு..." கட்டுரையும் வாசித்தேன். இக்கட்டுரை எனக்கு முக்கியமாகத் தெரிகிறது. பருவட்டான ஒரு பார்வையில் நோக்கும் போது, சிதைவுக்கு உட்படுத்தப்பட்ட ஒருஇனம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் வாழவும் துடிக்கும் முனைப்பு தெரிகிறது. ஒரு வகையில் எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் இருக்கக்கூடும் இது. எனது பரிவும் வாழ்த்துக்களும்.

கி.ராஜநாராயணன் புதுவை - இந்தியா

இதழ் வாசிக்கும்போது என் மனதை பலவித உணர்வுகளில் சிந்திக்க வைக்கிறது. எமது தாய் நாட்டில் உண்மையான நிலைமைகளை எழுது கின்றீர்கள். மற்றும் உங்கள் பணி சிறக்க எனது வாழ்த்துக்கள்.

பொ.விஜயகுமார் பிரான்சு

தமயந்தி மூலம் மௌனம்-3வது இதழ் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வாசித்தவுடனே அதனைப் படிக்க வேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்தியது. நாட்டிலும் ஐரோப்பாவெங்கிலும் உள்ள பெரும்பான்மை எழுத்தாளர்கள் / கவிஞர்கள் / கலைஞர்கள் எல்லாம் திசைமாறிய நமது 'நீதியான போராட்டத்தினை விமர்சனம் செய்து மாற்ற ம்யற்சிக்காது உண்மைக்கு புறம்பான மிகைப் படுத்தப்பட்ட கதையெழுதுவதிலும் நாடகமாடுவதிலும் களிப்புற்று விளம்பரப்படுத்துவதால் தாம் விளம்பர மாகலாம் என திட்டமிட்டுச் செயற்படுகையில்; இன்னுமொரு சாரார் புலியெதிர்ப்பு வாதத்திலே மட்டும் மனம் மகிழ்கையில் நீங்கள் வித்தியாசமான ம்றையில் கலை இலக்கிய வெளிப்பாடு, வேற்று மொழிக்கவிதை கட்டுரைகளின் மொழி பெயர்ப்புக்கள், நாட்டு எல்லைகளையும் கடந்த தமிழ் மொழி வளர்ச்சியில் கவனம் செலுத்துவது வரவேற்கத் தக்கதுடன் ஆதரவளிக்கக் கூடியதே.

ரி.செபஸ்ரியன் நோர்வே

காத்திரம் என்று சொல்ல வரும்போது அனைத்தும் என்பதாய் சொல்லலாம். "கர்த்தால்" மிகவும் அருமை. அது 1988ல் எழுதப்பட்டிருந்தாலும் இன்றைய காலங்களுக்கும் அமைவாய் வருகின்றது. ஸ்பைக் லீ பற்றிச் சொல்ல வந்து சினிமாவின் நெழிவு சுழிவுகளை ஆராயும் என்று பார்த்தால்... இன்னும் பூரணப்படாமலே அந்தரத்தில் விடப்பட்டது போன்றதான நிலையைத் தான் தந்தது. "மௌன உடைவுகள்" உண்மையானது. கவிதைகள் தரமிகுதி. எழுத்துப் பிழைகளையும் மௌனம் தாங்கி இருக்கிறதே... தவிருங்கள். "மௌனம்" இப்பொழுது நாடளாவிய ரீதியில் (இலங்கையில்) தேவைப்படுவதற்கான காலம் தொலைவில் இல்லை.

அக்குறணை இளைய அப்துல்லாஹ் இலங்கை

மிக அற்புதமானபடைப்பு. எவ்வளவோ சோகங்களை வாழ்வில் சுமந்தாலும், நெஞ்சின் ஒருபக்கம் அழகியலும் வாழ்வின் மீதான நம்பிக்கையும் உண்டு என்பதைக் காட்டியுள்ளீர்கள். இந்த இதழ் அச்சு நேர்த்தியாக உள்ளது. படைப்புக்கள் பன்முகப் பார்வையுடன் இருக்கின்றன. இப்போதைய எங்கள் கவலையெல்லாம் இதழைத் தொடர்ந்து கொண்டு வரவேண்டும் என்பதும், இன்னும் அதிக ஆர்வலர்களிடம் இதழைக் கொண்டு போகவேண்டும் என்பதும் தான். 9-4-94 தினமணி சுடரில் மாலன் விரிவாக அறிமுகம் தந்திருக்கின்றார்.

கனிவண்ணன் நாகை - இந்தியா

ஜனரஞ்சத்தனமான மூட்டத்துக்குள் அவ்வப்போது அரிதாகக் கிடைக்கின்ற வித்தியாசமான பத்திரிகைகள், சஞ்சிகைகளின் வரிசையில் தங்களதும் பார்வைக்குப்பட்டது. இதில் நான் பார்த்த மட்டில் மௌனம் வித்தியாசமானது, விபரமானது இன்றைய தேவை இது போன்ற வெளியீடுகள்தான் "புலம் பெயர்ந்த இலக்கியம்" என்ற ஒன்று தமிழ் இலக்கிய வரலாற்றில் நல்லதொரு இடம் பிடிக்கின்றளவு உங்கள் வெளியீடுகளில் கனம் தெரிகின்றது. சேவை தொடரட்டும்.

எம்.எவ்.எம்.சா:பி மூதூர் - இலங்கை


செயலில் ஒன்றும் இல்லாமல் வாயால் கத்தித்திரிவதில் பிரியோசனம் இல்லை. நாடு வேண்டும். மறக்க வேண்டாம். பிரதேசவேறுபாடுளைத் தூண்டி ஈழத் தமிழரை விரக்தியடைய வைத்து எதிர்காலத்தில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகின்றது கி.பி.அரவிந்தனின் கட்டுரை. பலமான எதிரியை எதிர்த்து ஏன் யாழ்ப்பாணத்தான் தவிர்ந்த ஏனைய மானமுள்ள தமிழனும் அடிபடத் தொடங்கவில்லை. ஏற்கனவே பிளவுண்டிருக்கும் ஒரு சிறு சமுதாயச் சாக்கடையில் நீங்கள் மீன் பிடிக்கவேண்டாம்.

சாந்தீபன் இலண்டன்

<u>சிதைவுறும் தமிழர்கள்</u>

நாளாந்த வாழ்க்கைஓட்டத்தில் தமிழர் 'பணம்' என்ற ஆயுதத்தால் தம் பெட்டகத்தை நிரப்பிக் கொண்டு முகத்தில் நிம்மதியிழந்து பரிதவிக்கின்றனர். நாம் எம் சொந்த தேசத்திலிருந்து வெளியேறி வேறுகலாச்சார சூழ்நிலையில் வாழும்போது எமது பண்பாடு. அடுத்த சந்ததிக்கும் காவப்பட வேண்டும் என்பது ஒருசில பொறுப்பு வாய்ந்தவர்களின் கருத்து. அடுத்த சந்ததி தற்போதைய புதியகலாச்சாரச் சூழலில் வாழும்போது தகுந்த முன்னெச்சரிக்கைகளுடன் செயல்பட வேண்டியது பெற்றோரின் கடமையாகிறது. இதற்குப் போதிய நேரம் ஒதுக்கமுடிகிதா? கலாச்சாரச் சீரழிவுகள், காட்டுமிராண்டித்தன்மை வளராமல் இருக்கத்தகுந்த வேலி அமைக்கப்பட வேண்டும். இரண்டு கலாச்சாரச் சூழலில் வாழ்வு அனுபவம் பெற்றுள்ள பெற்றோர்கள் இவற்றில் இருந்து பெறப்படும் நல்லவற்றை நுகர்ந்து அடுத்த சந்ததிக்கு ஊட்டவேண்டும்.

ஜெயரஞ்சன் பாரீஸ்



# எழுந்துவரும் நவலிபரலிச அலைகள் இவை நிலைகொள்ளுமா?

**– சமுத்திரன்**

◉ *தோல்வியடைந்த சோஷலிசம் பற்றிய விமர்சனங்களும் புதிய விடுதலைப்பாதைகளின் தேடல்களும் நம்மை மனித வரலாற்றின் பொதுவான விடுதலைப் போக்குகள் பற்றிய தத்துவங்களுக்கும் பிரெஞ்சுப் புரட்சி போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் இழுத்துச் செல்லுகின்றன.*

◉ *வரலாற்றின் விபத்தோ என்னவோ சோஷலிசத்தின் வீழ்ச்சியைக் கண்டு முதலாளித்துவம் கொட்டிவரும் வெற்றிப் பேரிகையின் ஒலியையும்விட முதலாளித்துவத்தின் அமைப்புரீதியான சிக்கல்களினால் வரும் பெருமூச்சுக்களும் ஓலங்களும் பயங்கரமாய் ஒலிக்கின்றன.*

◉ *Fukuyama சொல்கிறார்; 'கம்யூனிசமல்ல லிபரல் ஜனநாயக முதலாளித்துவமே மானிடத்தின் இறுதி நிலையம். இதுவே மார்க்ஸ் காணவிளைந்த வர்க்கமற்ற சமூகம்' வாசகர் முகத்தைச் சுழிப்பதைக் காண்கின்றேன். என்ன Fukuyama வும் மார்க்சிஸ்டா?*

◉ *தெற்கத்திய நாடுகளில் நவ லிபரலிசம் பூரண பொருளாதாரவாதமாக சர்வதேச மூலதனத்தின் சேவகனாகச் செயல்படுகின்றது. இதை எதிர்ப்பவர்கள் பலர் பின்னோக்கிய தேசியவாதத்தைப் பின்பற்ற முயற்சிக்கின்றார்கள். ஆனால் இது பயன்தராது. இங்கு முக்கியமானது ஜனநாயக உரிமைகளைச் சமூக நலன்களுடன் இணைக்கும் போராட்டமே.*

1970 களின் பிற்பகுதியிலிருந்து லிபரலிசப்போக்குகள் பலவடிவங்களில் எழுந்தவண்ணமிருக்கின்றன. சோவியத் அமைப்பின் வீழ்ச்சி, சீனாவின் கொள்கை மாற்றங்கள் பூகோளத்தின் வடக்கிலும் தெற்கிலும் சோஷலிச இயக்கங்களின் தோல்விகள் பின்னடைவுகள்- இவை எல்லாமே லிபரல் அலைகளின் வளர்ச்சிப் போக்குகளுக்கு உதவியுள்ளன. ஆனால் லிபரல் போக்குகளுக்கு வரைவிலக்கணம் கொடுப்பது அவ்வளவு சுலபம் அல்ல. ஏனெனில் லிபரலிசம் எனும் போது அந்த வார்த்தையைப் பிரயோகிப்பவரையொத்து அதன் கருத்து வேறுபடலாம். உண்மையில் லிபரலிசத்திற்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு பொதுமயமான கோட்பாட்டு ரீதியான விளக்கத்தைக் கொடுப்பது இன்றைய நிலையில் முடியாது. ஒருபுறம் எழுச்சி பெற்றுவரும் புதிய வலதுசாரிப் போக்கின் பிரதிநிதிகள் தம்மை லிபரல்களாகக் காட்டிக்கொள்கின்றார்கள். மறுபுறம் தனிமனிதரினதும் சமூகத்தினதும் விடுதலைக்குப் புதிய மார்க்கங்களைத் தேடும் இயக்கத்தினரும் லிபரல் மரபில் வந்த அல்லது அதனுடன் தொடர்புள்ள பூர்ஷ்வா புரட்சிகளின் மரபுதந்த சுலோகங்களைத் தம் பதாகைகளில் பதிக்கின்றனர். வலதுசாரிகள் சுயபோட்டிச் சந்தைப் பொருளாதாரம் பற்றிய கனவுகளைப் பொருளாதாரக் கொள்கைகளாக்கி இன்றைய மேற்கு நாடுகளின், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின், பின்தங்கிய நாடுகளின் பொருளாதார நெருக்கடிகளின் தீர்வுகளாய் முன்வைக்கின்றன. புதிய இடதுசாரிகளோ பிரெஞ்சுப்புரட்சியின் அமெரிக்கப்புரட்சியின் உரிமைப்பிரகடனங்களின் மொழியிலே பேசுகின்றார்கள். சமத்துவத்திற்கும் விடுதலைக்கும் அடிநாதமான புதிய ஜனநாயகமொன்றின் தேடலுக்கு இப்புரட்சிகளிடமிருந்து ஆகர்ஷத்தைத் தேடும் இவர்கள் அரசுக்கெதிரான அரசியலுக்கு ஒரு புதிய உள்ளடக்கத்தைக் கொண்ட சுயாதீன சமூகத்திற்கான (Civil Society) போராட்டத்திற்கு லிபரல் சிந்தனைமரபுசாரிகளிடமிருந்து கோட்பாடுகளைத் தேடுகின்றார்கள். அவற்றின் உதவியுடன் புதிய சோஷலிச சிந்தனைப் போக்குக்கு வித்திட முயற்சிக்கின்றார்கள். தோல்வியடைந்த சோஷலிசம் பற்றிய விமர்சனங்களும் புதிய விடுதலைப்பாதைகளின் தேடல்களும் நம்மை மனிதவரலாற்றின் பொதுவான விடுதலைப்போக்குகள் பற்றிய தத்துவங்களுக்கும் பிரெஞ்சுப் புரட்சி போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் இழுத்துச் செல்லுகின்றன. இன்றைய போக்குகளை அவதானிப்போர் குழப்பமடையலாம், புதிய நம்பிக்கைகளைப் பெறலாம், விரக்தியடையலாம், "மேற்கத்திய" சிந்தனைகளுக்கெதிராக மாறி தேசியவாதியாக மாறலாம்.

ஆனால் இந்தப் போக்குகளிடமிருந்து ஒரு தெளிவான அடிப்படைப் பாடத்தை நாம் கற்கலாமென நம்புகின்றேன். இடதுசாரிகள், சோஷலிசவாதிகள் மட்டுமல்ல. சமீபகாலம்வரை மிகவும் தன்நம்பிக்கையுடன் இயங்கிய முதலாளித்துவ அரசியல்ஸ்தாபனத்தோரும் நிலைகுலைந்துள்ளனர். இருசாராருமே வேறொரு நிலைப்பாட்டை நோக்கி நகர்ந்தவண்ணம் இருக்கின்றனர். சோஷலிசத்தின் வீழ்ச்சி வலதுசாரிகளுக்கும் முதலாளித்துவ அமைப்பிற்கும் சாதகமான நிலைமைகளை உருவாக்கியிருக்க

லாம். ஆனால் இது முதலாளித்துவத்தின் அமைப்புரீதி யான பிரச்சனைகளுக்குத் தீர்வைக் கொடுக்கவில்லை. உலக முதலாளித்துவத்தின் பொருளாதார மந்தமும் சிக்கல்களும் அதன் உள்ளார்ந்த இயக்கப்பாடுகளினால் ஏற்பட்டவை. சோஷலிசத்தின் உலக ரீதியான வீழ்ச்சி முதலாளித்துவத்தின் சிக்கல்களுக்குத் தீர்வாகாது என் பதை இன்றைய வரலாற்றுக்கட்டம் உணர்த்துகின்றது. வலதுசாரிகள் சுயபோட்டிச் சந்தைப்பொருளாதார லிபரலிசத்திடம் சரணடைய அவர்களின் பரந்த வலயத் தின் மற்றொரு வலதுசாரிக் கோஷ்டியினர் நிறவாதத் தையும், நவநாற்சிசத்தையும் (Neonazism) கிளறிவிடுகின் றனர். லிபரல் மரபின் அரசியல் உரிமை மனிதசமத்துவம் பற்றிய விழுமியங்களை இவர்கள் (நவநாற்சிட்டுக்கள்) நிராகரிக்கின்றனர். இந்த விழுமியங்களையே புதிய சமூக இயக்கங்கள் உள்வாங்கியுள்ளன.

ஆகவே வரலாற்றின் விபத்தோ என்னவோ சோஷலிசத் தின் வீழ்ச்சியைக் கண்டு முதலாளித்துவம் கொட்டி வரும் வெற்றிப் பேரிகையின் ஒலியையும்விட முதலாளித் துவத்தின் அமைப்புரீதியான சிக்கல்களினால் வரும் பெருமூச்சுக்களும், ஓலங்களும் பயங்கரமாய் ஒலிக்கின் றன.


மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளின் தொடர்ச்சியான பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகளாக வேலையில்லாத்திண்டாட்டம், நிறவாதம், சர்வதேச வர்த்தக முரண்பாடுகள், பொருளாதாரத் தேசியவாதம் இப்படியே பல தெட்டத்தெளிவாய்த் தெரியும் போது அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான Francis FUKUYA MA லிபரல் ஜனநாயகமே வரலாற்றின் இறுதிக்கட்ட மென அறிவித்துள்ளார். FUKUYAMA வின் தத்துவார்த் தப் பார்வையில் மார்க்சின் வரலாற்றுப் பொருள்வாதம் மாற்றி எழுதப்படுகின்றது. FUKUYAMA சொல்கிறார்; 'கம்யூனிசமல்ல லிபரல் ஜனநாயக முதலாளித்துவமே மானிடத்தின் இறுதி நிலையம். இதுவே மார்க்ஸ் காண விளைந்த வர்க்கமற்ற சமூகம்'. வாசகர் முகத்தைச் சுழிப்பதைக் காண்கின்றேன். என்ன FUKUYAMA வும் மார்க்சிஸ்டா? என்ன செய்வது மார்க்சிஸ்டுக்கள் விபரல் மொழியில் பேசுகின்றார்கள். FUKUYAMA மார்க்சிய - ஸோலிய மொழியில் பேசுகின்றார். ஆகவே சொற்களுக் கும் அப்பால் சென்று உட்கருத்தைத் தேடுதல் இன்றைய தேவை. புதிய கோட்பாடுகள் தேவை. ஆனால் பழைய சொற்களே உதவிக்கு வருகின்றன. வெறும் சொற்கள் அல்ல. விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் எனும் போது வரலாற்றை மாற்ற விளைந்த போராட்டங்களல் லவா முக்கியத்துவம் பெறுகின்றன. அடிப்படைப் பிரச் சனை என்னவெனில் பூர்ஷ்வா ஜனநாயகப்புரட்சியின் இலட்சியங்களை இதுவரை பூரணமாக எந்தச் சமூகமும் அடையவில்லை. இது பிரெஞ்சுப்புரட்சியின் அல்லது ஐரோப்பிய முதலாளித்துவத்தின் பிரச்சனை என நாம் சொல்லி விலகிக்கொள்வதில் நியாயமில்லை. ஐரோப் பிய மையவாதிகள் எப்படி இத்தகைய சர்வலோக ரீதி யாயான விழுமியங்களைத் தேசியமயப்படுத்த முயல்கின் றார்களோ அதேபோல் நம்மில் பலர் (தெற்கத்திய நாட்டவர்கள்) அவ்விழுமியங்களை விதேசியமயப்படுத் துவதன் மூலம் நமது நாகரீகப் பின்னடைவுகளை தேக் கத்தன்மைகளை நியாயப்படுத்த முயல்கின்றார்கள். இரண்டையும் நிராகரித்தல் அவசியம்.

சுயபோட்டிச்சந்தை விபரல்வாதிகளுக்கு ஏற்கனவே வரலாறு பலம்வாய்ந்த பாடத்தைக் கற்பித்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பாவில் மூலதனத்திற்கெதிரான வர்க்கப்போராட்டங்கள் சுய போட்டிச் சந்தையைக் கட்டுப்படுத்தும் போராட்டங்க ளாக, சமூக நலன்களைப் பேணும் போராட்டங்களாக அமைந்தன. இதன்விளைவுகளால் பிறந்த வர்க்கசமர சமே முதலாளித்துவ சமூகநல அமைப்புபெனும் சமூக உடன்படிக்கை (Social Contract). இன்று மேற்கின் புதிய வலதுசாரிச்சக்திகள் இந்த சமூக உடன்படிக்கையை முற்றாக அழிக்க முற்பட்டுள்ளன. அதில் கணிசமான வெற்றியும் கண்டுள்ளன. இதற்கெதிரான போராட்டங் கள் இன்னும் தெளிவான வேலைத்திட்டங்களைக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் பலவடிவங்களில் அவை தொடர்கின்றன.

தெற்கத்திய நாடுகளில் நவ லிபரலிசம் பூரண பொரு ளாதாரவாதமாக சர்வதேச மூலதனத்தின் சேவகனாகச் செயல்படுகின்றது. இதை எதிர்ப்பவர்கள் பலர் பின் னோக்கிய தேசியவாதத்தைப் பின்பற்ற முயற்சிக்கின்றார் கள். ஆனால் இது பயன்தராது. இங்கு முக்கியமானது ஜனநாயக உரிமைகளைச் சமூக நலன்களுடன் இணைக் கும் போராட்டமே. அதாவது ஜனநாயப்புரட்சியின் மீட்சியே வெகுஜன இயக்கங்களின் நோக்கமாய் அமைய வேண்டும்.

வடக்கின் புதியதேடல்கள் சோஷசலிசத்திற்கான மாற் றுப்பாதைகளைத் திறக்கலாம்- அதேபோல் தெற்கின் அடிப்படைத்தேவைகள் உரிமைகள் என்பனவற்றிற் கான போராட்டங்கள் மக்கள் ஜனநாயகத்திற்குப் புதிய வழிகளைக் காட்டலாம். *

* * * *




Nationalisme et République n°4

நான் எழுதும் அல்லது எழுதமுற்படும் கவிதைகள் 'ழாக் ப்ரேவரின்' சிந்தனைக்குரியவை.



காதல் பற்றிய கனவுகள்
கரையக் கூடியனவா?
கரையாமல் திண்மமாய்....
காதலே வாழ்வாய்....
வாழ்வே காதலாய்-
வாழ்தல் கடினமானது.

இந்தவகையில், இவரை நான் இனங் காண்கிறேன். தயவுசெய்து, எனக்கென எந்தப் பட்டமும் சுமத்தாமல் இந்தக் கவிதைகளை மிக ஆர்வத்துடன் வாசிக்க வேண்டுகின்றேன்.

ஈழத்தில், மாவிட்டபுரம் புலவர் சச்சிதானந்தன் 'ஆனந்தத்தேன்' என்ற நூலில் ஒரு கவிதை எழுதியிருந்தார்.

"வாடாத காதலிது வற்றாத காதலிது
தேடாத மூப்பினிலும்
திரைநரைகளுற்றாலும்
வாடாது வாடாது வாசமுடன் வீசுமடி!"

'சங்கம் புழைக்கும், மாயாகோஸ்கிக்கும்' என்ற தலைப்பில் அ.யேசுராசா காதலின் வசீகரக் கொடுமை தாக்க, தற்கொலை தன்னால் செய்யமுடியாது என்ற அற்புதமான அந்தக் கவிதையை அந்தக் காலத்தில் எழுதினார்.

ஈழத்தில் பிரபலமான கவிஞர்கள் பலர் காதலை.... மிக அற்புதமாக எழுதியுள்ளார்கள். போராட்டச் சூழலில் காதல் பற்றி எழுதமுடியாது என்பவர்கள் எங்கோ ஓரிடத்தில் முரண்படுகின்றார்கள் என்றுதான் நினைக்கின்றேன். புலம்பெயர்ந்த எழுத்தாளர்களுக்கு- 7,8 வருஷங்கள் இங்கே வாழ்ந்த பிறகு 'போராட்டச்சூழல்' அவர்களுக்கு இருக்கின்றதா என்பது கேள்விக்குறியே! ஒரு அரைவாசி மேற்கத்தியப் பிரஜை ஆனபின்னர் தமது உணர்வு, தமது சூழல், பற்றிய உந்துதலுக்கு ஆட்பட்டே ஒரு கலைஞனால் தன் கலைப்படைப்பை உருவாக்குதல் சாத்தியமாகிறது.

காதலை கவிதையாக்கியும் கவிதையைக் காதலாக்கியும் வளர்ந்து வந்திருக்கிறது தமிழ்க் கவிதை உலகம். இந்த வகையில் அண்மையில் நான் இரசித்த காதல் கவிதைகளை உங்களுடன் பகிரலாம் என்றிருக்கின்றேன்.

கவிதையை மொழிபெயர்ப்புச் செய்யலாமா? என்ற கேள்விக்கு விடையாக 'இல்லை' என்று தான் சொல்லுவேன். ஆனால் தழுவமுடியும். அதுவும் ஒரு கவிஞனால்தான் முடியும் என்பேன். ஒரு ஆங்கிலக் கவிஞன்- நண்பனுடன் சில இரவுகளைக் கழித்த போது எனக்குக் கிடைத்த கவிதைகள் இவை. காதலின் அடி- நுனியெல்லாம் துருவி எழுதப்பட்டிருக்கின்றன போல் பட்டது. மூன்றாவது கைக்கூடாக வருவதால்... கவிதையே சிலவேளை செத்துவிட்டிருக்கக்கூடும். அதனால் என்ன? இப்பொழுதெல்லாம் நாங்கள் சாகாத உயிருள்ள கவிதைகளையா வாசித்துக் கொண்டிருக்கின்றோம்? சரி, கவிதைகளை வாசியுங்கள்.

# 'JACQUES PREVERT' (ழாக் ப்ரேவர்) சில கவிதைகள்..... சில பகிர்வுகள்.....

– க.ஆதவன்

**1**

தோடம்பழம் மேசை மீது
உனது உடைகள் தரை மீது
நீ,
என் கட்டிலின் மீது!
உன் மென்மைகளின்
கொடுப்பனவுகள் முடிந்து போய்....
எனக்கு மீதமிருப்பது
இந்த இரவின் குளிரல்ல.
வாழ்வு பற்றிய சூடுதான்.



**2**

உனக்காக
எல்லாமே உனக்காக.
'பறவை'களின் சந்தைக்குச்
சென்றேன்.
பறவைகளை வாங்கினேன்.
உனக்காக
என் - எம் - காதலுக்காக.
பூக்களின் சந்தைக்குச் சென்றேன்
வாங்கினேன் பூக்களை
உனக்......
எனக்.....
காதலுக்காக.

கொல்லனின் பட்டறைக்குச்
சென்றேன்.
இரும்புச் சங்கிலிகளை....
பாரமான சங்கிலிகளை
வாங்கி வந்தேன்.
உனக்காக..எனக்காக..காதலுக்காக!
அடிமைகளின் சந்தைக்குச்
சென்றேன்
உன்னைக் காணவில்லை.
தேடியும்.

## 3→

அவன் தலையாட்டினான்
'இல்லை' என.
அவனது இதயம் சொல்லிற்று
'ஆம்' என.

❋

அவன் தன் காதலுக்கு
'ஆம்' என்றான்.
ஆசிரியர் முன்
'இல்லை' என்றான்.

❋

அவனை ஆசிரியர் முழுந்தாளிடச்
சொன்னார்
தண்டனையும் பிரம்பும் கூடவே
வந்தது.

❋



ஆமா? இல்லையா?

❋

எனது 'ஆமும்'
உங்களது 'ஆமும்'
வேறு என்றான் - அத்துடன்
'இல்லை'யும் வேறு என்றான்.
(இதனை நினைத்திருக்கக்கூடும்
சொல்லவில்லை)

❋

திடீரென மாணவர் சிரித்தனர்.
ஏளனம் செய்தனர்.

❋

எழுந்தான் அவன்
கரும்பலகையில்
மிகத் தெளிவாய்
முகங்களின் மகிழ்வை எழுதினான்.

## 4→

முதிர்ந்தவர்களினதும்
சுயநலவாதிகளினதும் வழிகள்.
ஐயோ!
குழந்தைகளுக்காக - உங்கள்
ஒவ்வொரு 'கிலோமீற்றரும்'
ஒவ்வொரு வருடத்தை.....
அத்துடன்,
பழைய கோட்டையைக் கட்டும்
ஒவ்வொரு செங்கல்லாய்......!

## 5

மேசையில் அமர்ந்தார்கள்
சாப்பிடவில்லை.
'பார்ட்டி'யில் இருந்தார்கள்
சாப்பிடவில்லை.
அவர்களுக்கென வழங்கிய
தட்டுடன் அவர்கள்
தங்கள் தங்கள் தலைகளுக்குப்
பின்னால்-
'தட்டு'களை வைத்துக்
கொண்டார்கள்.

---

*(தட்டு என்பது plates எனவும்;
'தட்டுதல்' என
ஈழத்திலும் பொருள் கொள்க.)

## 6→ பாடல்

என்ன நாள் இது?
எல்லா நாளும் இதுதானோ?

(என்ன.....)

நண்பனே...
இது தானா காத லென்பது , - என்
காதல் என்பது.

(என்ன....)

நானும் நீயுமாய்
காதலாய் வாழ்வாய்
வாழ்ந்தோம், வாழ்ந்தோம்.

(என்ன......)

தெரிந்ததா.... இல்லைப் புரிந்ததா
வாழ்வு என்பது.
தெரிந்ததா..... இல்லைப் புரிந்ததா
காதல் என்பது.
என்ன நாள் இது என
என்ன நாள் இது என
தெரிந்ததா..... இல்லைப் புரிந்ததா?
(என்ன......)

## 7→

ஆயிரம்..... ஆயிரம் ஆண்டுகள்
இந்தத் தளம் - பரப்பு
சொல்ல முடியாத - கதை
சொல்வேன்.
ஒரு முழுமையின் சிறு கணத்தில்
நீ முத்தமிட்டதை,
நான் முத்தமிட்டதை
ஒரு நட்சத்திரத்தில்-
பனிமூடிய ஒரு குளிர்காலச்
சிறு ஒளியில்......!
அந்த நட்சத்திரத்தின் பெயர்
பூமி!
ஆம் 'பாரிசி'ல் தான்.
பாக்கில் (montsouris)!

## 8→

ஒரு குதிரை
பள்ளத்தாக்கின் நடுவே
பாய்கிறது. தன்பாட்டில்.
இலைகள்,
அவன் தலைமேல் நடுங்கியபடி
வீழ்கின்றன.
எமது காதலும் நடுங்கியபடி.....
சூரியன் கூட....!

## 9→

நான் விளக்கை வைத்திருந்தேன்.
நீ ஒளியை வைத்திருந்தாய்.
'திரி'யை யார் விற்றார்கள்?

## 10→

எனது வாழ்வு
எனக்குப் பின்னால் இல்லை.
முன்னாலும் இல்லை.
இப்பொதெல்லாம் - அது
உள்ளேதான் இருக்கப்பார்க்கிறது.

❋ ❋ ❋

---

மேலே உள்ள 10 கவிதைகளும் வெவ்வேறு தலைப்புகளில் வெவ்வேறாய் வெளியானவை. சிலவேளைகளில் ஏதும் தொடர்ச்சிகளை வாசகர்கள் காண்பினும் காண்க. மீண்டும் ஒரு முறை வலியுறுத்துகிறேன், இவை நேரடி மொழி பெயர்ப்பல்ல. மொழி பெயர்ப்பே அல்ல. தழுவல்.

'ப்ரேவரை' நான் முதன் முதலில் கண்டு கொண்டது - 1976ம் ஆண்டு ஒரு 'பிரக்ஞை' இதழில்:

'நினைவிலிருக்கிறதா - பார்பரா
அன்றுமழை பெய்திருந்தது......' என்று தொடங்கிற்று. அந்தக் கவிதை அற்புதமாக மொழிமாற்றம் செய்யப்பட்டிருந்தது. பின்னர் இப்பொழுது தான் 'ப்ரேவரை' விளங்கிக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

'கலாப்ரியா' எனும் தமிழ் நாட்டுக் கவிஞர் தன் 'சசியாஞ்சலி'யில் எழுதியுள்ள காதல் கவிதைகள் சில 'ப்ரேவரை' ஒத்திருக்கின்றன. 'ப்ரேவரின்' பாதிப்பில் நானும் ஒரு கவிதை எழுதினேன். படித்துப் பாருங்கள்.

முடிவெடுத்த பின்னர்.......

வானம் விரிந்து கிடந்து
வாழ்வும் கூடவே!
நட்சத்திரங்கள் ஜொலித்தன.
நீயும் கூடவே!
இராக் குரிவிகள் இறகுகளை அசைத்தன.
அந்தக் கடற்கரை பனிமூடிய இரவில்
உறைந்திருக்கக்கூடும்.
மரங்கள் குளிரின் அதிருப்தியை
ஏதோ ஒரு விதத்தில் தெரிவிக்கின்றன.
எல்லாந்தான்.
அதிருப்தியை எங்ஙனம் தெரிவிப்பது
என்பது பற்றி......
மானிடர்க்குப் புரிந்த மொழியென
நான் கவிதையைக் கண்டு கொண்டேன்.
அவள் கண்ணீரைக் கண்டு கொண்டாள்.
வானமும்..... வாழ்வும்
விரிந்து கிடக்க-
பிரிந்து போனோம் நாம்!

வாசகர்கள் பிரியப்படுமிடத்து, 'ப்ரேவரின்' தழுவல் கவிதைகளை மேலும் பகிர்ந்து கொள்ளலாம்' பிரியம் இல்லையென்றாலும் ஒன்றும் குறைந்து போய் விடாது. இன்ன இன்ன கவிதைகளைத்தான் விரும்ப வேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமும் இல்லை. கலைஞனுக்குச் சுதந்திரம் இருப்பது போல் நுகர்வோனுக்கும் சுதந்திரம் உண்டல்லவா?

ழாக் ப்ரேவர், neuilly என்ற இடத்தில் 1900ம் ஆண்டு பிறந்தார். 1925-1929 ஆண்டு காலம் பகுதியில் சாரியலிஸ்ற் (surrealist) குழுவின் நடவடிக்கைகளில் பங்குகொண்டபின்னர், தனது படைப்புக்களை பத்திரிகைகளில் வெளியிடத் தொடங்கினார். அத்துடன் 'ஒக்ரோபர் குழு' ( THE OCTOBER GROUP ) என்னும் பார்வையாளர்களுடன் நேரடித் தொடர்பைத் தேடிக் கொண்டிருந்த ஒரு நாடகக் குழுவிற்காக தன் படைப்புகளை வழங்கினார்.

அவரது வரிகள் பெரும்பாலும் வாயால் சொல்லப்படக் கூடியவையாக..... 'கவியரங்குத்' தன்மை கொண்டனவாக இருந்தன. சிறப்பாக 'ஜோசப் கொஸ்மா' (JOSEPH KOSMA) இசையமைத்த பாடல்கள் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவை.

1945 ல் RENE BERTETE எடிற் செய்த "PAROLES" (WORDS) 'சொற்கள்' என்ற இவரது முதற் புத்தகம் பலரது கவனத்தை ஈர்த்தது. சுமார் 50 க்கு மேற்பட்ட திரைப்படங்களுக்கு 'ப்ரேவர்' பிரதிகளும் வசனங்களும் எழுதியுள்ளார். 1977 ம் ஆண்டு தன் மனைவி JANINE அருகில் இருக்கையில், OMONVILLE-LA PETITE ல் காலமானார்.

## ஜாக் பிரேவேர் (Jacques Prevert) (1900 - 1977)

*மானுடவியல் தன்வளர்ச்சிப் போக்கினையும், அனுபவப் பாடங்களையும், காலத்திற்குக்காலம் வரலாற்றுப்பேரேட்டில் பதிவு செய்து அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச்செல்வது வழக்கம். மானுடவியலின் 20ம் நூற்றாண்டுப் பதிவேடு தன் இறுதி அத்தியாயத்தின் பக்கங்களை புரட்டும் இவ்வேளையில், இந்தப்பதிவேட்டின் ஆரம்பப்பக்கங்களில் இடம்பெற்ற ஜாக் பிரேவேர் (JACQUE PREVERT) ஐ கொஞ்சம் நினைவு கூரலாமே. பிரான்சு மண்ணுக்கும், மண்ணின் மொழிக்கும் பெருமிதம் தேடித்தந்த கவிஞனல்லவா? 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அடிகளற்ற (Vers Libre) புதுக்கவிதைகளைப் பிறப்பித்து பிரஞ்சுமொழியின் சுவைஞர்களுக்கு இன்பூட்டியவர்- மொழி படிக்கவிழையும் மாணவர்களுக்கான பாடத்திட்டங்களில் இவரது சில கவிதைகள் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.*

*பிரான்சில் நியூயி சூர் செயின் (Neuilly sur Seine) நகரில் சாதாரண தொழிலாளிக் குடும்பத்தில் பிறந்தார். தந்தை ஆந்திரே பிரேவேர் (Andre Prevert) நிரந்தரத் தொழிலற்ற, கத்தோலிக்க திருச்சபையின் உதவிதொகை பெற்றுவரும் சாதாரண ஏழை. தனக்குக் கிடைத்துவரும் உணவுப்பொருட்களையும், ஆடைகளையும் விற்பனை செய்யும் சிறு வியாபாரி.*

*தன்சிறுபிராயத்தை நினைவுகூரும்போது, தந்தையின் செயல்பாடுகளில் உடன்பாட்டைக் காட்டாவிட்டாலும், தனக்கு நாடகங்கள் பார்க்க தேவாலயங்கள் மூலம் 'இலவச அனுமதிச் சீட்டை' ப் பெற்றுத்தந்த தந்தைக்கு நன்றி பாராட்டத் தவறவில்லை.*



*ஏழைக்குடும்பச்சூழல் இவரது 13வது வயதில் பள்ளிப்படத்தை தொடர முடியாது நிறுத்துகிறது. Bon Marche (நல்ல சந்தை) எனும் வியாபார நிலையத்தில் சிற்றூழியராகிறார்- நல்லவாசகனாக இருந்தமையும், நாடகங்கள் பா[illegible]மையும், [illegible]ண்பர்களுடன் நிறைய விவாதங்கள் புரிந்தமையும் இ[illegible]ர எழுத்துத்துறையில் இயல்பாக ஈடுபடவைக்கிறது. இவரது ப[illegible]துகளில் அதிகம் பேசப்பட்ட 'சாரியலிசம்' தொடர்பாக [illegible] கொண்டிருந்தாலும் இவர் 'சாரியலிசம்' தொடர்பாக அ[illegible] அலட்[illegible] கொள்ளவில்லை- இவர் கைக்குக்கிடைத்த பேனா[illegible]வில்லாமல் காகிதங்களில் ஓடியது. கவிதைகள், கட்டுரைகள், பா[illegible]ங்கள், சினிமாவுக்கான உரைநடைகள்.... என வடிவங்கள் பலவாறு அமைந்தன. கம்யூனிச சித்தாந்தத்தில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் இவர் எந்த அமைப்புகளிலும் தன்னை இணைக்கவில்லை. நண்பர்களுடன் அளவளாவுதல், பொழுதைக் கழித்தலென்பது இவரது பிடித்தமான செயல்பாடாகவிருந்தது. இவரது நெருங்கிய நண்பர்களில் ஒருவரான, 'பிக்காசோ (Picasso) வை பெரிய ஓவியரல்ல ஆனால் சிறந்த ஓவியர்' என விமர்சிக்கின்றார்.*

*இவருக்கு பிடிக்காதவை ஆளுகை (Anarchique), பெரிய (Grand), குருவழிபாட்டிற்குரிய (Anticlericale) என்ற சொற்களுள் புதைந்துள்ள எண்ணப்பாடுகள்- நிறையவே எழுதிய பிரேவேர் அதை சேகரித்து வைக்கவில்லை. தன் மனம்போன போக்கில் நண்பர்களிடம் விநியோகித்துவிட்டார்.*

*சுதந்திரத்தையும், மனிதநேயத்தையும் விரும்பும் ஜாக் பிரேவேர் 1968ல் பிரான்சில் ஏற்பட்ட மாணவர் எழுச்சிக்கு தார்மீக ஆதரவளித்து துண்டுப்பிரசுரங்களை எழுதியுள்ளார்.*

*அவரது, ஒரு பறவைக்கான சித்திரம் என்ற பிரபல்யமான கவிதையில் <<காத்திருந்து கூட்டில் அடைத்து வந்த பறவையை வைத்துக்கீறிய ஓவியத்தின் வெற்றியின் குறியீடாக, அந்தப் பறவையின் சிறகை ஒடித்து கையெழுத்து போட்ட நிகழ்வு'>>என்ற நக்கலான வர்ணனை இவரது மெல்லியஉணர்வை பறையிடுகின்றது.*

*1956 இல் விக்டர் ஹுகோவின் (Victor Hugo) நாவலான 'Notre Dame de Paris' ற்கு திரைக்கதை அமைத்தது மிகப்பெரும் புகழைக் கொடுத்தது. 1958 இல் 'ELLE' (அவள்) மாதஇதழில் 'பிறேவேரின் நினைவுகள்' என்ற தலைப்பில் தன் அனுபவ நினைவுகளைப் பதித்துள்ளார்.*

- பிரபா

● நோர்வேயில் வதியும் கவிஞர் ஜெயபாலன் தன் கவிதையொன்றில் ஸ்கன்டிநேவிய நாடுகளை 'மதகுரு' என வர்ணித்திருந்தார். தீராத பிரச்சனைகளை கொண்டிருக்கும் நாடுகளிடையில் இணக்கம் கொணரும் பணியில் சத்தமிடாத 'சமாதான தரகராக' நோர்வே செயல்படுவதும் பலர் அறிந்ததே.

துருவ வடக்குநாடான நோர்வே சென்றிருந்தபோது, நீரும் நிலமுமாய் பிணைந்த அமைதியழகு என்னை ஈர்த்திருந்தது. அண்மையில் படிந்த செய்தி நோர்வையின் வேறொரு முகத்தை எனக்கு காட்டியது.

Mari Boine என்னும் பாடகி ஐரோப்பிய இதழ்களின் கலை இலக்கிய பக்கங்களில் இடம் பிடித்திருந்தாள். தான் ஒரு 'Shaminist' சமூகத்தவளாக இருப்பதில் பெருமை கொள்கின்றேன் என எடுத்த எடுப்பிலேயே கூறிவிடுகின்றாள். வடதுருவத்து நாடுகளான நோர்வே, சுவீடன், பின்லாந்தின் விழிப்போரமாக வாழும் ஏறத்தாழ (40 000) நாற்பதாயிரம் மக்கள் மட்டுமே பேசும் Sami மொழியில் தான் அவர்தன் பாடல்களை இசைக்கின்றாள்.
"எங்களது இயற்கை மூலவளங்களை நோர்விஜியர்கள் சூறையாடுகின்றனர். எமது மக்களால் அதனை ஜீரணிக்க முடியவில்லை. அவர்களின் குரலாக எனது பாடல்கள் ஒலிக்கின்றன" என்கின்றார்.

நோர்வேயில் மட்டும் அறிமுகமான இப்பாடகி தற்போது ஐரோப்பாவில் அறியப்பட்டவராய் மாறிவருகின்றார். இவரது நாட்டார்பாடல் வடிவமும், இசையும் மொழி தெரியாத போதும் பலரையும் கவர்கின்றதாம். மே மாதத்தில் பிரான்சில் இசைப்பயணம் மேற்கொள்கின்றாள். அவள் கூறுகின்றாள் "18ம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் Samiland இல் நுழைந்தபோது மதப்பரப்பாளர்கள் Sami மொழிப்பாடல்களை, இசையை தடை செய்தனர், இசைக்கருவிகளை எரித்து அழித்தனர்! அப்பாடகி பற்றி- பாடல்கள் பற்றி.. நோர்வே நண்பர்கள் தெரிவிப்பராயின்......

● பிரெஞ்சு நாட்டவரான தமிழ்பேசும் ஜெரா பற்றி பிரான்சில் வதியும் நம்மவர்பலருக்கும் தெரியும். தனது முதுநிலைப்பட்ட ஆய்வுக்காக 'இலங்கைத் தமிழர்' பற்றி எழுதிகொண்டிருக்கிறார். இவ்வருடத் தொடக்கத்தில் இலங்கை சென்றிருந்த இவர் திரும்பியதும் என்னைச்சந்திக்க அழைத்திருந்தார். தன் இலங்கைப் பயண அனுபவங்கள் பற்றி பரிமாறிய அவர்- மட்டக்களப்பு பல்கலைக்கழகம் சென்றிருந்த சமயம் தமிழ்த் துறைத்தலைவரான சி.மௌனகுரு அவர்களை சந்தித்ததாயும், நூல்கள் தந்திருப்பதாகவும் கூறி நூல்களைத் தந்தார்.

கலாநிதி சி.மௌனகுரு எழுதிய - 'ஈழத்து தமிழ்நாடக அரங்கு', சித்திரலேகா மௌனகுரு எழுதிய - 'பெண் நிலைச் சிந்தனைகள்'

# மௌனத்தின்

## நாட்குறிப்பிலிருந்து......

o------------------------------ கி.பி.அரவிந்தன்

இவற்றிற்கான விமர்சன அறிமுகம் மௌனத்தில் இடம் பெறக்கூடும். ஆயினும் 'ஈழத்து தமிழ் நாடக அரங்கு' பற்றிய சிறுகுறிப்பாயினும் எழுத வேண்டும் போல் இருந்தது. நாடக அரங்கு பற்றிய ஆய்வு நூலில், ஈழத்தமிழரின் சமூகவியலும், வரலாறும், ஊடுபாவாக தென்படுவது எனக்கு முக்கியமாய் படுகின்றது. சில கருதுகோள்களுக்கான நல்ல தரவுகளை இதில் என்னால் பெற முடிந்தது. பல அரிய செய்திகள் இதில் இடம்பெற்றிருப்பதும், அவரது நீண்டகால உழைப்பு ஒருங்கிணைக்கப் பட்டிருப்பதும் என்னைக் கவர்ந்திருந்தன. அதற்கும் அப்பால்- தமிழில் நாடகம் உண்டா? என்ற கேள்விக்கான விடையும் தமிழிலேயே கிடைத்திருப்பதும் இந்நூலின் சிறப்பம்சம்.

ஆனால் ஐரோப்பாவில் தமிழ் - கலாச்சார காப்பாளர்கள்- 'கூத்தும் - பாட்டும் ஊரில் யாருடையது என்று தெரியும் தானே. இங்கேயும் அவர்கள் ஏதோ அலைகின்றார்கள்?, என இளக்காரமாக பேசிக் கொண்டு- கலாச்சாரத்தை கட்டியாண்டு பரப்பி வருகின்றார்கள்!- அவர்கள் இந்நூலை ஒரு தடவை படிப்பாராயின்....

● கடுமையான இதயநோயினால் பாதிக்கப்பட்டு மீண்டுள்ள 'எஸ்.வி.ஆர்' அவர்கள் தன் உடல்நலம் குன்றிய நிலையிலும் தம் எழுத்துப் பணியை உற்சாகமாகத் தொடர்கின்றார். தமிழில் உள்ள சிந்தனா பள்ளி முறைமையைக் கொண்ட சிலரில் எஸ்.வி.ஆர் குறிப்பிடத்தகுந்தவர். ஈழத்தமிழர் தம்வாழ்வின் நெருக்கடிகள் கூர்மையுற்ற நாட்களிலிருந்தே- ஈழத்தின் இலக்கியத்திலும், இலக்கியபரிமாற்றத்திலும், அக்கறையும், நேசிப்பும் கொண்டவர். சமூகநேசிப்பும் கொண்ட ஈழத்தமிழர் பலராலும் அறியப்பட்டவர் வாசிக்கப்படுபவர்.

எழுத்தும், மொழிபெயர்ப்பும், குடியுரிமை இயக்கச் செயல்பாடும், ஆழ்ந்த படிப்பும் கொண்ட எஸ்.வி.ஆரின் 'இந்து, இந்தி, இந்தியா' நூலும், வ.கீதாவுடன் இணைந்து மொழிபெயர்த்து தொகுத்த 'அவ்வப்போது பறித்த அக்கறைப் பூக்கள்' கவிதைநூலும் வந்து சேர்ந்தன. இந்திய இராணுவத்தை- அதன் அமைதிப்பணியை எதிர்கொண்டவர்களான நாம்- இந்திய கட்டமைப்பின் இடுக்களிடையே நசிந்து கிடக்கும் உண்மைகள் பற்றிய நூல். இந்துத்துவ தத்துவார்த்தத்தின் முகத்தை அறிய உதவும் நூல்.

சைவமும்- தமிழும் போய், இந்து - பகவத்கீதை என நம்மவர் அடையாளம் மாற்றுருப்பெற்றது பற்றியும்,

இந்துத்துவத்தை, இந்து இந்தியாவை, படைத்த பார்ப் பனியம் பற்றியும்- விபரிக்கும் நூல். இந்நூல் எழுப்பும் ஆய்வுக் கேள்விகள் பலருக்கு அதிர்ச்சி தர வல்லவை யாகும்-

'இந்தியாவின் தேசிய இனப்பிரச்சனை' பற்றியதான இறுதி அத்தியாயம் அரசியல் ஆர்வலருக்கு பயன்தரவல் லது. விவாதத்தை எழுப்புகிறது- அவர் எழுதுகின்றார் : தேசம், தேசியம் என்பன பற்றி ஒருவர் எத்தகைய கோட் பாட்டு வரையறையையும் வழங்கலாம். எத்தகையதொரு கலைச்சொற்களையும் பயன்படுத்தலாம். ஆனால் அவை செயலுக்கு வழிகாட்டியாக இல்லாமலிருக்குமே யானால் மார்க்சிய கோட்பாடாக இருக்க முடியாது. வர்க்கம், அரசு ஆகியனபற்றிய மார்க்சிய கோட்பாடுகள் அரசியல், வர்க்கப் போராட்டம் நடைமுறைச் சூழலிலி ருந்து வெட்டிப் பிரிக்கப்படுமேயானால் அவை உயிரற்ற சமூகவியல் கருத்தாக்கங்களாக அமையுமேயன்றி அறி வியல் ஆய்வுக்கான கருவிகளாக பயன்படா! ஆனால் எஸ்.வி.ஆரின் கருத்தாய்வையும், அதன் உண்மைச் சிறப்பையும் கெடுத்துவிடுவது நூல் தயாரிப்புத்தான். இன்றைக்கும் இவ்வகை அச்சிலும், அமைப்பிலும் நூல் வெளிவருகின்றதே! படிக்க, சென்றடைய தடையாகின் றது - நூல் தயாரிப்பு. நூல் பற்றிய விமர்சன அறிமுகம் பொருத்தமானவர்களால் எழுதப்படுமாயின்....

● ஒவ்வொரு பத்து செக்கண்டுக்கும் சுடுகருவியான துப்பாக்கி தயாரித்துக் கொட்டிக்கொண்டிருக்கின்றது. அதேவேளை தயாரிப்பு போதாமலும், விலை அதிகமா வதாலும் ஒவ்வொரு ஒன்பது செக்கண்டுக்கும் ஒரு துப்பாக்கி வீதம் இறக்குமதியும் செய்யப்படுகின்றது. 1200 நிறுவனங்கள் தயாரிக்கும் இச்சுடுகருவிகளை 284 000 விற்பனை நிலையங்கள் விற்கின்றன. இப்படி 212 மில் லியன் சுடுகருவிகள் விற்கப்பட்டுள்ளதில் 67 மில்லியன் சுடுகருவிகள் கைத்துப்பாக்கிகளாகும். ஏறத்தாழ ஒவ் வொரு தலைக்கும் பன்னிரண்டுகுண்டுகளுடன் ஒரு துப்பாக்கி வழங்கலாகியுள்ளது.



By Peterson in The Sun (Vancouver) CRW Syndicate

இளைஞர்கள் பெரிதும் விரும்புவதும், வைத்திருப்பதும் இராணுவம் பயன்படுத்தும் 9mm தன்னியங்கி பிஸ்டல் கள்தான். இது 15 - 24 வயதுக்குட்பட்டோர் இறந்துவரும் தொகையை ஆண்டுக்காண்டு அதிகரித்துச்செல்ல வழிவகுத்துள்ளது. 1985ம் ஆண்டு தொகையை விடவும் 1991ம் ஆண்டின் தொகை 40% தால் அதிகரித்துள்ளது. வயதுக்கட்டுப்பாடின்றி ஒவ்வொரு ஆண்டும் 38 000பேர் துப்பாக்கிக்கு பலியாகின்றனர். அநேகமானோர் தெருக் களிலேயே இறந்து கிடக்கின்றனர்.

இவை நடப்பது, எல்லாம் வல்ல அமெரிக்காவில்தான். உலக பொலிஸ்காரனாக தன்னை உருவகித்து, சட்டதிட் டம் வகுத்து, மீறுபவரை தண்டித்து, மனிதஉரிமை, சுதந்திரங்களை காப்பாற்றுவது போன்ற தலையான பணியில் ஈடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் அமெரிக்கா வின்- உள்நாட்டில் இப்படி "சில்லறை" விசயங்கள் நடக்கின்றன.

இன்று ஆயுதக்கட்டுப்பாடு, அணுஆயுத (பரிசோதனை) பரவல் கட்டுப்பாடு என்னும் அவர்களின் புதுஉலகக் கோட்பாட்டுகளை இவர்கள் தானே மற்றோருக்கு கற்பிக்கின்றார்கள். என்ன செய்வது?

● கதைசொல்லல் மரபு தமிழில் உண்டென்கிறார் கள். ஊருக்கு ஊர் கதை சொல்லிகள் இருந்தார்களாம். தமிழக சிறுகதையாளர் கோணங்கியை 'தமிழில் மீண்டும் கதை சொல்பவனின் வருகை' என அறிமுகம் செய்தி ருந்த நாகர்ஜுனன், "தமிழ் இலக்கிய மரபில் நெடுங்கா லம் இருந்துவிட்டு திடீரென காணாமல் போன கதை சொல்பவனை (Story Teller) மீண்டும் கோணங்கியின் 'மதனிமார்கள் கதை' மூலம் பார்க்கமுடியும். கதை சொல்பவன் கதாசிரியன் அல்லன்; மாறாக ஒரு கலாச் சாரத்தின் முக்கிய செயல்பாட்டை அதற்கே உணர்த்த முயல்பவன். இவன் தொல்கதைகள், தேவதைக்கதைகள் மூலம் வளையவருபவன். கடைசியாக தமிழ் நாவலுல கில் பிரதாப முதலியார் சரித்திரத்தில் தென்பட்டு பின்பு இலக்கிய உலகின் முன்வரிசையில் இருந்து தள்ளப்பட் டவன்..." எனச் சுட்டியிருந்தார். காணமல் போன கதை சொல்லிகள், மறைந்துபோன கதை சொல்லும் மரபு இவற்றை பேண கதை சொல்லிகள் அமைப்பை நடாத்தி வருகின்றனர் தஞ்சைப்பிரகாஷ் போன்றோர். மாலை நேரங்களில் கோயில் வெளிவீதிகளில் கதை சொல்லியும் வருகின்றார்களாம். நாகார்ஜுனன் கூறும் 'கதை சொல் பவ'னும், தஞ்சைப்பிரகாஷின் 'கதை சொல்லி'யும் ஒருவரைக்குறிக்கும் என்றே கருதுகின்றேன். தாயகம் துறந்த, புலம்பெயர்ந்த எம்மிடமும் சொல்வதற்கு கதை கள் நிறைய உண்டு. ஆனால் சொல்பவர்தான் இல்லை. 'கதை கட்ட' கெட்டித்தனம் உள்ள நமக்கு கதை சொல்ல முடியாது இருப்பது ஏனோ?

கதை சொல்லிகள் பெருகுதல் காலத்தின் தேவை. ●



# தனக்குச் சொந்தமில்லாத வீடு

# பெய்ரூட் கதைகள்

## என்ற தலைப்பிட்டுள்ள சிறுகதைத் தொகுப்பிற்கு எமிலி நஸ்ரல்லா எழுதிய முன்னுரை

லெபனானில் 1975 ஆம் ஆண்டில் போர் மூண்டது. முன்னெப்போதும் இருந்திராத வகையில் அந்நாட்டுச் சமுதாயம் வளத்தோடும் அறிவுச் செல்வத்தோடும் வாழ்ந்துவந்த காலம் அது. 1950 களின் இடைப்பகுதியிலிருந்து 1970 களின் இடைப்பகுதி ஈறாக இருந்த அக் காலகட்டத்தை ஒரு 'பொற்காலம்' என ஒரு சிலர் சித்தரிப்பர்.

அத்தகையதொரு சமூகச்சூழலை உருவாக்கிய காரணிகள் என இரண்டு முக்கிய விஷயங்களைக் கூறலாம்: ஒன்று, ஒரு பொதுவான தாராளவாதச் சிந்தனைச்சூழல்; மற்றொன்று தங்குதடையின்றிக் கருத்துக்களை எழுதவும் வெளியிடவும் அனுமதித்த ஒரு ஜனநாயக ஆட்சி. அத்தகைய சூழல்தான் லெபனானுக்கு- குறிப்பாக அதன் தலைநகரமான பெய்ரூட் நகரத்திற்கு - அரேபிய உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்களையும் அறிவாளிகளையும் ஈர்த்தது. அவர்கள் தேடிவந்தவையனைத்தையும் வழங்கக்கூடியதாக லெபனான் இருந்தது: பல்வேறு வகையான பண்பாட்டு அனுபவங்களை வரவேற்று இருபதாம் நூற்றாண்டு கொண்டுவந்த மாற்றங்களை உச்செரித்துக் கொள்ளும் நகரமாக அது விளங்கியது.

அத்தகைய சூழலின் ஒரு பகுதியாகவே அறிவாளிகள் பலரால் வழிநடத்தப்பட்ட பெண்கள் இயக்கமும் விளங்கியது. அவ் இயக்கத்தைத் தொடங்கியவர்களில் பெரும் பாலானோர் தலைமைப் பொறுப்புகளைத் தர்மும் பெறவேண்டிய தேவையை உணர்ந்த மத்தியதர வர்க்கப் பெண்கள்தாம்.

பெண் எழுத்தாளர்கள், தம்மைப்பற்றியும் தமது படைப்புகளைப்பற்றியுமான நம்பிக்கையோடு செயல்படத் தொடங்கினர். இத்தகைய நம்பிக்கை அவர்களது முன்னோடிகளிடம் கனவாக மட்டுமே இருந்தது. தமது படைப்புகள், ஒரு தொன்மையான, உன்னதமான பண்பாட்டின் தூண்களாக அமையக்கூடிய ஒரு எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்பு அப்பெண் எழுத்தாளர்களிடம் இருந்தது. அப்போது நிலவிய பண்பாட்டுச் சூழல், ஆயிரம் மலர்கள் பூத்தக் குலுங்குவதைச் சாத்தியமாக்கும் ஒரு இதமான கதிரொளிக்கு ஒப்பானதாக இருந்தது. பெண்களால் தமது உணர்வுகளை வெளிப்படையாகக் கூற முடிந்தது. மிகுந்த நம்பிக்கையுடன் அவர்களால் மிகவும் நுட்பமான தமது உணர்வுகளை தனிப்பட்ட உணர்வுகளை சமுதாயத்தின் கருத்துலகிற்குக் கொண்டுவர முடிந்தது. தட்டுத் தடுமாறி, தயக்கத்தோடு காலடி எடுத்து வைத்துத் தமது முன்னோடிகள் தொடங்கிய அறிவுப் பயணங்களைத் தமது சாதனைகள் விஞ்சிவிட்டதாக அவர்கள் கருதினர். தாம் இப்போது படைப்பு, முன்னேற்றம் ஆகியவற்றை நோக்கிய பயணத்திலும் ஆண்களோடு சமதையாக நிற்கமுடியும் என்றும் அவர்கள் கருதினர். உண்மையைச் சொல்வதென்றால், அவர்களது ஆர்வங்கள் பல்வேறு களங்களில் ஆண்களோடு போட்டியிட்டு அவர்களை விஞ்சும்படி செய்தன.

எனினும், பெண்களின் இச்சாதனைகளைப் பாராட்டவும் ஊக்குவிக்கவும் சிலர் இருந்ததைப்போல, பெண்களின் 'வீரத்தையும் தீரத்தையும் மறுத்து ஒலித்தகுரல்களும் இருக்கவே செய்தன.' அத்தகைய எதிர்ப்புகளுக்குப் பெண்கள் தன்மானத்துடனும், நேர்மையுடனும் முகங் கொடுத்தனர். தங்களது ஆர்வங்களை நிறைவுசெய்து கொள்வதற்காகத் தாம் மேற்கொண்ட பயணத்தைத் தொடர்வதைத் தடுக்கக்கூடிய ஐயப்பாடுகள் எதற்கும் அவர்கள் தம் மனங்களில் இடம் கொடுக்கவில்லை.

## பெண்கள் இலக்கியம்

லெபனானியப் பெண்கள் தமது படைப்புகளில், மானுடம் சார்ந்த, சிந்தனைக்குரிய ஏராளமான விஷயங்களைக் கையாண்டுள்ளனர். அவர்கள் கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் ஆகியவற்றில் மட்டுமல்லாது, இலக்கிய ஆய்வு, இலக்கியத்திறனாய்வு ஆகியவற்றிலும் கூடத் தம்மை வெளிப்படுத்தியுள்ளனர். லெபனானியர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசக்கூடியவர்களாதலால் அவர்களது பல்மொழியாற்றல், ஆங்கிலம், பிரெஞ்சு, செம்மை அராபிய மொழி, பேச்சுவழக்கிலுள்ள அராபிய மொழி ஆகியவற்றில் படைக்கப்பட்ட இலக்கியங்களில் வெளிப்பட்டது.

இலக்கியத்தை ஆண்கள் இலக்கியம் என்றும் பெண்கள் இலக்கியம் என்றும் பிரித்துப் பார்ப்பதை நானுமே விரும்புவதில்லை. ஆனால் அராபியப் பெண்ணின் எழுத்தின் மிக முக்கியமான கருப்பொருளாக விளங்குவது அவளது சுயம்தான்- அதாவது விடுதலை, சமத்துவம் ஆகியவற்றைப் பெறுவதற்கான அவளது போராட்டம், தன் சுயமதிப்பை மெய்ப்பிப்பதற்காக அவள் மேற்கொள்ளும் பயணம், அவளது அறிவுச்சாதனைகள், படைப்புச் சாதனைகள் ஆகியனதான்- என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. அவள், ஆண்களுக்கெதிரான, அதாவது தனது தலைவிதியைத் தீர்மானிக்கும் எஜமானர்களுக்கு எதிரான தனது போராட்டங்கள், அவளது ஆளுமையைச் சிறுமைப்படுத்தும் தனது சமுதாயத்திற்கு எதிராக அவள் மேற்கொண்ட முயற்சிகள், தன்னோடேயே தான் நடத்திய போராட்டங்கள், தனது கவலைகள், பயங்கள், ஆர்வங்கள், வெற்றிகள், தோல்விகள் ஆகியனபற்றி அவள் எழுதியுள்ளாள்.

அன்றாட விஷயங்களை - பொதுவாக சமுதாய, மானுட அக்கறைகளைப் பற்றி எழுதுகையில் அவள் ஆண் எழுத்தாளரிடமிருந்து வேறுபடுகிறாள். அதற்குக் காரணம் அவள் ஒரு அராபியப் பெண்ணாக இருப்பதில் அவளுக்குள்ள சிக்கல்கள் தாம்.

## பிறகு மூண்டது போர்.....

மிகச்சிலரைத் தவிர, நாட்டிலுள்ள எல்லாருக்கும் ஏற்பட்டது போலவே, எதிர்பாராது வந்த போர் அவளுக்கும் திகைப்பூட்டியது. அது ஒரு நாசகரமான, குறிக்கோளற்ற, குழப்பம் நிறைந்த போர். அது நகரத்தெருக்களிலும் மக்கள் நெஞ்சங்களிலும் எரிந்தது. அது, அவளது கண்களினூடாக வெடித்துச் சிதறியது; அவளது கனவுகளை அழித்தது; அவளது கதைகளில் எழுதப்பட்ட நகரங்களை- தனது வாழ்நாள் முழுவதும், ஏன் தனது குழந்தைகளின் வாழ்நாள் முழுவதும் இருக்கும் என்று அவள் நம்பிய நகரங்களை- தரைமட்டமாக்கியது. நெருப்பு எரிந்து கொண்டிருக்கும் தன் கண்களால் அவள் நாற்புறமும் பார்த்தாள், வியந்தாள்: "எனது கடந்த காலத்தை வைத்துக் கொண்டு நான் செய்தது என்ன? வருங்காலத்தை வைத்துக் கொண்டு நான் செய்யப்போவது என்ன? நான் எழுதியவை, வெளியிட்டவை, ஒளிபரப்பியவை ஆகியன நிலைத்து நிற்குமா? அவற்றுக்கு ஏதேனும் மதிப்பிருக்குமா? என்னைச் சுற்றிலுமுள்ள கட்டிடங்கள் நொறுங்கி விழுந்ததுபோல் எனது கடந்த காலமும் விழுந்து நொறுங்கிவிடுமா?" அவள் பணியை மீண்டும் தொடங்க வேண்டியிருந்தது- எங்கும் நிறைந்திருந்த சாம்பலிருந்து உயிர்பெற்றெழுவது போல.

## சாம்பல்தான் படைப்புக்கு ஊற்றுக்கண்

அராபியப்பெண் எழுத்தாளர் கடந்தகாலத்தை வரலாற்றிடம் விட்டுவிட்டாள். துப்பாக்கிக் குண்டின் சிதறல்களிலிருந்தும் சாம்பலிலிருந்தும் தன் படைப்புக்கான புதிய கருப்பொருள்களைப் பொறுக்கியெடுத்துக் கொண்டாள். தனது வாழ்க்கை மீது படையெடுத்து அவளையும் அவளது அன்புக்குரியவர்களையும் அவள் பேணிப்பாதுகாத்த வருங்காலத் தலைமுறையினரையும் ஆக்கிரமித்துக் கொண்ட ஒரு புதிய விஷயத்தைப் பற்றி அவள் எழுதத் தொடங்கினாள்.

அவள் பெரும்பாலான சமயங்களில் போர்க்களங்களுக்கு வெளியிலே தான் இருந்தாள். 'மௌனப் பெரும்பான்மையினர்' என்று லெபனானில் கூறப்படுகிறவர்களில் ஒருத்தியாக, அதாவது போரின் விளைவுகளை, அதன் அழிவுச்செயல்களை, அவலங்களை ஏற்றுக் கொள்ளவேண்டிய ஒருத்தியாகவே அவள் இருந்தாள். அத்தகைய நிலையிலிருந்த பெண்கள் எழுதினர்.

லெபனானியப் பெண் அரசியல் சூழலிலிருந்தும், அரசியல், பொருளாதார, சமயக் கருத்துக்களையும் பக்கச்சார்பான கருத்துக்களையும் உருவாக்குவோரிடமிருந்தும் மிகவும் தள்ளியிருந்தால் அவளது இலக்கியம் இந்த இடைவெளியைப் பிரதிபலிக்கிறது. அந்த இலக்கியம் மானுடத்தன்மைகள், அசாதாரணமான நொடிப்பொழுதுகளை நினைவில் நிறுத்திக் கொள்ளும் ஆற்றல், அதலபாதாளத்தின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் உணர்வு ஆகியவற்றுக்கு அழுத்தம் வழங்குகிறது. அது தியாகம், இழப்பு ஆகியனபற்றிய இலக்கியம்.

தற்கொலை மனிதனின் செயல் ; மிருகங்களால் இயலாதது ; அது சிந்தித்து முடிவுகட்டிய விஷயம்; பிறவிக் குணத்துடன் தொடர்பில்லாதது; இயல்புக்கு மாறாகத் தேர்ந்தெடுப்பது-

**இத்தாலிய எழுத்தாளர் பிறிமோ லெவி (PRIMO LEVI)**

"போரின் பிற குரல்கள்" என்ற நூலில்- பெண்களையும் போரையும் பற்றிய இந்த நூலில்- மிரியம் குக் எழுதுகிறார்: "ஆண்கள் போரின் மையப்பகுதியிலிருந்து எழுதினர். அவர்களது எழுத்துக்கள் கொடூரங்கள், போபம், அவலம் ஆகியவற்றைப் பதிவு செய்தன. பெண்களின் எழுத்துக்களோ போர் உருவாக்கிய மனோநிலையையும் பெண்நிலைவாத உணர்வு ஏற்படுவதையும் வெளிப்படுத்தின".

நான் இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் வேறொன்றையும் கூற விரும்புகிறேன்: பெண்களும் கூட போரின் கொடூரங்களைப் பதிவு செய்தனர். ஆனால் சொற்களைத் தற்காப்புக்காகவும் வருங்காலத்தை, ஏன் நமது விமோசனத்தைச் சென்றடைய உதவக்கூடிய பாலமாகவும் பயன்படுத்தினர்.

## போரும் விடுதலையும்

போரின் போது லெபனானில் இளம்பெண்களுக்கு ஏற்பட்ட ஒருபுதிய அனுபவத்தை இங்கு நாம் குறித்துக் கொள்வது முக்கியமானது: அவர்கள் தெருக்களுக்குச் சென்று அங்கு தடுப்புச் சுவர்களுக்குப் பின்னால் ஆண்களுக்குச் சமதையாக அவர்களோடு சேர்ந்து நின்று போரிட்டனர். அது 1975-1976 ஆம் ஆண்டுகளில் நடந்த போரின்போது நிகழ்ந்தது. இதுவரையிலும் அவர்கள் தமது விடுதலை பற்றிக் கொண்டிருந்த கனவை நனவாக்கக் கிடைத்த ஒரு வாய்ப்பாக அது அமைந்தது. "போர்புரிவதற்காக நான் தெருக்களில் திடீரென இறங்கிய போது, எனக்கிருந்த ஒரே அக்கறை ஆண்களுடன் சேர்ந்து சரிசமமாகப் போர்புரிவதற்கான உரிமைதான்; பெண்களுக்கு மரபாக விதிக்கப்பட்டிருந்த பாத்திரத்தை நிராகரிக்க நான் மேற்கொண்ட முடிவுதான்... தடுப்புச் சுவருக்குப் பின்னால்... எனது சுதந்திரத்தைக் கண்டெடுத்தேன்". மேற்சொன்ன இரண்டாண்டுப் போருக்குப் பிறகு இளம்போராளிகள் பற்றி மரூன் பாக்தாதியும் (MAROUN BAGHDADI) நய்லா தோஃப்ரெஜும் (NAYLA DOFREIJ) மேற்கொண்ட 'கிளாஷ்னி கோவ் தலைமுறையினர்' என்ற ஆய்விலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள் ஆகும்.

இங்கு பதிவு செய்யப்பட்ட பெண்ணின் குரல், போருக்குச் சென்று உயிரைக் கொடுத்தேனும் தனது விடுதலையைத் தனக்காகப் பறித்தெடுத்துக் கொண்ட ஒவ்வொரு பெண்ணினுடைய குரலுமாகும்: தங்களது சமய, குடும்ப, கட்சி விசுவாசத்தின் காரணமாக போருடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்த சிறிய எண்ணிக்கையிலான எழுத்தாளர்களின் படைப்புக்களில் இவ்வனுபவத்தின் பதிவுகள் பிரதிபலிக்கின்றன. எனினும் பொதுவாக பெண்களின் இலக்கியத்தில் மேலோங்கிக் காணப்படும் கருப்பொருள் மனிதநேயக் கண்ணோட்டமும் போர் மீதான கண்டனமும் ஆகும்.

## மெய்மைக்கு முகங்கொடுத்தல்

போரைப்பற்றி எழுதுகையில் பெண்கள் ஒவ்வொரு கட்டமாகவே தங்கள் அனுபவங்களை உணர்ந்து வெளிப்படுத்தினர். என்னுடைய 'அந்த நினைவுகள்' என்ற கதையில் வரும் ஹனான் என்ற பாத்திரம், போரின் கொடூரங்களால் ஏற்பட்ட அதிர்ச்சியை வெளிப்படுத்துவாள்: " இதை நம்பவே முடியாது! உன்னால் இதை நம்பமுடிகிறதா மாஹா... கொல்வதைப் பற்றி அவர்கள் பீற்றிக் கொள்கின்றனர். பல்வேறுவகையான வழிமுறைகளைக் கையாண்டு தான் மட்டுமே தனியாக 150 பேரைக் கொன்று குவித்ததாக ஒருவன் கூறினான். நான்காவது முறையாக அவன் மதுவைக் குடித்தபிறகு, தான் கையாண்ட முறைகளை விவரித்தான்: மின்சாரம் பாய்ச்சியோ அல்லது எரிகின்ற சிகரட் துண்டுகளைக் கொண்டோ சூடுவைத்தல், உடலுறுப்புகளை- குறிப்பாகப் பாலுறுப்புகளை- அறுத்தெறிதல். பாலுறுப்புகளை அறுத்தெறிதல் மிகமுக்கியமானது என்றும் அவற்றை அறுத்தெறிவது ஒருவனையோ ஒருத்தியையோ வேரோடு அறுத்தெறிவதற்கு ஒப்பாகும் என்றான். அவனால் கொன்றொழிக்கப்பட்டவர்கள் எப்போதாவது உயிர்பெற்று தன்னைப் பேய்போலப் பிடித்தாட்டுவார்களோ என்ற பயம் அவனுக்கு இருந்தது....."

அடுத்த கட்டம், கோபம் கலகமாகவோ அல்லது முழுமையான துயரமாகவோ வெடிப்பதற்கு முன் கடந்த காலத்தையும் வருங்காலத்தையும் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதாகும். எனது மேற்சொன்ன கதையில்வரும் மற்றொரு கதாபாத்திரம் வெளிப்படுத்துவது இதைத்தான்: ".... இப்போது நான் எதிர்பார்ப்பதெல்லாம் நிம்மதியான தூக்கம்தான். குண்டுவெடிப்பு, துப்பாக்கிச்சண்டை ஆகியவற்றின் ஓசையால் கலைக்கப்படாத தூக்கம்தான். நான் தூக்கத்திற்குள் ஓடிப்போய் விழுந்து விடுகின்றேன். நாள் முழுவதும் இரவாகவே இருந்துவிடக் கூடாதா என்று ஏங்குகிறேன்".

*எனது உறவினரின் கலியாண நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதற்காக அண்மையில் கனடாவிற்குச் சென்றிருந்தேன். அங்கே எனது இயல்பான ஆர்வம் காரணமாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாடகங்கள், இசைநிகழ்ச்சி என நடாத்திவரும் பல்வேறு நண்பர்களையும் சந்தித்தேன். எனது பாலிய நண்பரொருவரும் இப்படியான துறைகளில் முழுமூச்சாக ஈடுபட்டு வருபவர். கொஞ்சம் விரிவாகக் கதைக்கலாம் என எண்ணி இவரது இல்லம் சென்றிருந்தேன்.*
*நாடக முயற்சி எல்லாம் எப்படி இருக்கிறது என்றேன் அமைதியாக?*
*மச்சான் "ஊரில் கூத்துப் போட்டாக்களெல்லாம் யார் என்று தெரியும்தானே. அப்படி கொஞ்சப்பேர் செய்யேலெ என்றால் இவர்களுக்கு எம்சமுதாயத்தில் மதிப்பு இருந்திருக்காது. அதேபோலத்தான் இஞ்சை கொஞ்சப்பேர் அலையினம். அவர்களை வைச்சுக்கொண்டு சமாளிச்சுக் கொண்டு போறன்" என்றார் ஆசுவாசமாக.*
*வாயடைத்துப்போன என்னால் மேற்கொண்டு எதுவுமே கதைக்க முடியவில்லை.*

– குணா கலைதாசன் –

குஞ்சரம்

அவளால் தூங்கிப் போய்விட முடியுமா? அல்லது மறந்துவிட முடியுமா? அல்லது அவளால் நிதானமாகச் சிந்திக்க முடியுமா? தன்னுடனும் தனது அன்புக்குரியவர்களுடனும் அவளுக்குள்ள உறவை மறுபரிசீலனை செய்து மறுமதிப்பீடு செய்ய முடியுமா?

அவளுக்கு எதிரே உள்ள சித்திரம் தெளிவற்றதாக உள்ளது- குறிப்பாக ஆணின் சித்திரம். அவன் இன்னமும் அவளது காதலன்தான், சகோதரன்தான், தந்தைதான், மகன்தான், நண்பன்தான். ஆனால் அதேசமயம் அவன் துப்பாக்கிவிசையைத் தட்டிவிடும், குண்டைவெடிக்கச் செய்யும், ஏவுகணைகளை ஏவும் அவளது நெஞ்சைக் குறிவைத்துத் துப்பாக்கித் தோட்டாக்களைச் செலுத்தும் சக்தியாகவும் இருக்கிறான். அவன் ஒரே சமயத்தில் வீரனாகவும், தீயவனாகவும் இருக்கின்றான்; உன்னதமானவனாகவும் வெறுக்கத்தக்கவனாகவும் இருக்கின்றான்; பாதுகாப்பாளனாகவும் அவளது துயரத்துக்கான காரணமாகவும் இருக்கின்றான். அவனைப்பற்றி இப்போது புதிதாக உருவாகிவரும் சித்திரத்திற்கு அவளால் எவ்விதத்தில் முகங்கொடுக்க முடியும்?

இக்கேள்விக்குப் பதிலளிக்க வேண்டுமானால் மானுட உறவுகள் பற்றிய ஒரு புரிதல் தேவை; குறிப்பாக இந்தப் பதினாறு ஆண்டு காலப் போரின்போது ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே நிலவிய உறவைப் பற்றிய ஒரு புரிதல் தேவை. பெண் எழுத்தாளர்களைப் பொறுத்தவரை சொல் என்பது ஒரு புகலிடமாகவும் கடலில் தத்தளிப்பவரைக் காப்பாற்ற உதவும் படகாகவும் உருப்பெற்றுள்ளது- கவிதையும் கதையும் ஒரு தேசத்திற்கான மாற்றீடாக உள்ளன.

தற்காப்புக்காகவும் குடும்ப, பொருளாதாரக் காரணங்களுக்காகவும் புலம்பெயர்தல் என்பதும்கூட போரின் மற்றொரு முகமாகியது. புலம்பெயர்ந்த பெண் எழுத்தாளராய் புதிய, பல்வகையான பண்பாடுகளுடன் தொடர்பு கொள்ள முடிந்தது. அதே சமயம், புலம் பெயர்தல் என்பது ஒரு எழுத்தாளருக்கோ அல்லது கலைஞருக்கோ மிகவும் வேதனைதரும் அனுபவம் தான்: தனது வேர்களை இழத்தல், தனது நாடு, பண்பாடு ஆகியவற்றுடனான தொடர்பு அற்றுப் போதல் என்பனதான் அந்த அனுபவம்.

இந்த அனுபவத்தின் பின்னணியில் தான் இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதைகளைத் தெரிவு செய்தேன். நெருப்பிலிருந்தும் அழிவிலிருந்தும் எழும் இவை, எனது அனுபவங்களுக்கான ஜீவ சாட்சிகளாகும். இக்கதைகள் வீரர்கள் பற்றியவையல்ல; மாறாக பாதிக்கப்பட்டவர்கள் பற்றியவை. என்னைப்பொறுத்தவரை லெபனான் மக்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களது இருப்பையும், தேசத்தையும் கிழித்தெறிந்து போருக்குப் பலியானவர்கள், அதனால் பாதிக்கப்பட்டவர்கள்.

தனது நாடு, தனது நாட்டுமக்கள் ஆகியோருக்கு ஏற்பட்ட அவலங்களினூடாக வாழ்ந்தவள் என்ற முறையிலும் உலகம் முழுவதிலும் இது போன்ற மக்களுக்கு இது போன்ற அவலங்கள் நேர்வதைப் பார்த்துக் கொண்டிருப்பவள் என்ற முறையிலும் நான் ஒரு கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது: "இந்த எழுத்தினால் என்ன பயன்? நேர்மைக்காகக் குரல் கொடுக்கும் ஆற்றலைச் சொல் இன்னமும் பெற்றிருக்கிறதா, என்ற கேள்வியை நான் எழுப்பியாக வேண்டும். முடிவாக நான் இந்தக் கேள்வியையும் எழுப்பியாக வேண்டும்: போர் இயந்திரத்தின் இரைச்சல் உலகம் முழுவதிலும் பரவியிருக்க, பலகீனமானவர்களின் முனகல்களையும் நம்பிக்கையற்றுப் போனவர்களின் ஓலங்களையும் கேட்கக்கூடிய செவிகள் இன்னமும் இருக்கின்றனவா?"

---

எமிலிநஸ்ரல்லா, உலகெங்கிலும் பரவலாக அறிமுகமாகியுள்ள, அங்கீகாரம் பெற்றுள்ள லெபனானியப் பெண் எழுத்தாளர். இலக்கியத்திற்கான பல விருதுகள் பெற்றுள்ள அவர் பத்திரிகையாளராக, பள்ளி ஆசிரியராக, கல்லூரி விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளவர். அவர் தனது நாட்களை பெய்ரூட், கெய்ரோ, கனடா ஆகியவற்றில் மாறிமாறிச் செலவிட்டு வருகிறார். இங்கு மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள முன்னுரையும், சிறுகதையும் (இதற்கு ஆங்கில மொழியாக்கத்தில் 'EXPLOSION' என்ற தலைப்பிடப்பட்டுள்ளது, கீழ்க்காணும் நூலில் உள்ளவையாகும்: A HOUSE NOT HER OWN : STORIES FROM BEIRUT BY EMILY NASRALLAH, TRANSLATED FROM TO ARABIC BY THURAYA KHALIL - KHOWRI, SYNERGY BOOKS, P.O.BOX No-2023, CHARLOTTETOWN, PRINCE EDWARD

தமிழாக்கம் : வ.கீதா, எஸ்.வி.ராஜதுரை

பிரஞ்சு கற்கும் வகுப்பறையில் ஒருநாள் உரையாடல் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை ஆசிரியை உலக அழிவு 2000ம் ஆண்டில் நிகழலாம் என்ற வதந்தி பல்வேறு மதங்களில் ஊடாக நம்பப்படுகிறதா? என்பது பற்றி ஒவ்வொருவரிடமும் கேட்டுக் கொண்டு வந்தார். கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர், முஸ்லீம்கள், இந்துக்கள், பௌத்தர்கள் என பலவேறு மதப்பிரிவுகளைச் சார்ந்த மாணவர்கள் ஒன்றாக இருந்தோம்.

கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர்கள் – ஒருமித்த குரலில் "நாங்கள் இதை நம்புகின்றோம். தற்போது இறைவனிடம் மன்றாடி வருகின்றோம்".

முஸ்லீம்கள் – "இக்கருத்தை நாங்களும் நம்புகின்றோம். அழிவுகளில் இருந்து காப்பாற்றத் தொழுது கொண்டிருக்கின்றோம்".


இந்துக்கள் – "கலியுகம் பற்றி நம்புகின்றோம் அழிவுகளில் இருந்து காப்பாற்ற வேண்டுதல் செய்கின்றோம்".

ஆனால் பௌத்தர்கள் – "நாங்கள் இதை நம்பவில்லை" என்றார்கள் அமைதியாக. இங்கு பௌத்தர்களாக எம்மோடு படிக்கும் மாணவர்கள் சீனர்கள், வியட்நாமியர்கள், கம்போடியர்கள் ஆவர்.

– கமலேந்திரன்

குஞ்சரம்

**கி.பி.அரவிந்தன்**
இலையுதிர் காலம் - 1994
பிரான்சு



# புதுஉலகம்

## 1

ஆணையல்ல ஒழுங்கு.
உத்தரவல்ல கோட்பாடு.
கட்டளையல்ல கடப்பாடு.

இதிலெதையும் எப்படியும்
அவரவர் கொள்ளலாம்.
பொருள் ஒன்றேதான்.

காலால் இட்ட பணியை
தலையால் சுமப்பது
உழைப் பொன்றையே
ஏற்பது, இயைபாவது.

வாழையை பயிரிடலாம்
என்றால்
வாழையை மட்டுமே.
பழத்தை அனுப்பினால்
தோல்கள் திரும்பிவரும்
வாழைத் தேசமாகலாம்
நீவிர்.

நெல்லைப் பயிரிடலாம்
என்றால்
நெல்லை மட்டுமே
அரிசியை அனுப்பினால்
உமி உங்களுக்கே
நெல் நாடாகலாம்
நீவிர்.

கரும்பை பயிரிடலாம்
என்றால்
கரும்பை மட்டுமே
சீனியை அனுப்பினால்
சக்கைகள் மீதமாகும்
கரும்புத் தேசமாகலாம்.
நீவிர்.

இப்படியே
உயிர்வாழ புசிக்கும்
நுகர் பண்டங்கள்
எல்லாமும்....

## 2

உயிதனை ஓம்பும்
நுகர் பண்டம் மெல்ல
உயர் திணையாகி
தேசங்களாக,
தேசங்களென்பது
நுகர் பண்டமாகும்.
அஃறிணையாவர்.
நம்மொத்த மானுடர்
தேசங்கள் சமைத்தவர்.
தேசங்கள் கடந்து
உலகங்கள் அளந்து
அடிமுடி அறிந்த
வல்லமையாலே

ஆத்மாக்கள் புசித்து
மகாத்மாக்களாகி
உண்ணவும்
உடுக்கவும்
உறையவுமான
அம்மானிதரை
யாரென நினைத்தீர்.
வேறெவருமல்லர் - அவர்
வேறெவருமல்லர்
நவடைனோசர்களாவர்
அவர்கள்.

அவர்தம் திருப்பாதங்களை
போற்றிப் புகழ்ந்து
பாடல்கள் புனைந்து
"
ஒருவெண் கொற்றக்
குடை நிழலில்
இவ்வுலகாள்வேந்தர்
வாழியவே... வாழியவே... 1
"
என ஒழுங்காய்
கோட்பாடாய்
கடப்பாடாய்
மானுடராவீர்
ரொபோக்கோகளாய்
என்றென்றைக்குமாய்.

1 கத்தோலிக்க தமிழ்பாடல்.

---


- பொ.கருணாகரமூர்த்தி -

# கேகாலையும் - கேகாலியும்



தற்செயலாய் வானொலி கேட்டேன்
பாதியாய் ஒரு செய்தி போனது-
"கேகாலையில் திடீர் கலவரம்
ஆயிரம் பேர் பச்சைக்கொலை
அரசபடையினரிடையிலும் பிரிவு"
கால்கள் ஓரடி நகர மறுத்தன,
மேனி கொதித்து, நாவுமுலர்ந்தது
இதயம் விம்மி விம்மி விசித்தது.
மனம் 'நாலுபேருக்கு' சொல்லத் துடித்தது!
போனை எடுத்துச் சுழற்றி முடிக்க முன்
மிகத்தொலை வானில் வரும் சிறு 'பொம்மராய்'
சந்தேகம் ஒன்று தோன்றிப் பெருத்தது!
'கொலையுற வெனவே பிறந்தவர் தமிழர்
இவர் 83ல் காணாதொழிந்த பின்
இப்போது எப்படி கேகாலை வந்தனர்?
எதற்கும் மறுபடி தெளிவாக்கிய பின்
செய்தியை வெளியிலே விடுவதே நன்று!
மறுமுறை காதை கூர்செய்து கேட்டேன்
'பச்சைக் கொலைகள் இரண்டாயிரம்' என்றது!
உகண்டாவிலே ஒரு கேகாலி நகரிலாம்!
சகோதரக் கொலைகள்! சகோதரக் கொலைகள்!
குருதியில் வீதிகள் சகதியானது!
சிந்திக்க மானிடம் வீம்பு பிடிக்குது
பாவம் கறுப்பினப் பிஞ்சும் பெண்டிரும்!
விசேட விமானத்தில் * வெள்ளையர் மீண்டனர்
இறந்தோர் தொகை தினம் ஆயிரம் மிகுந்தது!
13-04-1994
வாரம் முடிய 'இருபதினாயிரமாயிற்று' !
உடல்கள் குவிந்து கேகாலி மறைந்தது!
இதுவரை எவருக்கும் நான் செய்தியைக் கூறலை
என்னுடன் யாரும் இது பற்றிப் பேசலை
எங்கே கேகாலி? எங்கே உகண்டா?
ஆபிரிக்காவில் எந்த மூலையில் இருக்குதோ?

* ஐரோப்பியர்



*நூல் அறிமுகம் : சித்ரலேகா மௌனகுரு*

# 'பெண்நிலைச்சிந்தனைகள்'

சித்ரலேகா மௌனகுருவின் 'பெண்நிலைச்சிந்தனைகள்' இலங்கைவாழ் தமிழர்களுக்காக பெண்நிலைவாதம், பெண்விடுதலை போன்ற கருத்துக்களை விளக்கியும், பெண்நிலைமை முன்னேற மாற்றுக்கருத்துக்களை முன்வைக்கவும் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு. இந்நூற்றாண்டின் மேற்கத்திய சிந்தனையாளர்களான ஏங்கெல்ஸ், பிராய்டு, அல்தூசர், கிராம்ஸ்கி, சீமோன் தெபோவர் போன்றவர்களின் கருத்துக்கள் இவர் நூலின் பின்னணியாய் அமைகின்றன. அரசியல் பொருளாதாரம், சமூகவியல், மானுடவியல், வரலாறு போன்ற பல்துறைகளையும் உட்படுத்தும் இவரது கட்டுரைகள் எளிய தமிழில் எழுதப்பட்டுள்ளது பாராட்டுதற்குரியது. முதல் மூன்று கட்டுரைகள் பெண்நிலைவாதம் பெண்விடுதலை இயக்கங்களைப் பற்றி அலசிஆராய்கின்றது. உடற்கூறால் ஆண்களிலிருந்து மாறுபட்டவர் பெண்கள் என்பது அனைவரும் அறிந்ததே. அதனால் சரிநிகர் சமானம் பேணப்படாமல் இருப்பது நியாயத்திற்கு புறம்பானது. பெண்களின் ஒடுங்கிய நிலைக்கு பலகாரணங்கள் உண்டு. முதற்காரணம் பாலடிப்படையில் அமைந்த தொழிற்பாகுபாடு. பெண்கள் பொருளாதார உற்பத்தி, இனவிருத்தி என்ற இருபளுவையும் ஒரேநேரத்தில் சுமக்கின்றனர். மேலும் ஆண்மேலாதிக்கத்தின் வெளிப்பாடாக முதலாளித்துவத்தில் பெண்கள் ஒரு மலிவான உற்பத்தி சக்தியாக ஆக்கப்பட்டு விடுகின்றனர். அவர்கள் உழைப்பதற்கு தகுந்த ஊதியம் அளிக்கப்படுவதில்லை. ஏனெனில் ஆண்களே குடும்பத்தின் பிரதான உழைப்பாளியாக கருதப்படுகின்றனர். இதனால் பெண்கள் சம்பளமில்லாமல் உழைக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். ஆண்களும் பெண்களும் வேலைக்குச் சென்றாலும் பெண்கள் ஆண்களைவிட வீட்டு வேலை அதிகம் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான காரணம் ஒருபெண் தாய், மனைவி என்ற அந்தஸ்துடன் நோக்கப்படுவதும் அல்லாமல்- இன, தேசிய அடையாளங்களை பேணிப்பாதுகாக்கும் பொறுப்பும், அவளின் தலையில் கட்டப்பட்டு விடுகின்றது. பெண்களை சக்தி யென்று வர்ணிக்கும் சமயமும் பெண்களை புனிதமற்றவர்களாகவே கருதி சடங்குகளை நிறைவேற்றும் அதிகாரத்தை ஆண்களுக்கே அளித்துள்ளது. தந்தைவழி சமூக அமைப்பில் கணவன் புரவலானாகவும், மனைவி இரவலராகவும் இருக்க நேரிடுகின்றது. வெளியே வேலைக்கு செல்லாத பெண்கள் வீட்டில் செய்யும் வேலைகளுக்கு மதிப்பு அளிக்கப்படுவதில்லை. நாட்டு அபிவிருத்தியில் பெண்கள் பங்கெடுக்க வேண்டுமென உரையாற்றுபவர்கள் அதற்கு ஆண்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதைப்பற்றிப் பேசுவதில்லை. சமத்துவத்தை அடைய பெண்கள் இரட்டைவிலை கொடுக்க வேண்டியுள்ளது. நகரவாழ்க்கை, கல்வி என்பன பெண் சமத்துவமின்மையை ஓரளவு நிகர்ப்படுத்தினாலும், வேரூன்றியுள்ள ஆதிக்க மனப்பான்மைகளை சட்டங்கள் மந்திரக்கோலாகி மாற்றிவிடும் என்பது கடினமானது. பெண்கள் விழிப்புடன் இருப்பதும், சமூகமாற்றப் போராட்டத்தை தொடர்வதும் அவசியம். அத்துடன் லாபத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் சமூக நலத்தை கருத்தில் கொண்ட பொருளாதார அமைப்பை நடைமுறைக்கு கொண்டுவந்தால்தான் பெண்களின் நிலை முன்னேறும் என்பது நூல் ஆசிரியரின் கருத்து.

அடுத்த இரண்டு கட்டுரைகளும் தமிழ்பெண்களின் இன்றைய பிரச்சனைகளை ஆழமாக ஆராய்கின்றன. இத்தொகுப்பின் சுயமான கட்டுரைகள் இவைகளே. பலாத்காரம் பெண்களுக்கெதிரான வன்முறையின் ஒரு மோசமான வடிவம். இராணுவத்தினர் தமிழ்பெண்களை பலாத்காரம் செய்யத்தொடங்கியதன் பின்னால் இவ் விடயம், இலக்கிய அரசியல் பரிமாணத்தை பெற்றுக்கொண்டது. ஒரு புருஷ மணமுறையில் பெண்களின் பாலியல் உறவை கட்டுப்படுத்துவதற்காக ஆண்களுக்கு உதவும் கருத்துப்படிவமே 'கற்பு'. பெண் ஒடுக்குமுறை நிலவும் தமிழ்ச்சமூகத்தில் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெண் குற்றவாளியாகவும், அசுத்தமானவராகவும் கருதப்படுவதால் அவர் உயிரைமாய்த்துக்கொள்ள அல்லது தாழ்வுச்சிக்கல் மனநோய்க்கு ஆளாகின்றார். மேலும் சுயவிருப்பமின்றி எந்த ஆணாவது (அவன் கணவனாக இருந்தாலும் சரி) ஒரு பெண்ணை தன் இச்சைக்கு உட்படுத்துதல் பலாத்காரமாகும். நூறுவருடங்களாக வழக்கில் இருந்துவரும் இலங்கைச்சட்டத்தை திருத்த வேண்டிக்கோருகிறார்.

இலங்கையின் இனத்துவமும் பெண்களும் என்ற கட்டுரையில் ஆசிரியர் எவ்வாறு, ஒரு இனத்தின் அங்கத்தவர்களை மறு உற்பத்திசெய்பவராகவும், இன அடையாளங்களை காப்பாற்றி மறுதலைமுறைக்கு கையளிப்பவராகவும் கருதி, பெண்களை ஆண்கள் மட்டுப்படுத்தப்பட்ட

---

**-சுதந்திர இலக்கிய விழா விருதுக்கு அழைப்பு-**

**'முகம்கொள்' கி.பி.அரவிந்தன்**

*1992ம் ஆண்டு சிறந்த கவிதைத் தொகுப்புக்கான விருதை 'முகம் கொள்'பெறுகின்றது. திரு.கி.பி.அரவிந்தன் அவர்களை ரூபா 10,000 பணப்பரிசையும் சான்றிதழையும் பெற்றுக் கொள்ளும்படி சு.இ.விழா அமைப்புக்குழு சார்பாக எச்.எஸ்.போல் அழைப்பு விடுத்துள்ளார்.*

---

கல்வியைப்பெற்று ஒடுங்கிவாழ வேண்டுமென்றே கருதினர் என்ற உண்மையை முன்வைக்கின்றார். இந்தியாவில் சுதந்திரப்போராட்டம், பெண்களின் விடுதலையுடன் இணைந்து சென்றது. ஆனால் இலங்கையில் தமிழினப் போராட்டத்தின் பின்னேதான் பெண்களின் சுதந்திரம் பற்றிய கருத்தாக்கம் சுதந்திரம் பெற்றது. ஆயினும் முதலில் வீரத்தாய், கண்ணகி போன்ற மரபுரீதியான பெண்களே முன்மாதிரியாக எடுத்தாளப்பட்டனர். பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டபின் அவர்கள் துணைப்பாத்திரங்கள் என்ற நிலை இல்லாமல் சமநிலையுடைய புதுமைப்பெண் சித்திரம் தோற்றம் பெற்றது. தொடர்ந்து வரும் அடுத்த கட்டுரை, எவ்வாறு தொடர்பியல் சாதனங்கள் பால்ரீதியான பாரபட்ச நோக்குகளைக் கொண்டிருக்கின்றது என்பதை விபரிக்கின்றது. இவை பெண்களின் யதார்த்தமான உழைப்பைப் பிரதிபலிப்பதில்லை என்பதையும் மாற்றுத் தொடர்பியலின் அவசியத்தையும் எடுத்துரைக்கின்றது. "பெண்களின் முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ள ஆண்களைப் பற்றிக் கட்டுரையாசிரியர் கூறுவதால் பெண் ஒடுக்குமுறை, ஆணாதிக்கம் என்ற வழக்கமான போக்குகளை அவர் நோக்கவில்லை என்பது தெளிவாகிறது. நூலாசிரியர் ஒரு பெண்ணாயிருப்பதால் பெண்களின் மீதான பச்சாத்தாபம் இவர் கட்டுரைகளில் வெளிப்பட்டாலும், பெண்களும் ஆண்களும் ஒன்றுசேர்ந்து ஒரு சுமுகமான-சமத்துவமான வாழ்க்கைமுறையை அமைத்துக் கொள்ளலாம் என்பதும் இவர் கருத்தாய் இருக்கின்றது.

ஆனால் இக்கட்டுரைகள் ஒருதனிமனிதக்கண்ணோட்டத்தில் எழுதப்பட்டுள்ளன. பெண்களின் இனஉற்பத்தியை மதிக்கும் பிரான்சு போன்ற நாடுகளில், குழந்தைகளுக்கு வழங்கும் உதவித்தொகையைப் பெறுவதற்காக, புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப்பெண்கள் விரும்பியோ விரும்பாமலோ குழந்தை பெறும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றார்கள். ஒடுக்குமுறைக்கு சம்மதிக்கின்றார்கள். பெண்நிலமை முன்னேற்றம் அடைந்துள்ள மேற்கத்தியநாடுகளில் குடும்பம் பின்வாங்கிக் கொண்டிருப்பதை சமூகவியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். ஒருவரின் வங்கிச்சேமிப்புத் தொகை அவரின் வெற்றியின் அளவுகோலாய் இருக்கும்வரை- இன, வர்க்க, மத அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் நீங்க வழிபிறக்கும் வரை ஆண், பெண் சமத்துவம் ஒரு வெற்றுக்கனவே! வேற்றாளுடன் தன்னை ஒப்பிட்டு இறுமாந்து கொள்ளும் நாஸிசம் போய், வேற்றாள் இல்லாமல் நானே இல்லை என்ற ஞானோதயம் பிறக்குவரை முதல் உலகப்பெண்களும் சரி, மூன்றாம் உலகப்பெண்களும் சரி உறங்க முடியாது.

: கீதா. கணபதி தொரெ.

*PENNILAI CHINTHANAIKAL (Feminist Perspectives)*

*a Collection of articles on Women and Society*

*by Sitralega Maunaguru.*

*Published by Women Education Research Centre,*

*17A - Park Avenue, Colombo-5 Srilanka. (1993)*

செவிவழிக்கதை

000

## பாண்டித்தியம்

000

*அந்த அழகான நகரை அலங்கரிப்பதே இந்த 'நதி'தான். எந்தக்காலத்திலும் வற்றாது. நகரைக்கடப்பவர்கள் ஆற்றில் 'மச்சுவாய்' * ஓட்டிகளின் துணையையே நாட வேண்டும். தேவைக்கேற்ப மச்சுவாய்கள் ஆற்றின் இருகரைகளிலும் அடுக்காக நிற்பதே ஒரு அழகுதான். வெள்ளம்பெருக்கெடுக்கும் காலங்களில் மச்சுவாய் ஓடாது.*

*ஒருநாள் ஒருவெளியூர் பண்டிதர் அரசசபையில் தன் திறமையை வெளிப்படுத்த வந்திருந்தார். மிகமிக அற்புதமான அறிவாளியென அனைவராலும் மதிக்கப்படுபவர் அவர்.*

*பண்டிதர் ஆற்றைக்கடக்க ஒரு மச்சுவாயினை அமர்த்திக் கொண்டார். பண்டிதர் சும்மாயிருக்கவில்லை. தன் திறமைகளை படகோட்டியிடம் சொல்லிக் கொண்டுவந்தார். படகோட்டிக்கு புரிந்தவை பாதி புரியாதவை பாதி-திடீரென பண்டிதர் கேட்டார்.*

*"நீ பாரதம் வாசித்திருக்கின்றாயா?"*

*"இல்லை ஐயா"*

*"உன்வாழ்வில் பாதியை இழந்துவிட்டாய், போகட்டும் இராமாயணம் வாசித்திருக்கின்றாயா?"*

*"இல்லைங்க ஐயா"*

*"ச்ச... மீதிவாழ்விலே பாதியையும் இழந்து விட்டாய்-சரி! சீவகசிந்தாமணி..."*

*"இல்லை!"*

*........*

*இப்படியாக பண்டிதர் பார்வையில் வாழ்வின் அனைத்தையும் இழந்து துரும்பாகிக் கொண்டிருந்தான் படகோட்டி. மச்சுவாய் ஆற்றின் நடுப்பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தது. படகில் இலேசான சலனம். படகோட்டி உசாரானான்.*

*"ஐயா, உங்களுக்கு நீச்சல்வருமா?என்றான் பவ்வியமாக-*

*"இல்லையப்பா" என்றார் பண்டிதர் புருவங்களை சுருக்கியவாறு-*

*"ஐயா, உங்கள் வாழ்க்கையே அழியப்போகிறது" என்றான் படகோட்டி- பண்டிதர் கலங்கிவிட்டார். "ஏன்?"*

*"மச்சுவாயினுள் ஓட்டை..... தண்ணீர் புகுந்து கொண்டு வருகிறது...." மீதி சொல்லப்படாமலேயே படகோட்டி ஆற்றில் நீந்தத் தொடங்கிவிட்டான்.*

- அநாமிகன் -

** மச்சுவாய் : சிறிய படகு- ஒரு படகோட்டி இருகைகளாலும் துடுப்பெடுத்து படகை நகர்த்திச் செல்வான்.*

# வண்ணநிலவனின் "எஸ்தர்" இலக்கிய அனுபவம்!

-விக்ரமாதித்யன்

தமிழில் நிறையவே சிறுகதைகள் வருகின்றன. இப்படிச் சொல்வது பத்திரிகைக் கதைகளை மனத்தில் கொண்டு இல்லை. இலக்கியச் சிறுகதைகளையே குறிப்பிடுவதாம்.

இவ்வளவு காலத்துக்குப் பிறகும் நமது இலக்கிய சஞ்சிகைகளில் சம்பவக் கதைகள், நடை சித்திரக் கதைகள், இந்த இடத்தில் தொடங்கி இந்த இடத்தில் முடிகிற கதைகள், ஓ ஹென்றி முடிவுக் கதைகள், வட்டார இலக்கியப் பம்மாத்துக் கதைகள், ஐரோப்பிய இலக்கியப் பாதிப்புக் கதைகள், (இப்போதெல்லாம் லத்தீன் அமெரிக்கப் பாதிப்புக் கதைகளுக்குத்தான் மவுசு) உள்ளூர் பாதிப்புக் கதைகள், போலி முற்போக்குக் கதைகள், ஆண்-பெண் சிநேகக் கதைகள், வேலையில்லாத் திண்டாட்டக் கதைகள், வரதட்சணைக் கொடுமைக்கதைகள், பெண்ணினக் கதைகள், குடும்பக் கதைகள், கோபம் கொண்ட இளைஞர்களின் அபத்தக் கதைகள், நேர்க்கோட்டில் இல்லாத கதைகள் இப்படி இன்னும் இரண்டாயிரம் வருஷத்துக்கும் போதுமான சிறுகதைகள் தமிழில் வந்து குவிந்து விட்டன.

இவ்வளவு சிறுகதைகளுக்கும் மத்தியில் சுயம்புவான, கலாபூர்வமான ஆழமும் வீச்சும் கொண்ட படைப்புகளை புதுமைப்பித்தன், கு.ப.ரா. மௌனி, சம்பத், நகுலன், அசோகமித்திரன், சார் வாகன், சுந்தரராமசாமி, ஆர்.ராஜேந்திர சோழன், ந.முத்துசாமி, சா.கந்தசாமி, பிரபஞ்சன், கோணங்கி, ஜெயமோகன், வண்ணநிலவன் முதலானோர் எழுத்துகளில் காணக் கிடைக்கின்றன. இலக்கிய உன்னதம், மொழி வளர்ச்சியெல்லாம் இத்தகைய எழுத்துக் கலைஞர்களையே சார்ந்திருக்கிறது. இவர்களே உண்மையில் படைப்பிலக்கியவாதிகளா கவும் புதிது செய்து சாதிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள்.

புதுமைப்பித்தனுக்குப் பிறகு சிறுகதையில் கணிசமான அளவு பங்களிப்புச் செய்திருப்பவர், வண்ணநிலவன் என்பதைத் தமிழ் இலக்கிய உலகம் நன்கு அறியும். எதார்த்தச் சிறுகதையில் தொடக்கம் பெற்று, வாழ்வின் நுட்பமான அம்சங்களைக் காண்பிக்கிறதாக ஆகி, சோதனை ரீதியான எழுத்து என்று தொடர்ந்த வளர்ச்சி கொண்டவை இவர் கதைகள். எஸ்தர் தொகுப்புக்கும் பாம்பும்பிடாரனும் தொகுப்புக்குமிடையே தெரியும் வித்தியாசம் நல்ல படைப்பாளியின் இயல்பான மாற்றம். எழுதுவது பெரிதில்லை. அது சிறுகதைக்கு வளம் சேர்ப்பதாக அமைவதுதான் முக்கியம். அதைச் சாதித்தவர்களில் முக்கியமான ஒருவர் வண்ண நிலவன். எஸ்தர், அழைக்கிறவர்கள், துக்கம், தருமம், அரேபியா, பிணத்துக்காரர்கள், பாம்பும்பிடாரனும் முதலான இவர் கதைகள் தமிழ்ச் சிறுகதையில் தனி ஒரு இடம் வகிப்பவை. இதுவரையுள்ள கதைபோல இல்லாதிருப்பதே ஒரு கதையின் விசேஷ தகுதி, உயர்வு. இந்தக் கதையை இன்னொருவர் எழுதி யிருக்க முடியாது என்று, நினைக்க வைக்கிற தனித் தன்மையே ஒரு படைப்பாளிக்குப் பெருமை. வண்ண நிலவன் கதைகள் அத்தகையவை.

வண்ணநிலவனின் எஸ்தர் சிறுகதை தமிழ்ச் சிறுகதை இலக்கியத்திலேயே மிக முக்கியமான ஒன்று. கிறித்துவ வாழ்க்கைப் பின்புலத்தில் இலக்கிய மாகி நிற்கிற எழுத்து.

**"முடிவாகப் பாட்டியையும் ஈசாக்கையும் விட்டுச் செல்வதென்று ஏற்பாடாயிற்று."**

– கதையின் முதல் வாக்கியம்.

**"வெகு காலம்வரை அந்தக் கண்களை அவள் மறக்காமல் இருந்தாள்."** – கடைசி வாசகம்.

இதற்கு நடுவே கதை. தென்கோடிக் கிராமம் ஒன்றில் மழைபொய்த்துப் போய் வறட்சியுண்டாகும் போது, ஒரு எளிய கிறித்துவக் குடும்பம் எதிர் கொள்ளும் வாழ்க்கை பிரச்சினையே கதையின் மையம்.

குறுநாவலாகத் தெரிகிற இதன் கதை வெளிப் படையானது, முடிவு தவிர்த்து. பாத்திரங்களைத் தன்போக்கில் காண்பித்துக் கொண்டு போவதும், அவர்கள் சம்பந்தப்பட்ட விவரங்களை விஸ்தார மாக விவரிப்பதும், காட்சிகளை அடுத்தடுத்து சித்தரிப்பதுமாக வளர்கிறது கதை.

அந்தக் குடும்பம் இனிமேலும் ஊரில் இருக்க முடியாது என்கிற நிலைக்குள்ளாகும்போது, பஞ்சம் பிழைக்க வெளியேறிப் போக வேண்டியதிருக்கிறது. நடமாட முடியாத, காது கேளாத, கண் சரியாகத் தெரியாத பாட்டியை என்ன செய்வது? இதுதான் பிரச்சினை.

அகஸ்டின், டேவிட், பெரிய அமலம், சின்ன அமலம், ஈசாக், பாட்டி, எஸ்தர் – இவர்கள்தாம் கதை மாந்தர்.

அகஸ்டின் மூத்தவன். எதிலும் இவனை நம்பி எதுவும் செய்ய முடியாது. அமைதியானவன்போல எப்போதும் திண்ணையையே காத்துக் கிடப்பான். ஆனால் உள்ளூர அப்படியல்ல. சதா சஞ்சலப் பட்டவன்.

அடுத்து டேவிட்.

பெரிய அமலம் ஒரு பெரிய குடும்பத்தின் முதல் பெண்ணாகப் பிறந்தவள். மிகவும் அப்பிராணி. அதிகம் பேசாதவள். தனக்கென எதையும் ஸ்தாபித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசையில்லாதவள்.

சின்ன அமலம் இதற்கு எதிரிடையான குணமுடைய பெண்.

ஈசாக் விசுவாசமான ஊழியன். அவனுடைய உலகம் காடு. விளைகளில் விளைகிற பயிர்களுக்காக வும் ஆடு, மாடுகளுக்காகவுமே உலகத்தில் வாழ்கிறவன்.

எஸ்தர் இவ்வளவு பெரிய குடும்பத்தை நிர்வகித்து வருகிறவள்.

பாட்டி ஒரு காலத்தில் எல்லோரையும் சீராட்டின வள். இப்போது உபயோகம் இல்லாதவள். பிழைக்கப் போகிற இடத்துக்குக் கூட்டிக் கொண்டு போக முடியாது இருப்பவள்.

முன்னாலெல்லாம் சாப்பாட்டு நேரம் அந்த வீட்டில் எவ்வளவோ ஆனந்தமாக இருந்தது. இப்போது நெல் அரிசிச் சோறு கிடைக்கவில்லை. கம்பையும் கேப்பையும் கொண்டுதான் சமையல்.

பக்கத்து வீடுகளில் எல்லாம் ஊரை விட்டுக் கிளம்பிப் போய்விட்டார்கள். மேலத் தெருவில் ஆளே கிடையாது. இனிமேல் இந்த ஊரில் என்ன இருக்கிறது. சாத்தாங்கோயில்விளையிலும் திட்டி விளையிலும் மாட்டைவிட்டு அழித்தாயிற்று. கூழ் காய்ச்சவும் வீட்டுச் செலவுக்கும் வரவரத் தண்ணீர் கிடைப்பது அருகிவிட்டது.

காடு மறைந்து கொண்டிருந்தது. விளைச்சலும் இறவைக் கிணறுகளில் மாடுகளின் கழுத்துச் சதங்கை சத்தமும் கண் முன்னாலேயே கொஞ்ச காலமாய் மறைந்துவிட்டன.

'நீயும் உனக்கு பிரியமானவர்களும் இங்கிருந்து போவதைத் தவிர வேறே வழியென்ன? இன்னும் மழைக்காகக் காத்திருந்து மடிவீர்களா?' – எஸ்தர் சித்திக்கு இருட்டு சொன்னது.

யாருக்குமே பற்றாத சாப்பாட்டைத் தட்டுகளில் பரிமாறினாள் எஸ்தர் சித்தி. குழந்தைகளுக்கும் கூடப் போதாத சாப்பாடு.

"நீங்க ரெண்டுபேரும் ஒங்க வீடுகளுக்குப் போய்க்கிங்க. புள்ளையளயுங் கூட்டிட்டுப் போங்க" – பெரிய அமலத்தையும் சின்ன அமலத்தையும் பார்த்துச் சொல்கிறாள் எஸ்தர் சித்தி.

"நீங்க ரெண்டு பேரும் எங்கூட வாங்க. மதுரையிலே போய்க் கொத்தவேல பார்ப்போம். மழை பெய்யுந்தன்னியும் எங்ஙனயாவது காலத்த ஒட்ட வேண்டியதுதானே! ஈசாக்கும் வரட்டும்."

"பாட்டி இருக்காளா?"

–டேவிட் கேட்கிறான்.

பதிலே சொல்லவில்லை எஸ்தர்.

அன்றைக்கு ராத்திரியில் சுமார் ஒரு மணிக்கும் மேல் வறட்சியான காற்று வீச ஆரம்பித்தது. அப் போது நடு வீட்டில் குழந்தைகளிடத்தில் படுத் திருந்த எஸ்தர் சித்தி எழுந்து போய்ப் பாட்டியின் பக்கத்தில் படுத்துக்கொண்டாள்....

**பா**ட்டியைக் கல்லறைத் தோட்டத்திற்குக் கொண்டுபோகிறதுக்கு, பக்கத்து ஊரான குரும்பூரி லிருந்து ஒரு பழைய சவப்பெட்டியை மிகவும் சொல்பமான விலைக்கு, ஈசாக்கே தலைச் சுமையாக வாங்கிக்கொண்டு வந்தான்... ....

யாரும் அழவே இல்லை. மாறாகப் பயந்து போயிருந்ததை அவர்களுடைய கலவரமான முகங்கள் காட்டின... ....


எஸ்தர் சித்திக்கு மட்டும், பாட்டியின் ஈரம் நிரம்பிய கண்கள் கூரையைப் பார்த்து நிலைகுத்தி நின்றது அடிக்கடி ஞாபகத்துக்கு வந்துகொண்டே இருந்தது.

**க**ண்களில் இமைகளைச் சுற்றி ஈரம் கசிந்து கொண்டிருந்தது பாட்டிக்கு. எஸ்தர் சித்தி வீட்டில் எல்லோரும் தூங்கியான பிறகு அடிக்கடி கைவிளக்கைத் தூண்டிக் கொண்டு வந்து பார்ப்பாள். அந்த வெளிச்சத்தில், அவள் கண் களின் ஈரத்துக்குப் பின்னே அழியாத நம்பிக்கை இருக்கும்... ...

இவ்வளவு தீவிரமாக நம்பிக்கைகொண்டு உறக்கமின்றிக் கூரையைப் பார்த்துக் கொண்டி ருக்கிறவளை விட்டுவிட்டுப் போவதைத் தவிர வழி என்ன? ஈசாக் துணையாக இருப்பானா?

**பா**ட்டியை என்ன செய்வதென்ற பிரச் சினையை எஸ்தர் சித்திதான் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எதிர் கொள்கிறாள். தீர்த்து வைக்க வேண்டியதாக இருக்கிறது. தீர்த்து வைக்கிறாள். பாட்டியின் இருப்பு, இவர்கள் பஞ்சம் பிழைக்கப் போகிறதுக்கு முன் கேள்வியாகிறது. அதுக்கு ஒரு விடை காண வேண்டியதிருக்கிறது. அந்தக் குடும்பத்தில் எஸ்தர் சித்தி ஒருத்திதான் இதை எதிர்கொண்டு சமாளிக்கத் திராணி கொண்டவளாக இருக்கிறாள். கடின சித்தம் கொண்டு பாட்டியின் இருப்பை முடித்து வைக்கும் படியாகிறது அவளுக்கு.

## புழுவும் கூடும்



வாழ்வில் தீராத காதல் கொண்ட புழு
வண்ணத்துப் பூச்சியாய் சிறகை விரித்தது.

அந்தப்புழு எச்சிலைப்பட்டாக்கி
கோட்டை கட்டியபோது
இந்தப் பாதுகாப்பான அரண்மனையில் நீ
முடிசூடிக் கொள்க என்று வாழ்தினேன்.
திரும்பி இன்று பார்க்கையில் அன்று
நடைப்பிணமாக நான் இருந்ததை உணர்கிறேன்.

வாழ்வில்லாத பாதுகாப்பென்பது
திறந்த சிறை
வாழ்வின் முடிவு
இதற்கோ இந்தச் சிறகுத் தவமென
புழு வினவியது.

கண்ணீர்த் தறியில்
நம்பிக்கை ஒளியைப் பொறுமையாய் கோர்த்து
வண்ணச் சிறகுகள் நெய்த அப்புழு
இனிக் காலமும் வெளியும் தனதே என்று
குதூகலித்தது.

கன்னித்தேன் மணத்ததும்
கிளர்ச்சி அடைந்து தன்
பட்டுக் கோட்டையைத் தகர்த்தபோது
வண்ணத்துப் பூச்சியாய் இருந்தது அப்புழு
வாழ்வை நேசித்த அப்புழுவே
துளிர்க்கிற மரங்களுக்கும்
உயிர்கிற புற்களுக்கும் ஆதர்சம்

இனி அகதி எனக்கும்.

– வ.ஐ.ச.ஜெயபாலன் –

காலில் காயம்பட்டு ஓடமுடியாத படியான பந்தயக் குதிரை சுட்டுக் கொல்லப்படுகிறது. அதன் இருத்தல் அர்த்தமற்றதாகப் போகையில் இப்படி முடிவு நேர்கிறது. குணப்படுத்த முடியாத நோயின் கொடுமைக்கு ஆளாகிற உயிர், போரில் குண்டடிபட்டு பிழைப்பது கஷ்டம் என்கிற அளவுக்குள்ளாகும் சிப்பாய் இவர்களுக்கெல்லாம் Mercy Killing இருக்கிறது. இதேபோல பாட்டிக்கும்.

வண்ணநிலவன் அதிகமான அன்பை பிரசாரம் செய்பவர், பொதுவில். இங்கே இப்படியாக இருக்க நேரும் 'அன்பு'. பாட்டியை என்ன செய்வது? விட்டுவிட்டுப் போகவும் முடியாது. கூட்டிக்கொண்டு போகவும் முடியாது. பிறகு என்ன செய்யலாம். 'கருணைக் கொலை'தான் செய்யத் தோன்றுகிறது எஸ்தர் சித்திக்கு. வேறே வழியில்லை. அவள் பெரிய அமலத்தையும் சின்ன அமலத்தையும் அவர்கள் பிறந்த வீட்டுக்குப் போகச் சொல்லி விடுகிறாள். அகஸ்டினையும் டேவிட்டையும் ஈசாக்கையும் பஞ்சம் பிழைக்கக் கூட்டிக்கொண்டு போக முடிவு செய்கிறாள். பாட்டியை என்ன செய்வாள்?

பாட்டியின் முடிவு சூசகமாகக் காண்பிக்கப் படுகிறது. சிலவற்றை பூடகமாகத்தான் பேச வேண்டி யிருக்கிறது. அந்த உயிரின் 'விடுதலை' அப்படி யானது.

**ப**டிக்காத பெண்ணின் ஜெபம், வாய்க்காலுக்கு அப்பால் வளராத ஊர், இளநீல வர்ணச் சுவர்கள், ஒரு வெள்ளை வெயில், உயிர் பெற்றுவிட்ட இருட்டு, ஆட்டுப் பிழுக்கை மணம் கலந்த காற்று, ரயில்வே ஸ்டேஷனில் தண்ணீர் பிடிப்பது, தண்டவாளத் தின்மீதேறி மந்தையாகக் கடந்து போகும் ஆடுகள் – காட்சிச் சித்தரிப்புகளெல்லாமே கதையம்சத்தில் கலந்திருப்பவை.

வழக்கமான கதையைக் காட்டிலும் இதில் விவரணங்கள், தகவல்கள் அதிகப் பங்கு வகிக் கின்றன. இவை கதையைத் தீவிர கதிக்கு இட்டுச் செல்லுவதாகவே அமைந்திருக்கின்றன.

நிறைய பாத்திரங்களும் அநேக விஷயங்களும் உள்ள இக்கதையின் உருவவொழுங்கு சிதையாது, உருவ அமைதி கெடாது இருப்பது உண்டு பண்ணிக் கொண்டதாக இருக்க முடியாது. தன்னியல்பில் கூடிவந்ததாகவே இருக்க வேண்டும்.

இந்தக் கதையின் நடை கடல்புரத்தில் போல பைபிள் நடையில்லையெனினும் பெரிதும் அதன் சாயலிலான அமைதியும் எளிமையும் உள்ளது. அவனூர், அண்டைவீட்டார் கதைகளைவிடவும் பைபிள் சாயல் குறைவு.

இல்லாமையில் நேர்கிற நொம்பலங்கள், வறுமை, தரித்தர நிலையில் இருக்கும்படியான வாழ்வு இவற்றைச் சரியாகச் சொல்கிற படைப்புகள், தமிழில் மிக மிகச் சொற்பம். இவை கலை இலக்கியமாவது கஷ்டம் என்பதோடு, சரியாக எழுதுகிறவர்கள் இல்லை என்பதும் இன்னொரு உண்மை. எஸ்தர் கதை இலக்கியமாகியிருக்கிறது என்றால், இதன் பின்னணியில் இந்தக் கலைஞனுக்கு இருக்கும் இது போன்ற வாழ்வனுபவமே காரணம். அனுபவ வறுமை யுள்ளவன் ஒருநாளும் கலைஞனாக மாட்டான். நிறையச் செய்யலாம். செய்து? இலக்கியம் செய்வது இல்லை. படைப்பது. எஸ்தர் படைப்பு. படைப்பாளி களாக விரும்பும் இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டிய படைப்பு. ●

எரிஷ் ஃப்ரீட் *(Erich Fried)*

– புலம்பெயர்ந்த ஒஸ்ற்றியக் கவிஞர்

# மறப்பதற்கு அழைப்பு



"அவர்கள் மட்டும் தமது பழைய கோரிக்கைகளை இறுதியாக மறப்பார்களென்றால்! "

–ஸியோனிஸ்டுகளின் வாதம்

மடக் கதை கதையாதே
என்கிறது காற்று
உலகம் சுழல்கிறது
எல்லாம் மாறுகிறது
முடிந்ததை நீ மறந்தே ஆக வேண்டும்

நீ உன் வயலை மறக்கமுடியுமாயின்
என்கிறது நஞ்சூட்டப்பட்ட பயிர்
நீ உன் வெள்ளை வீட்டை மறக்கமுடியுமாயின்
என்கிறது இடிந்த கல்
பழுப்புக் குடத்தை நீ மறக்கமுடியுமாயின்
என்கின்றன ஓட்டுத் துண்டுகள்
ஒலிவ் மரத்தை நீ மறக்கமுடியுமாயின்
என்கிறது மரக்குற்றி
தோடை மரங்களை
என்கிறது எரிந்த தோப்பு

நீ உன் இரு சகோதரிகளையும் மறக்கமுடியுமாயின்
என்றது புதைகுழிகட்குச் செல்லும் பாதை
ஓலங்களை நீ மறக்க முடியுமாயின்
என்றன செவிகள்
அப்போது
அபாயத்துடன் விளையாடுவதை நீ நிறுத்தலாம்

பிடுங்கப்பட்டு மரத்தினின்று சுதந்திரம் பெற்ற
அத்திக் கனி போலக்
கப்பலின் வயிற்றுள் நீ கடற்பயணம் போகலாம்
காற்றில் மணற் துணிக்கைபோல விடுதலைகாணலாம்
இறுதியாக
நீ இழந்த சொந்த மண்ணினின்று விடுதலை
பெறலாம்

உலகம் சுழல்கிறது
முடிந்ததை நீ மறந்தே ஆக வேண்டும்
மடக்கதை கதையாதே
என்கிறது காற்று–
உன்னை துரத்தியவர்களது பக்கத்தினின்று
வீசியவாறு.

(தமிழில்–மணி)

# மௌனம்

## வெளியீட்டாளர் குறிப்பு :

தன் இயல்பான சிரமங்களுக்கெல்லாம் முகம்கொடுத்து ஒருவாறு மௌனம்-4 வெளிவந்துவிட்டது. தன் வாசகர் பெருந்தகைகளுடன் கலந்துரையாடவும் விளைந்தாயிற்று. உலகின் பல்வேறு பாகங்களில் பரந்து நிற்கும் வாசகர்களின் எண்ணவோட்டங்களை 'மௌனம்' அறியக் கொள்ளும் அவா இருக்கின்றதே.... அதை வார்த்தைகளில் வடித்திட முடியாது! இந்த உயிரோட்டமான தொடர்பின் உந்துதலி னால்தானே பெரும்சிரமங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து இதழ் விரிகின்றது.

'மௌனத்தின்' வெளிவருதலில் காலஇடைவெளி அதிகமாதல் பல வாசகர்களின் உரிமையான கோபத்திற்கு இலக்காகிறது. புலம்பெயர் மண்ணில் பல்வேறு இயலாமைகளுக்கும் மத்தியில் தமிழ்தேடும் நெஞ்சங்களின் உந்துதலால் வெளிவரும் இதழ்தானே 'மௌனம்' கிரமமாக வெளிவர எத்தனிக்கும் முயற்சிகள் தொடரத்தான் செய் கின்றன- ஆனாலும்..... தேவை : உறுதுணையான ஒத்துழைப்புகள்-

பல்கிப்பெருகும் நண்பர்கள் வட்டத்தின் தேவையை ஈடுசெய்ய இம்முறையில் இருந்து மௌனம் 1000 பிரதிகளாக வெளிவருகின் றது. இதழின் அட்டையை பெருந்தன்மையுடன் அச்சிடும் வாசன் லித்தோ பிரிண்டேர்ஸ் (081-6404366) உரிமையாளருக்கும், ஊழியர் களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகள். இம்முறை கணணி ஒத்துழைப்பு வழங்கிய திரு.சூரியகுமார் அவர்கட்கும், புதிய எழுத்து வடிவங்களை தந்து உதவிய திரு.செல்வ மதிந்திரன் (சுவிஸ்) அவர்கட்கும் எம் நன்றிகள்.

தவிர பல்வேறு வகைகளில் எம்மை ஊக்குவித்துவரும் அனைவருக் கும் எம் நன்றிகள்- புகலிடவாழ்வில் தடம்பதித்துள்ள நல்இதயங்க ளின் ஒத்துழைப்பினால்தான் 'மௌனம்' வெளிவருகின்றது. இந்த ஒத்துழைப்பு மேன்மேலும் பெருக 'மௌனம்' செழுமையடையும்- விரியும்- மெருகூட்டப்படும்.

இந்தியாவில் 'மௌனம்' இதழைப் பெறவிழைவோர்,

திரு. அதியமான்
'அலைகள் வெளியீட்டகம்'
36, தெற்கு சிவன் கோவில் தெரு,
சென்னை 600024

என்ற முகவரியாளருடன் இலகுவில் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். இந்திய வாசகர்களுக்கு மௌனம் இதழ் இனிவரும் காலங்களில் இவருடாகவே கிடைக்கப்பெறும். இதேபோல் இலங்கையிலும் விரிவுபடுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன-

மௌனம் இதழின் ஆண்டுச்சந்தா (வருடமொன்றுக்கு) அன்பளிப்பு 100 FF என்பதை புலம்பெயர் வாசகநண்பர்களுக்கு அறியத்தருகின் றோம். இந்த முடிவுதொடர்பான கருத்துக்களை அறிய ஆவலுடை யோம்.

எம்முடன் தொடர்பு கொள்பவர்கள் ஆதரவுநல்க விழைபவர்கள் P.CHARLES VIGNES என்ற பெயருடன் மட்டும் தொடர்பு கொள்ளவே ண்டும் என அன்பு வேண்டுகோள்விடுக்கின்றோம். மேலும் கட்டு ரையாளர்கள், தொகுப்பாளர்கள், வெளியீட்டாளர்கள் என்பவர்க ளுக்கு தனியாக தொடர்புகொள்ள விரும்புவோர் அவர்களின் பெயரை கடித உறைகளில் இடவேண்டாம். புனைப்பெயரில் உள்ள வர்களின் கடிதங்களை (தபால் சட்ட ஒழுங்குமுறைப்படி) பெற முடியாது. தயைசெய்து கவனத்தில் கொள்க. கடிதத்தினுள்ளே வேண்டிய பெயரைச் சுட்டிக் கொள்ளலாமே-

அனைத்துத் தொடர்புகளுக்கும் : Mr. P. CHARLES VIGNES / MOUNAM No 6, Square du Roule, 92200 NEUILLY S/SEINE - FRANCE.

## ○○○கு ஞ் ச ர ம்

பிரெஞ்சு கற்கும் வகுப்பறை. அகதிகள் மட்டும் படிப் பதற்கான கல்விக்கூடம்.
ஒரு நாள் கற்பனை வாக்கியங்கள் (HYPOTHESE) பற்றிய பாடம் நடந்து கொண்டிருந்தது.

ஆசிரியை பெண்களைப் பார்த்து 'நீங்கள் ஆண்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?' எனக் கேட்க,

" என் மனைவிக்கு அதிக சுதந்திரம் கொடுப்பேன். வீட்டு வேலைகளில் அவளுடன் நானும் பங்களித்து உதவி செய்வேன். "

"வேறு பெண்களைப் பார்க்காமல் என் மனைவியுடன் அதிக நேசத்துடன் இருப்பேன். "

"அவளின் சுதந்திரத்தில் தலையிடாமல் நடப்பதோடு பொதுவான வேலைகளில் அவளின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுவேன். "

"அவளின் தனிப்பட்ட செயல்பாடுகள், விருப்பங்கள் எதிலும் தலையிடமாட்டேன். மன மகிழ்ச்சியுடன் இருக்க உதவுவேன். "

என்றவாறு பல்வேறு இன அதிகப் பெண்கள் சொல் லச் சொல்ல என் பார்வை அகண்டு சென்று கொண் டிருந்தது. பெண்களை முடித்துக் கொண்ட ஆசிரியை ஆண்களைப் பார்த்து 'நீங்கள் பெண்ணானால். . . . "

என்னிடம் கேள்வி வர 'நான் மிக மகிழ்ச்சியாக இருப் பேன்" என்றேன். வகுப்பில் இருந்த அனைத்துப் பெண்களும் ஆசிரியை உட்பட என்னைப் பரிதாபமா கப் பார்த்தார்கள். ஏன்?

- கமலேந்திரன்

# கு.அழகிரிசாமி

## (23.9.1923 - 5.7.1970)



*"தமிழ்நாட்டின் தலைசிறந்த சிறுகதை ஆசிரியர்கள் என்று புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன், ஜானகிராமன் ஆகிய நால்வரையும் நான் கருதுகிறேன். நான் படித்த அளவில் நல்ல பல அல்லது சில சிறுகதைகளை எழுதியிருப்பவர்கள் : சிதம்பர சுப்பிரமணியம், ப.ஸ்ரீனிவாசன், கிருஷ்ணன் நம்பி, ராஜம் கிருஷ்ணன், சிற்சில நல்ல அம்சங்களைக் கொண்ட கதைகளை - பத்திரிகைகளில் வெளிவந்தால் நான் ஒதுக்கி விடாமல் படிக்க விரும்பும் கதைகளை- எழுதுகிறவர்கள்: நா.பார்த்தசாரதி, ரகுநாதன், து.மாதவன், ம.ராஜாராம், பி.எஸ்.ராமையா, க.நா.சுப்ரமணியம்".*

*கு.அழகிரிசாமி -*
*(தீபம் - ஏப்ரல் 1967 இதழில் 'தமிழ்ச்சிறுகதைகளின் பொற்காலம் இது' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில்..)*

*சுமார் முப்பதாண்டு காலமாகத் தமிழில் சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, இலக்கியக் கட்டுரைகள் மற்றும் தொகுப்பு, பதிப்பு, மொழிபெயர்ப்பு என்று பலதளங்களில் செயல்பட்டவர் கு.அழகிரிசாமி (செல்லையா).*

*பள்ளியிறுதி வகுப்புடன் கல்வியை முடித்துக்கொண்ட இவர், ஆரம்பத்தில் தொடக்கப்பள்ளி ஆசிரியராகவும் பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தில் எழுத்தாராகவும் பணியாற்றியவர். அதன்பின் -1943 முதல் 1965 வரை- பல்வேறு இதழ்கள், நாளிதழ்களில் துணையாசிரியராகப் பணியாற்றியவர். தமிழறிஞர்கள் பலருடன் நெருங்கிப் பழகிய இவர் சிறந்த சொற்பொழிவாளரும் கூட. 1967 ல் இலங்கை தமிழீழப் பகுதிகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியவர்.*

*புதுமைப்பித்தனிடம் பெருமதிப்புக் கொண்டிருந்த அழகிரிசாமி, அவரைப்போலவே பழந்தமிழிலக்கியத்தில் ஈடுபாடும் கொண்டவர். அவை குறித்துப் புதுமைப்பித்தன் ஒருசில கட்டுரைகளே எழுதியிருக்கையில், இவர் எழுதியுள்ள கட்டுரைகளோ எண்ணிக்கையில் இவரது சிறுகதைகளைவிடவும் பலமடங்கு அதிகமாகும். பல்கலைக்கழகங்கள் சார்ந்தோரால் அதிகம் அறிமுகப் படுத்தப்படாத இடைக்காலப் புலவர்களின் கவிதை நயங்களை நவீன தமிழிலக்கிய வாசகர்களுக்கு எளிய நடையில் அறிமுகப்படுத்தியவர். இவ்வகையில் எந்த நவீன தமிழ்ப் படைப்பாளியும் இவரைப் போல் தீவிர முனைப்புடன் செயல்பட்டதில்லை. இந்த ஈடுபாட்டின் தாக்கம் இவரது மொழிநடையிலும் வெளிப் படக் காணலாம்.*

*தமிழ்ச் சிறுகதையுலகில் சாதனை புரிந்தவர்களென க.நா.சுப்ரமணியம் குறிப்பிட்டுள்ள பத்துப் பேரில் அழகிரிசாமியும் ஒருவர். தமிழிலக்கிய உலகில் இவரது பெயரை நிலைத்திருக்கச் செய்பவை இவரது சிறுகதைகள் தாம். ஏனைய இவரது நாடகங்கள், நாவல்கள் கலைவெற்றி கைகூடாத முயற்சிகளே.*

நாற்பதுகளின் ஆரம்பம். தமிழ்ச்சிறுகதையுலகில் புமைப்பித்தன் தன் சிகர சாதனைகளைப் படைத்துக் கொண்டிருந்த காலகட்டம். மௌனி, ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், பி.எஸ்.ராமையா போன்றோர் சிறுகதைகள் எழுதிக்கொண்டிருந்த காலகட்டம். லா.ச. ராமமிருதம், தி.ஜானகிராமன் இருவரும் எழுத்துத்துறையில் கால்பதித்துக் கொண்டிருந்த காலகட்டம். இந்தக் காலகட்டத்திலேயே சிறுகதைகள் எழுதத் தொடங்கினார் அழகிரிசாமி.

சுதந்திரப்போராட்டம் தீவிரமடைந்திருந்த காலகட்டம் இது. எனினும், தனது முன்னோடியான புதுமைப்பித்தனைப் போலவே இவரும் தனது படைப்புக்களில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துச் சித்தரித்துக் காட்டாமல், மனித வாழ்வின் அவலங்களையும், மனித மனங்களில் தூசுபடிந்து கிடக்கும் மேன்மைக் குணங்களையுமே பொருளம்சங்களாகக் கையாண்டார்.

அழகிரிசாமியின் ஆரம்பகாலக் கதைகளில் புதுமைப்பித்தனின் தாக்கத்தைச் சற்றே காணலாம். உதாரணமாக, மளிகைக்கடை சரசுவதி, வள்ளியின் வாழ்க்கை, விதவை போன்ற கதைகள். என்றாலும், புதுமைப்பித்தனைப் போலல்லாமல், இக்காலகட்டக் கதைகளிலும் இவரின் நம்பிக்கையின் குரலே மேலோங்கி ஒலிக்கிறது. 'வள்ளியின் வாழ்க்கை' கதை இவ்வாறு முடிகிறது: "தனக்கும் ஆதரவாக ஒரு மகன். அவனும் சம்பாதிக்கிறான் என்ற எண்ணம்தான் வள்ளியினுடைய இருளடைந்த வாழ்க்கையிலும் பிரகாசித்து நிற்கும் ஒரு ஜோதி".

- ராஜமார்த்தாண்டன்

இவரது சிறுகதையுலகம் குடும்பம் சார்ந்தது. நுட்பமான சிடுக்குகளும், சிக்கல்களும் அதிகமில்லாத மனிதர் களின் குடும்பம் சார்ந்தது. பெரும்பாலும் அன்பையும் பாச உணர்வையும் பிரதானமாகக் கொண்ட குடும்பம் சார்ந் தது. படித்து உத்தியோகத்திலிருக்கும் நகரம் சார்ந்த நடுத்தரக் குடும்பங்கள், அன்றாட வயிற்றுப்பாட்டுக்கே அல்லாடும் ஏழைக்குடும்பங்கள் சார்ந்தது.

இவரது கதைகளில் காதல் மென்மையாகவும் இலக்கிய நயத்துடனும் சொல்லப்படுகிறது. வாழ்க்கைப் பயணத் தில் இயல்பாக நிகழும் உணர்ச்சிகரமான, சுகானுபவ மான ஒரு நிகழ்ச்சியாகவே காதல் இடம் பெறுகிறது. கைகூடினால் சந்தோஷம்; இல்லையேல், விதித்தது அவ்வளவுதான் என்ற மனத்துக்கத்துடன் அமைதி பெற்று, எதிர்வரும் வாழ்க்கையை மனப்பூர்வமாக ஏற் றுக்கொள்ளும் காதலர்கள். மனமொடிந்து, வாழ்க்கை முழுவதும் அழுதுபுலம்பி மாய்ந்து கொண்டிருப்ப தில்லை இவர் கதைகளில் வரும் காதலர்கள். இவரது இரண்டு கதைகளில் (அழகின் விலை, பங்கஜத்தின் தற்கொலை) வரும் இரண்டு பெண்கள் காதல் தோல்வி யினால் தற்கொலை செய்து கொள்வதாக வந்தாலும், அதற்கான முதன்மையான காரணம் காதல் மட்டுமன்று. மேலும், படித்து, உத்தியோகம் பார்க்கும் நடுத்தர வர்க் கத்துக் குடும்பங்களில்தான் இந்தக் காதல் விவகாரங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. காதலை மையமாக வைத்து இவர் எழுதியுள்ள சிறுகதைகள் படிப்பதற்குச் சுவாரஸ் யமாக இருக்கின்றன என்பதற்கு மேல், இவரது சிறந்த கதைகளின் வரிசையில் இடம்பெறும் அளவில் சிறப்பாக அமையவில்லை.

குழந்தைகளின் விளையாட்டுத்தனங்கள், போட்டி-பொறாமைகள், ஏக்கங்கள் இவரது கதைகளில் இயல் பாகவும், அற்புதமாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. புது மைப்பித்தன் கதைகளில் போலவே இவரது கதைகளி லும் குழந்தைகள், குழந்தைகளாகவே வருகின்றன. வயதுக்கு மீறிய பெரிய பேச்சுகள் பேசாமல் இயல்பாக நடக்கின்றன. சிரிக்கின்றன, கோபப்படுகின்றன, அழு கின்றன, ஆர்ப்பாட்டங்கள் செய்கின்றன. இவரது சிறந்த சிறுகதைகளில் இரண்டு குழந்தைகளை மையமாக வைத்து எழுதப்பட்டவையே- 'அன்பளிப்பு', 'ராஜா வந்திருக்கிறார்'.

வறுமை காரணமாகப் பெண்கள் நிர்ப்பந்தமாக உடலை விற்றுப் பிழைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் இவரது ஒன்றிரண்டு கதைகளில் சொல்லப்பட்டுள்ளது (திரிபுரம், ஜாதியாச்சாரம்). இந்தக் கதைகளில் அழகிரி சாமி உணர்ச்சிவயப்பட்டு, கதையின் போக்கில் குறுக்கி டுவதையும் காணலாம். வாழ்க்கை மீதான இவரது ஒழுக்கம் சார்ந்த அழுத்தமான மதிப்பீடுகளே இதன் காரணமெனலாம். பொதுவாக இவரது கதைகளில் வரும் பெண்கள் அன்பும், பரிவும், பாசமும் நிறைந்த மரியாதைக்குரியவர்களாகவோ அல்லது அவற்றிற்கு ஏங்குபவர்களாகவோதான் சித்தரிக்கப்பட்டுள்ளனர். அழகும் அற்புதமான குணநலன்களும் கொண்ட பெண் களின் பெருமைகளைப் பேசுவதில் அலாதியான ஈடு பாடு அழகிரிசாமிக்குண்டு என்பதை இவரது சிறுகதை களிலும் 'தீராத விளையாட்டு' நாவலிலும் காணமுடியும்.

ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் இவரது கதைகள் பெரும்பாலும் கோவில்பட்டி வட்டா ரக் கிராமங்களையே நிலைக்களனாகக் கொண்டிருக்கின் றன. இவரது கதைகளில் வரும் ஏழைகள், தங்கள் நிலைமைக்காக யாரையும் நொந்துகொள்வதில்லை. கடவுள் தங்களுக்கு விதித்தது அவ்வளவுதான் என்று, வறுமை நிலையை எவ்விதக்கசப்போ, ஆத்திரமோ இல்லாமல் ஏற்றுக் கொண்டு வாழ்க்கையை நடத்தப் பழகிவிட்டவர்கள். தங்களையொத்தவர்களைப் போலவே, தங்களைவிட வசதியானவர்களிடமும் அன் பாக இருப்பவர்கள்; பரஸ்பரம் உதவிசெய்து மனநிறைவு கொள்கிறவர்கள்.

நடுத்தரவர்க்கத்துக் குடும்பங்களின் பற்றாக்குறைப் பொருளாதார பிரச்சனை, அக்கம்பக்கத்து வீட்டாருட னான உறவுகள்- சச்சரவுகள், மனக்குறைகள், சந்தோ ஷங்கள், ஏக்கங்கள், கனவுகள்- இவரது கதைகளில் யதார்த்தமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய குடும்பங்களில் ஆண்கள்- பெரும்பாலும்- தாராள குண முள்ளவர்களாகவும் மனைவிமார்களிடம் அன்புள்ளவர் களாகவும் வருகின்றனர். பெண்களும் அப்படியே- தம் கணவர்களிடத்தில் மாறாத அன்புடையவர்கள்- மற்றவர் களிடத்தில் இரக்க சிந்தனையுடையவர்கள்.

இவ்வகையில் அழகிரிசாமியின் கதைகளில் வரும் மனி தர்கள்- ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி- பொதுவாகவே நல்லவர்கள். சிலர் லட்சிய புருஷர்கள் என்னுமளவுக்கு மிகமிக நல்லவர்கள். சிலர், ஒருசில பலவீனங்கள் கொண்டவர்களாயினும் பொதுவாக நல்லவர்கள். இவர் கதைகளில் மோசமான குணங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள ஒரே நபர், 'தகப்பனும் மகளும்' கதையில் வரும் தகப்பன் மட்டும்தான் என்று சொல்லத் தோன்றுகிறது. ஒருவகையில் இந்தத் தகப்பன் இவரது 'புதுவீடு புது உலகம்' நாவலில் படுத்த படுக்கையாகக் கிடந்து தனது மனைவி, மகள்களைப் பாடாய்ப் படுத்தும் தகப்பனை நினைவுபடுத்துகிறவன்.

அழகிரிசாமி கதைகளில் வரும் பாத்திரங்களும் சம்பவங் களும் யதார்த்தமானவை. கதை சொல்லும்முறை, பாத்திரப்படைப்பு, செய்நேர்த்தித்திறன், கச்சிதமான முடிவு காரணமாகக் கதை நிகழ்வு மேலதிக அழுத்தம் பெற்றுவிடுகிறது. அதே சமயம் பலகதைகளில் பின் பகுதி நிகழ்வுகளும் பாத்திரங்களின் செயல்பாடுகளும் சற்றே உணர்ச்சிமயமானவையாக அமைந்துவிடுகின்றன.

தமிழ் எழுத்தாளர்களைப் பற்றிய இந்தத்தொடர் பதிவுகள் காலவரிசைப்படி இல்லாமல், சற்று முன்பின்னாக இருக்கும்.
- தொகுப்பாளர் -

இதற்கான காரணங்களாக அழகிரிசாமியின் கதைகளில் வரும் பாத்திங்களின் தன்மைகளையும் செயல்படுகின்ற சம்பவத்தளங்களையும் குறிப்பிடலாம். அழகிரிசாமியின் பிரக்ஞைபூர்வமான தேர்வுகள் இவை. இந்தப் பிரக்ஞைக்கு அழுத்தமான பின்புலம் உண்டு. மனிதனின் மேன்மைக் குணங்களில் அதீதமான நம்பிக்கை, வாழ்வு குறித்த திடமான ஒழுக்கக்கட்டுப்பாடுகள்- இவை காரணமாக ஏற்படுத்திக் கொண்ட உறுதியான இலக்கிய வெளிப்பாட்டு முறைகளே அந்த அழுத்தமான பின்புலமாகத் தோன்றுகிறது.

மனித வாழ்க்கையின் அவலங்களையும் குரூரங்களையும் பலவீனங்களையும் கலாபூர்வமாகச் சித்தரித்துக் காட்டுவதன் மூலம் இன்றைய வாழ்க்கை மீதான திருப்தின்மையை வெளிப்படுத்தி, எதிர்மறைத்தன்மையில் இயங்கியவர் புதுமைப்பித்தன். அழகிரிசாமியோ வாழ்க்கையின் அவலங்களைச் சொல்வதுடன் மட்டுமே நின்றுவிடாமல், வாழ்க்கை- மனிதன்- எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் தன் கதைகளில் காட்டுவதில் முனைப்பாகச் செயல்பட்டவர். வாழ்க்கையின் அவலங்களைக் காட்டும் இவரது கதைகளை விடவும் மேன்மைகளைச் சொல்லும் இவரது கதைகளே சிறப்பாகவும் அமைந்துள்ளன.

"ஆட்டிக் குலைக்கும் வாழ்விலும் மனித ஜீவன்கள் தக்கவைத்துக் கொண்டிருக்கும் மேன்மைகள் இவரைப் புல்லரிக்கச் செய்கின்றன. கு.ப.ரா.வைப்போல் எளிமையான சாயலும், மென்மையான குரலும், மிகுந்த சிறுகதைப் பிரக்ஞையும் கொண்டவர்" என்று அழகிரிசாமியைப் பற்றி சுந்தர ராமசாமி முன்வைத்துள்ள கணிப்பு மிகவும் பொருத்தமானதே.

அழகிரிசாமியின் பலசிறுகதைகளிலும் மனித மனங்களின் சிடுக்குகளும் முரண்பாடுகளும், அதனால் ஏற்படும் மோதல்களும் உள்முரண்களும் நுட்பமாகவும் அழுத்தமாகவும் காட்டப்படவில்லை. இதனால் வாழ்க்கை குறித்த கேள்விகளும் அதைத் தொடர்ந்துவரும் சந்தேகங்களும் அதன் காரணமான தீவிரமான தேடல்களும் வெளிப்படவில்லை எனலாம். ஒருசில கதைகளில் வெளிப்படும் சிக்கல்களும் முரண்பாடுகளும் கூட, ஆழ்ந்த தளத்தில் தீவிரம் கொள்ளவில்லை. அதிக சிடுக்குகள் இல்லாத வகையிலே அவை நிகழ்ந்து முடிச்சுகள் எளிமையாகவே அவிழ்க்கப்பட்டுவிடுகின்றன. இதன் காரணமாகவே இவரது சிறுகதைச் சாதனை, புதுமைப்பித்தனின் தரத்தை எட்டவில்லை என்று சொல்லத் தோன்றுகிறது.

மேலும் கலாபூர்வமான இந்தத் தீவிரமின்மை, இவரது சிறுகதை அமைப்புமுறை, உருவப் பிரக்ஞை, செய்நேர்த்தி, யதார்த்தமான வாழ்க்கைச் சித்தரிப்பு, அழகியல் வெளிப்பாடு காரணமாக சிறுகதைகளில் பெரிதாகத் தெரியவில்லை. அதேசமயம், விரிந்த தளத்தில் இயக்கும் நாவல் அமைப்பில் அது பூதாகாரமாகத் தெரியத்தான் செய்கிறது. இவரது நாவல்களின் கலாபூர்வமான தோல்விக்கான முதன்மைக்காரணம் இதுவேயெனலாம்.

தமிழ் எழுத்தாளர்கள் பலரையும் போலவே இவரது பிற்காலத்து படைப்புகள் சிறப்பாக அமையவில்லை. ஐம்பதுகளில் இவர் எழுதிய சிறுகதைகளே இன்று கவனத்தில் கொள்ளத் தக்கனவாக உள்ளன. அறுபதுகளில் எழுதியவற்றை அவ்வளவாகச் சிலாகித்துச் சொல்லமுடியவில்லை.

முருங்கைமர மோகினி, குமாரபுரம் ஸ்டேஷன், அன்பளிப்பு, ராஜா வந்திருக்கிறார், அழகம்மாள் போன்ற கதைகள், அழகிரிசாமி என்னும் சிறுகதைப் படைப்பாளியை இன்றும் நம் நினைவில் வைத்திருக்கச் செய்பவை.

## பாரீசில் கவலைதரும் ஆயுத வன்முறை

*'ஆசியா' என்னும் நூல்வெளியீட்டு நிறுவனத் தலைவர் திரு.ச.சபாலிங்கம் (42) அவரது இல்லத்தில் வைத்து பட்டப்பகலில் இரண்டு துப்பாக்கி இளைஞர்களால் கொல்லப்பட்டது அதிர்ச்சியும், கவலையும் தரும் தகவலாக எட்டியது.*

*'மே தினம்' தற்போது உலகெங்கிலும் வெற்றுக் கேளிக்கை தினமாகிவிட்ட நிலையில், கடந்த சில வருடங்களாக பல்வேறு அசம்பாவிதங்களை இத்தினம் பதிவாகிக் கொண்டிருக்கின்றது. 1994 மேதினத்தன்றிலேயே மேற்படி அதிர்ச்சியான சம்பவம் நிகழ்ந்தது.*

*1994 தொடக்க நாளன்று பாரிசின் கடைத்தெருவொன்றில் தமிழர்களுக்கிடையில் ஏற்பட்ட மல்லுக்கட்டலின் போது துப்பாக்கி வெடித்தது- அதன்பின் தை மாதத்தில் பாரீஸ் 'ஈழநாடு' காரியாலயம் தீமூட்டப்பட்டது. தற்போது திரு. சபாலிங்கம் கொலை-*

*இவை ஒவ்வொன்றும் ஒன்றோடொன்று தொடர்பற்றவையாயினும் ஏன் நிகழ்ந்தன? தஞ்சம் கோரிய இடங்களிலுமா?*

*புலம்பெயர் இலக்கியமென தமிழில் ஒரு கூறு புதிதாகத் தோன்றி வளர்கின்றதென தமிழ் ஆர்வலர்களால் பெருமிதம் கொள்ளப்படும் வேளையில் இத்தகைய சமிக்ஞைகள் சொல்வதென்ன?*

*உலகில் இன்று 'தமிழ்மொழி' அறியப்படப்போவது ஈழத்தமிழரால்தான் என்று தமிழ்நாட்டு அறிஞர்கள் அறிக்கையிட்டுக் கொண்டிருக்கும் வேளையில், இத்தகைய சம்பவங்கள் உலகஅரங்கில் ஈழத்தமிழர் கலாச்சாரப் பண்பை உயர்த்திக் காட்டப் போவதில்லை-*

*திரு. சபாலிங்கம் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கும், 'ஆசியா' நிறுவனத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கும் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம்-*

*'சுபமங்களா'வை பத்தோடு பதினொன்றாக நடத்த நான் விரும்பவில்லை. தாம்பத்திலிருந்து கடற்கரை வரை மின்சார வண்டியில் படித்துக் கொண்டு போவதற்கான சாதனமாக இந்தப் பத்திரிகையை நடத்த விரும்பவில்லை. மக்கள் வாழ்க்கையின் எதார்த்தங்களை எதிர்கொள்ள சக்தியளிக்காமல் கனவுகளில் விடுகிற வெகுஜன ஊடகங்களுக்கு எதிரான தனித்த குரலாக அது செயற்பட வேண்டும் என விரும்புகிறேன்.*

தகவல் : கமலேந்திரன் — கோமல் —

- கி.பி.அரவிந்தன்

## — என் ஆத்மாவும் யாழ்ப்பாணியமும் —

*அடைவாகவும்*
*அடைக்கலமாகவும்*
*மறுக்கின்றது*
*ஆத்மா....*

நிறைவெய்தாத எனது கவிதையொன்றின் தொடக்க வரிகள். எப்படி வளர்ந்து செல்லும் என்பது இன்னமும் எனக்கு புலனாகவில்லை. பல்வேறு உள்நிகழ்தல்களால் தவித்தவண்ணம் உள்ளேன். நூலுருப்பெற்ற 'இனி ஒருவைகறை', 'முகம் கொள்' கவிதைகளும் நூலுருப்பெறவுள்ள பல்வேறு கவிதைகளும்கூட இன்னமும் இப்படியே என்னுள் வளர்கின்றன. முடிவுறாமல் நிகழ்வுறுகின்றன. அவற்றினூடேதான் வெவ்வேறு கவிதைகளும் புதிதுபுதிதாய் கருவுற்று உருப்பெறுகின்றன. மேலே உள்ளதும் அப்படியானவைகளில் ஒன்றுதான்.

எழுதிமுடிந்ததும் படைப்பும்-படைப்பவனும் வெவ்வேறாகி விடுவதாய் பலர்கூறக் கேட்டுள்ளேன். ஆனால் 'நானும்- படைப்பும்' எப்போதும் எனக்குள் வெவ்வேறாகி விடுவதில்லை. எழுதும் போது கவிதையாய் இராதபோதிலும், செப்பனிடுகையில் கவிதையாதல் பற்றி அக்கறை கொள்வதுண்டு. கவித்துவமற்று சொற்கள் மிஞ்சும் போது கவலைகொள்கின்றேன். எப்போதும் என்னையே எழுத்துமொழியில் மறுபதிப்பு செய்தலை கடமையாக கொள்கின்றேன். அது இப்போது தொழிலாகவும் மாறிவிடுகின்றது. அதனால்தான் 'கவிதை' பின்னுக்கு தள்ளப்படுகின்றதோ அறியேன். எழுத்துமொழியில் மறுபதிப்பாகி செப்பனிடப்படாதவைகள் கால இடைவெளியில் என்னுள்ளேயே கிடந்து செப்பமாகி விடுகின்றன. அவை எழுத்தில் என்னவடிவத்தை கொள்ளும் என்பது காலச்சூழலின் கனிவை, தேவையைச் சார்ந்தது. பலவற்றை செப்பனிட்டும், செப்பனிடாமலும் என்னுள் எனக்காய் விட்டுவிட்டேன். பொழுதுகளின் கணங்கள் கனதியாகி, அமுங்கி எழுந்து புரளும் இடையறாத உந்தல்களில் பொத்திவைக்கப்பட்டவையும் கொட்டுண்டு விடுகின்றன. அப்படித்தான் மேலே தொடக்கப்பட்ட கவிதையின் சில சொற்கோர்வைகளும்.

நல்ல ஆத்மா, வல்ல ஆத்மா, முரட்டு ஆத்மா என வழக்காற்றிலும் அழிவுறாதது, நித்தியமானது, மறுபிறப்பெடுப்பது, சட்டையைப் போலவே உடம்பை அணிந்து கழற்றுவது- என தத்துவஞானத்திலும், கட்டுண்ட ஆத்மா, விட்டு விடுதலையான ஆத்மா, வதையுறும் ஆத்மா, திருப்தியுறும் ஆத்மா என இலக்கியமொழியிலும், பலராலும் பல்வேறாகப் பேசப்படும் 'ஆத்மா' பற்றியதாய் இக்கவிதைத்தெறிப்பு மிளிரும் என நான் கருதவில்லை. சினத்தையும், கண்மண்தெரியாவெறியையும், வன்முறையையும், கொலைவெறியையும் தூண்டும் ஆத்மாவை சுட்டுவதாயும் என்னுள் எரிந்தும், என்னையே புசித்தும் பல்முனை உந்தல்களில் என்னை உலுப்பியும் ஆறாநெருப்பாய் குமுறும் ஆத்மாவை பற்றியதாயும் அக்கவிதை செப்பமாகி வளர்தல்கூடும். இந்த நெருப்புக்கு பலமுறை எதிர்வினையாகவும், சிலமுறை இயைந்தும் இயங்கியதனால்- ஆத்மாவை நான் நெறிப்படுத்தியதில் ஓரளவு வெற்றியடைந்தமையால் என்னால் என்னை அறிக்கை செய்யமுடிகின்றது. அடைவுக்கும், சமரசத்திற்கும் உள்ளாக நேரிடும் போதெல்லாம், நிர்ப்பந்தங்களால் அவற்றை என்மீது திணிக்கும் போதெல்லாம், வன்முறையின் உச்சமான கொலை வெறிக்கு உந்தித்தள்ளியது ஆத்மாவின் அவா. மனிதம் மேவ, மனிதவிழுமியங்களைக் காப்பாற்ற இந்த ஆத்ம அவாவை உதறி, உதைத்துத்தள்ளி, சிலிர்த்து, தணித்து, துறத்தலில் ஒரு உள்மனப்போராட்டமே நிகழ்ந்தது எனக்கு. ஆனால் அது இலக்கானதாய் இருக்கவில்லை.

00000 00000

*'பாதை' படத்தில் வருகிற 'ஸயத்' தன் மனைவியைப் பனியில் சாகவிடுகின்றான். இறுதி நேரத்தில் காப்பாற்றவும் ஓடுகின்றான். காப்பாற்றவேண்டும் எனும் உள்விருப்பம் அவனுக்கு இருக்கின்றது. அவன் இறந்தபின்னால் அதற்காக மிகவும் துயரமுறுகின்றான். அவனுக்குள் உறுத்தல் இருக்கிறது. அவனுக்குள் இருக்கும் அந்த 'உறுத்தல்' ஒரு தனிநபராக அவனைச் சீரழிக்கின்றது. அவன் ஆன்மாவை உடைக்கிறது. இதுதான் எனக்கு மிகவும் ஆக்கபூர்வமானது.*

*- யமுனா ராஜேந்திரன் -*

*இல்மஸ் குணே கட்டுரையிலிருந்து....*
*தகவல் : பயஸ்*

கடந்துபோன ஆண்டுகளில் வெவ்வேறு சிறைகளில் அடைபட்டிருந்திருக்கின்றேன். சிறைக்கூடம் எப்போதுமே மனிதர்களை அம்மணமாக்க கூடியது. ஆத்மாக்களின் நிர்வாணங்களை அம்பலப்படுத்தக்கூடியது. ஓரணியினரென சிறைக்குள் வரும் அரசியலாளர்கள் அணிகுலைந்து திரும்புவது வழக்கம். அதேபோல் இறுக்கமான இணைப்புகளையும் ஏற்படுத்திவிடக்கூடியது சிறை.

● 1972 மே 22ல் புதிய அரசியல்யாப்பு வழக்கத்திற்கு வந்தது. அது இலங்கை அரச இயந்திரத்தின் அடிப்படையாயிற்று. இலங்கைதீவு 'குடியரசு' என அறிவிக்கப்பட்டது. இது ஏற்புடையதல்லதென அறிவித்திருந்தனர் தமிழ்பேசும்மக்கள். கொல்வின் ஆர்.டி.சில்வாவின் தலைமையில் இவ்வரசியல் யாப்பு வரையப்பட்டவேளையில் தமிழ்பேசும் மக்கள் சார்பாக பலதிருத்தங்கள், ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால் அவையனைத்தும் நிராகரிக்கப்பட்டன. ஆதலால் மே 22ம் நாள் தமிழ்பேசும் மக்களின் 'துக்கநாள்' என அறிவித்திருந்தது சா.ஜே.வே.செல்வநாயகம், சௌ.தொண்டமான், கா.க.பொன்னம்பலம் ஆகியோர் ஐக்கியப்பட்ட தமிழர் கூட்டுமுன்னணி. துக்கநாளுக்கான ஆயத்தங்கள் மெல்ல மெல்ல தன்னெழுச்சியாக மாறத்தொடங்கியது. மே 18ம் நாள் நான் கைது செய்யப்பட்டேன். பொலிஸ் லொக்கப்பில் அடைக்கப்பட்ட போதுதான் தெரிந்து கொண்டேன் அன்று வேறு இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதை. குடியரசை எதிர்த்து முதலில் கைதான மூவர் நாங்களானோம். 20 ம் திகதி சிறைக்கு அனுப்பப்பட்டோம். யாழ்ப்பாண டச்சுக்கோட்டை, தடித்தகற்சுவர்களுக்குள் காலடி வைத்தேன். எங்களைப்பற்றி பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருந்ததால் உள்ளேபரபரப்பு காணப்பட்டது. அப்போது றோகணவிஜயவீரா எங்களிடம் கேட்டார்- "என்ன மூவர்தான் கைதானீர்களா" வென.

யாழ்ப்பாண சமுதாயம் என்பது இறுகிய அடுக்கமைப்பு (Hierarchial) கொண்ட சமுதாயம். இது நிலமான்ய அமைப்பைச் சேர்ந்த சமுதாயம். குறிப்பாக ஆசிய உற்பத்தி வழிமுறையிலான நிலமான்ய அமைப்பு. அதோடு போர்த்துக்கேய, ஒல்லாந்த (Holland) பிரித்தானிய சாம்ராஜ்ய அனுபவங்களைப் பெற்று தன்னைப் பலப்படுத்திக் கொண்டது. இவற்றின் ஊடாக வந்து, அந்த ஏகாதிபத்தியங்கள் கொண்டுவந்த மாற்றங்களை உள்வாங்கி, தங்களை மாற்றிக் கொள்ளாமல் இருந்த வரலாற்று அனுபவங்கள் உண்டு. ஆங்கில இலக்கியத்தை வரவேற்கும், கிறிஸ்துவத்தை வேண்டாம் என்று சொல்லும். ஆங்கில இலக்கியம் தருகிற ஜனநாயக உரிமைகள், தன்மைகள் பற்றிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாது.

முஸ்லீம்களையும், மலையகத்தவர்களையும் இந்தியர்கள் என்று யாழ்ப்பாணத்தவர் ஒதுக்கியதுண்டு. மட்டக்களப்புக்காரர்கள் என்று அந்த மக்களையும் ஒதுக்கினோம். கிளிநொச்சியார், வன்னியார் என்றெல்லாம் ஒதுக்கப்பட்டது உண்டு. இந்தக் குறுகிய பிரதேசத்திற்குள் சாதி பேசினோம். 1949ல் ஜி.ஜி.பொன்னம்பலம் இந்திய வம்சாவழித் தமிழர்கள் வாக்குரிமை இழப்பதற்கான சட்டத்தை ஆதரித்து ஓட்டுப் போட்டார்கள்.

– கா.சிவத்தம்பி –

தகவல் : பரதன்

சிறைஅதிகாரிகளிடையேயும் ஏளனப்பார்வையே மிகுந்திருந்தது. எப்போதும் அதிகாரத்தை அனுபவிப்பதில், அரசவிசுவாசியாய் இருப்பதில் தமிழர் முன்நிற்பர். என்னிடம் முகவரியை கேட்டான் ஒரு அதிகாரி மிடுக்குடன். நான்கூறி வாய்மூடவில்லை மின்மினிப்பூச் சிதறியது கண்களில். காதுப்பக்கத்தில் விண்ணென்ற ஒரு இரைச்சலுடன் வலி. "உனக்கெல்லாம் யாழ்ப்பாணத்தில் முகவரியாடா?.... தீவாரப்பயலே". தேமதுரத்தமிழ் காதால் நுழைந்து, ஆத்மாவை உசுப்பி, பொருமி வெடிக்காது உறைந்தது என்னுள்.

● 76ல் இரண்டாம்தடவை கைதானவேளை, என்தலையில் 'கனம்' அதிகம்தான். 72க்கும், 76க்கும் இடையில் இடம்பெற்ற அனைத்திலும் என்பெயர் இணைக்கப்பட்டிருந்தது. எனக்கு முன்னால் கைது செய்யப்பட்டவர்கள் என்தலையில் அதிககனத்தை ஏற்றிவிட்டனர். பொதுவாகவே கைதுசெய்யப்படுபவர் இறந்தவர், இல்லாதவர், கைதாகாதவர், தலைகளில் அதிகம் சுமத்திவிடுவது வழக்கம். 'நாலாம்மாடி' - இரகசியபொலிஸ் தலைமையகம் என்னைக்காண அவாப்பட்டிருந்தது. என்னைப் பார்க்க அப்படி மெய்த்தனர் அதிகாரிகள். நான் நிர்வாணமாக நிறுத்தப்பட்டிருந்தேன்.

என்பெயரை உரத்துக்கூவியபடியே வந்து என்னைக் கண்டதும் ஏமாற்றமடைந்து போனான், நான் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை. அவன்தான் எங்களைப் போன்றோரை விசாரிக்கும் சிறப்புப்பிரிவின் பொறுப்பதிகாரி. தான் ஏமாந்து போனதற்காகவே பதினைந்து நிமிடங்கள் கட்டையொன்றால் அர்ச்சனை செய்தான். அவன் கற்பனை பண்ணி இருந்த உருவில் நான் இல்லை. முகத்தில் மயிர்முளைக்காத, கட்டையான, தொளதொளத்த உடம்பான, கன்னங்கரியனை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. 'என்ன சாதியடா நீ?' என்றான். எனக்கும் கொழுப்பு. 'தமிழ்ச் சாதி' என்றேன். 'எளிய சாதிப்பயலுக்கெல்லாம் என்னடா தமிழ்?' என்றவன் சும்மாயிருக்கவில்லை. மூக்குடைந்து இரத்தம் வழிந்தது. இதெல்லாம் என்னவலி.... ஆத்மா இரத்தத்தில் தோய்ந்து, கரைந்து குறுகி, புழுவென சுருண்டு படிந்து போனது. 21 நாட்கள் அவனதும் அவன் குழுவினதும் சீர்வரிசைகளை பெற்று சிறைக்கு திரும்பியபோது நுனிக்காலால் நடக்க வேண்டியிருந்தது. சிறைக்குள் நம்பிக்கையுடன்தான் இருந்தேன். உற்சாகம் குன்றவில்லை. உள்ளேயும், வெளியேயும் குலையாமல் 'அணி' இருந்தது. வெளியே இருந்தோர் நிதித்தேவையை ஈடுசெய்ய வங்கியை சூறையாடினர். எல்லாம் கச்சிதம் தான். ஆனால் நிதிவளத்தை பயன்படுத்துவதில் தில்லுமுல்லுக்கள். வெளிஅணி கூண்டோடு கைதானது. காட்டிக்கொடுப்புகள். நான் தேர்ந்தெடுத்தவர் பலர். நம்பியவர் பலர். தவறு இழைக்கப்பட்டாயிற்று. சிலரின் முகங்களில் முழிக்கவே பிடிக்கவில்லை. அவர்களுடன் சிறையை பகிர்ந்து கொள்ளமனம் மறுத்தது. ஆத்மா கொந்தளித்து குமுறிக்குமைந்தது.

● எனது முகம்கொள் கவிதை நூலை நண்பன் மைக்கலுக்கு சமர்ப்பணம் செய்திருந்தேன். ஆனால் அச்சமர்ப்பணம் சற்று நீளமானது. நூலைப்பதிப்பித்து வெளியிட்ட நண்பர்கள் மிகுதிப்பகுதி வேண்டாமென கருத்து வெளியிட்டனர். எனக்கும் அது கொஞ்சம் அதிகம் போல்பட்டது. நீக்கிவிட்டேன். இப்போது அவையெல்லாம் முந்தி வந்து கொட்டுண்டு விடுகின்றன.

இந்தியாவில் நான் சார்ந்திருந்த நிறுவனத்தின் நிறுவனருக்கும், அவரின் உறவின்முறை அதிகாரிக்கும் எப்போதுமே எனதும், மைக்கலினதும் இருப்பு உறுத்தல்தான். தன்னைப் புரட்சியாளனாகக் கூறும் அந்தநிறுவனர் ஒரு உரையாடலின் போது எங்களின் முகந்தனில் காறித்துப்பினார்- எச்சில்தான். சொற்கள் நாவினால் சுட்ட வடுக்கள். அதனால்தான் அந்த சமர்ப்பணத்தில் "கடல்மடி ஏறி இன்றளவும் திரும்பாத என்னருந்தோழன், ஏலோலோ பாடகன் மைக்கலுக்கும் முன்னொரு போதில் எங்கள் முகந்தனில் காறித்துப்பிய எச்சிலில் ஒழுகிய சாதியத்தடிப்பிற்கும், என் கையாலாகாத்தனத்திற்கும்....." என எழுதவிழைந்தேன். நீக்கப்பட்ட அவ்வரிகள் தற்போது என்னை அறியாமல் கொட்டுண்டுள்ளன. இவை என் ஆத்மாவை நசுக்கிய பல சம்பவங்களில் சில. தமிழ்பேசும் மக்களின் இந்தப் போராட்டகாலகட்டத்தில் ஆத்மவதை பெறாத ஜீவன்கள் இருக்கத்தான் முடியுமா? இவ்வதை அனுபவம் பெற்றவர்களுக்கு பல்வேறு தனித்த பார்வைகளும் இருந்திருக்கலாம். ஆனால்..... என் ஆத்மா வதையுற்றவேளைகளில், சிங்கள பேரினவாதத்தின் கொடூரமுகங்களுக் கப்பாலும் என்முன் அகோரமாக தரிசனம் கொடுத்த 'யாழ்ப்பாணியத்தை' மனந்திறந்து ஒப்புதல் செய்யாமல் விட முடியாது.

## வயல்

*விதைப்புக்கும் காலம் உண்டு*
*விதைத்தால்தான் உயிர் வாழும்*
*காலந்தவறா உழைப்பும் வேண்டும்*
*விதை விளையும் பயிராகும்*
*விளைந்ததைக் களை மூடக்கூடும்*
*களைபிரிக்கத் தெரிய வேண்டும்*
*தயங்காததை அகற்ற வேண்டும்*
*பயிர்கொல்லிகளும் மொய்க்கக்கூடும்*
*கிருமிநாசினி வகை தெரிந்து*
*தெளிப்பானாகவும் வேண்டும்*
*கதிர் முற்றும் பயிர் தேடி*
*காட்டு விலங்கும் புகக்கூடும்*
*பரண் வேண்டும்*
*இருட்டு விழி வேண்டும்*
*பொறி அமைக்கும் மதி வேண்டும்*
*அகப்பட்டதைக்*
*கொல்லும் கலை தெரிய வேண்டும்*
*இத்தனைக்கும்*
*நெஞ்சினிலே ஓர்மம் வேண்டும்*
*அறுவடை உணவாக*
*உன் வயலைக் காத்துவர*
*உயிர் வாழ...*
*உயிர்களிடத்தே அன்பு செய்ய.*

●

கி.பி.அரவிந்தன் (14/01/94-பாரிஸ்)
நன்றி : சக்தி (கனடா)

1985ம் ஆண்டின் நாட்குறிப்பின் இறுதிப்பக்கத்தில் இப்படி எழுதி இருந்தேன். *குரலை உயர்த்து தலைவனாவாய்/ முகமூடியை அணி தியாகியாவாய்/ தனித்து நில்/ உயரமேடையில் ஏறிநில்/ இரத்த உரித்துக்களை பக்கத்தில் நிறுத்திக்கொள்/ வேலிக்கு ஓணான் சாட்சி போல்/ இவை தெரியாது போனால் ஒதுங்கிக்கொள்/ புரிகின்றதா/ கேள்விகளை ஒதுக்கி வை/ ஆண்டபரம்பரைகள் எப்போதும் ஆண்டைகள்/ வேஷங்கள் கோஷங்கள் மட்டிலும் மாற்றம்/ எலும்புத்துண்டை சுவைத்தபடி/ கஞ்சிவார்க்கும் ஆண்டைகள் அவர்களே/ ஏறிநிற்க தோள்மட்டும் கொடு/ பதரையும் மணியையும் ஆய்ந்து பாராதே/ விடுதலைப்புரட்சியில் அதிகாரம் கொள்ளும்/ இன்னொரு கும்பல்/ இதனை உணர்த்தும் 85ம் ஆண்டு/.* இக்குறிப்புகளே பின்னர் 'முகம்கொள்' தொகுப்பில் 'ஆண்டபரம்பரை' கவிதையாய் உருப்பெற்று இடம் பெற்றது.

கவிஞர் காசி ஆனந்தனின் 'கூண்டுக்கிளிநிலை எத்தனை நாள்வரை கூப்பிடு கூப்பிடு தோழர்களை, ஆண்டபரம்பரை மீண்டுமொருமுறை ஆளநினைப்பதில் என்ன குறை...!, என்னும் கவிதைத் தொடரில் பெறப்படும் அர்த்தம் வேறு. 'ஆண்டபரம்பரை மீண்டும் மறுமுறை ஆள நினைப்பதில் என்னகுறை' என்ற தனிதொடரில் பெறப்படும் அர்த்தத் தொனி வேறு. இவை மாறுபடுவது உணரப்படுகின்றதோ தெரியவில்லை. எப்போதும் என்னை இரண்டாவது அர்த்ததொனி உறுத்தவே செய்கின்றது. யாழ்ப்பாணச்சாதிய ஆண்டைகளின் பொற்காலங்களை - அதன் மீட்டெடுப்புகளை குறித்து நிற்கின்ற தேசியப்போராட்டத்தில் 'ஆண்டைகளின்' உற்சாகத்திற்கும், ஊக்கத்திற்கும் இவ்வரிகள் போதையாயின.

இந்த ஆண்டைகளின் - ஆண்டபரம்பரையினரின்-யாழ்ப்பாணத்தாரின் மனோபாவங்களும், இயல்புகளும் மௌன உடைவுகளாகக் கொட்டுண்டு வருகின்றன. இதை உள்வாங்கிச் செரிப்பதில் பலருக்குச் சங்கடமாகவுள்ளது. ஆனால் சமூகவியல் ஆய்வில் நாட்டத்திலுள்ளோரால் இந்த பரிசீலனை நீண்டகாலமாகவே சுட்டப்படுகின்றது.

துயருறும் யாழ்ப்பாணம் தொடர்பான பொதுப்பார்வை வேறு. இந்த ஆண்டைகளின் பார்வை வேறு. யாழ்ப்பா

ணம் விட்டு தப்பிஓடிய அந்தத் துயர்களில் சம்பந்தமே யில்லாத கொழும்பிலும், லண்டனிலும் வாழ்வுபதித்த 'டமில்ஸ்'; 'எரிகின்ற வீட்டில் பிடுங்கியது இலாபம்...' என தற்போதைய சூழலில் அரசியல் நுழைவு கொள்ளும் 'டமில்ஸ்'; தலைமை வெற்றிடம் தோன்றியுள்ளதாய் கற்பித்து ஆங்கிலம் தெரிந்தவரால்தான் அதனை ஈடு செய்யலாம் எனக்கச்சை கட்டிக்கொண்டு கிளம்பிய 'Peoples are short mainded' என தன் சித்தாந்தப் பெரு மிதத்தை வெளிப்படுத்தும் யாழ்ப்பாண உயர்குடி மனோபாவங்களை உடைய 'டமில்ஸ்' - இவர்களையே யாழ்ப்பாணத்தார்- யாழ்ப்பாணி- எனத்தனித்து என் னால் சுட்டப்படுகின்றது.

இன்றைய சூழலில் நெருக்குமுறைகளுக்குள்ளாகியுள்ள இலங்கைத் தமிழ்ப்பேசும் சமூகத்தை பல்முனைகளிலி ருந்தும் அணுகி ஆராய்வதால் பல பரிமாணங்களை அறிய உந்துதலாகும். இதன் ஒருமுயற்சியே என் இத் தொடர்.

"ஏறத்தாழ இந்தச் சமூகம் உருவான காலம் முதல் (16ம் நூற்றாண்டு தொடக்கம் என்று கூறலாம்) இன்று வரை பெரிய அளவுக்கு ஜனப்பெயர்ச்சி ஏற்பட்டது இல்லை. இப்போது தான் அந்தப் பெயர்ச்சி (Demographic Change) ஏற்பட்டிருக்கிறது. இந்தப்பெயர்ச்சிகள் நிச்சயமாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். ஆனாலும் புலம் பெயர் வாழ்க்கையில் கூட, அவர்கள் வாழ்க்கையின் சோகங்களை விளங்கிக் கொள்கிற அதே நேரத்தில், இந்தப் பிரச்சனைகளிலிருந்து ஒதுங்குகின்ற தன்மையும் அவர்கள் வாழ்க்கையில் இருக்கிறது. அங்கே போனவர்களும் அங்கே இன்னொரு யாழ்ப்பாணத்தை மறு உருவாக்கம் செய்கின்றார்கள். இதே அடுக்குமுறை சமுதாயத்தை வெளிநாடுகளில் அந்த நாடுகளுக்கு ஏற்ற முறையில் கட்டப் பார்க்கின்றார்கள்."

*- கா.சிவத்தம்பி -*

1985 **சென்னை**

இலங்கைத் தீவில் இனஒடுக்கல் தீ எரிந்து இந்தியா வில் அனுதாபம் எம்மீது கொட்டிக் கொண்ட காலம். அகதிகள் மற்றும் விடுதலைக்குப் புறப்பட்ட அமைப் பினர் எல்லோருமே தமிழ் நாட்டில் கூடாரம் அமைத் திருந்தனர்.

தமிழ் தகவல் மையம் (TIC) அப்போது மகாலிங்கபுரத் தில் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அவ்வப்போது சந்திப்புகள், கலந்துரையாடல்கள் என்று பல நிகழ்ச் சிகள் நடந்தன....

இப்படியான ஒரு சந்திப்பு நிகழ்வில் சகல அமைப்புப் பிரதிநிதிகளும் பொது ஈடுபாடு கொண்ட பலரும் அழைக்கப்பட்டு இருந்தனர். அன்று விசேட வருகை யீாக லண்டன், அவுஸ்திரேலியாவை தரிப்பிடமாகக் கொண்ட டமில்ஸ் பிரமுகர்கள் பிரசன்னமாகியிருந்த னர்.

அன்று மனம்விட்டு உரையாடிய அவுஸ்திரேலிய டமி லர் ஒருவர் கூற்று இப்படியாக இருந்தது.

"இராணுவ ரீதியாக மோதுவது பெரிய பிரச்னை இல்லை. இன்றைய தேவை பணம். பணம் அந்நியச் செலாவணியாக திரட்டப்பட்டு விட்டால் பாகிஸ்தா னில் பல கூலிப்படையினரை தருவித்து ஸ்ரீலங்கா அரசை ஈடாட்டம் காண வைத்து விடலாம் !"
தங்களை அர்ப்பணித்து இராணுவ ரீதியாக மோதுவ தைத் தவிர வேறு வழியில்லை எனப் புறப்பட்டிருந்த விடுதலை அமைப்பு அங்கத்தவர்களுக்கு அதிர்ச்சியான கருத்தாக இது அசர வைத்ததில் வியப்பில்லை.

இப்போது நினைத்தாலும் இந்த டமில்ஸ் அறிஞர்களின் மீதும் அவர்களது அசாத்தியமான கருத்து வழிகாட்டல் கள் மீதும் வெறுப்பாக இருக்கிறது. ஆனாலும் இவர் களது சிந்தனைகள் ஏன் ? இப்படிச் செல்கின்றன....

புரிய முடியாது என்கிறீர்களா? அவர்கள் யாழ்ப்பாணத் தார் அல்லவா !

**- தகவல் அகில்**






1950 க்கு முன் இந்தியாவைத் தாய்நாடாகவும் இலங்கையைச் சேய்நாடாகவும் ஈழத்தமிழர் கருதிவந்தனர். இந்த உணர்வில் இந்திய நூல்களையும் சஞ்சிகைகளையுமே விரும்பிப் படித்தனர். ஆனால் இவை ஈழத்தமிழரின் வாழ்க்கையை அவர்களின் உணர்வுகளை, அபிலாஷைகளை, சிந்தனைகளை சித்தரிப்பவையாக இருக்கவில்லை.


1954 இல் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நிறுவப்பட்டது. அது நடத்திய இலக்கிய இயக்கத்தினூடாக ஈழத்து எழுத்தாளர் மத்தியிலும் ஈழத்துப் படைப்பிலக்கியம் சம்பந்தமாக விழிப்புணர்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்டது. எனவே ஈழத்தின் படைப்பிலக்கியம் தமிழ் என்னும் பொதுப்பரப்புக்குள் அடங்கும் அதேவேளையில், அதன் தனித்துவத்தைக் காட்டவும், அத்தனித்துவத்தை நமது மக்கள் இனங்கண்டு அதன்மீது தமது இலக்கிய உணர்வை பதியவைக்கவும், நேசிக்கவும், யதார்த்தவாதக் கோட்பாட்டை எளிதில் புரிந்து கொள்ளவும் அதற்குத் 'தேசியம்' எனும் சொற்பிரயோகம் தேவையாக இருந்தது. எனவே இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது முதலாவது மாநாட்டில் முன்வைத்த ஜனநாயக யதார்த்தவாதக் கோட்பாட்டை அடியொற்றி இரண்டரை வருடங்களுக்குப் பிறகு, 1960 இல் "தேசியஇலக்கியத்" தைப் பிரகடனம் செய்தது.

- சுபைர் இளங்கீரன் - 'தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும்' முன்னுரையிலிருந்து....



அத்திபூத்தாப்போல் வடதுருவத்தில்....... கமெரா கவி : தமயந்தி





# PICASSO

